# கீதை காட்டும் பாதை



நாரா நாச்சியப்பன்

# கீதை காட்டும் பாதை



நா.ரா.நாச்சியப்பன்

முதற்பதிப்பு : செப்டம்பர் 1993
இரண்டாம் பதிப்பு : நவம்பர் 1994
© நாரா நாச்சியப்பன்

விலை : ரூ. 20-00

அன்னை நாகம்மை பதிப்பகம்
2/141—இரண்டாவது தெரு, கந்தசாமி நகர்
பாலவாக்கம், சென்னை 600 041

கவின்கலை அச்சகம்
கந்தசாமி நகர்
பாலவாக்கம்
சென்னை 600041
தொலைபேசி 41 71 41

# முன்னுரை

கற்பது பற்றி திருவள்ளுவர் அருமையான கருத்தைக் கூறுகிறார்.

கற்க கசடற
கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

இது திருக்குறள்.

ஒரு நூலைக் கற்கப் புகும் ஒருவன் அதை நன்றாகக் கற்கவேண்டும். கசடு - மனமாசு நீங்கும் அளவு கற்க வேண்டும்.

கற்க கசடற

என்பதன் கருத்து இதுதான்.

சில நூல்களைக் கற்கும் போது கசடு ஏற்படும். அதற்கென்றே நூல் படைக்கும் ஆசிரியர்கள் இருந்தார்கள்; இன்றும் இருக்கிறார்கள்.

எனவே தான் திருவள்ளுவர் கசடு ஏற்படும்படி கற்கக் கூடாதென்றும், கசடு அறும்படி கற்க வேண்டும் என்றும் தெளிவாகக் கூறினார்.

கசடு ஏற்படும் படியான நூல்களை ஒதுக்கி, கசடு அறும் படியான நூல்களைக் கற்கவேண்டும் என்பதற்காக

கற்பவை கற்க என்று தொடர்ந்து கூறினார்.

கற்கத் தக்க நூல்களைக் கற்கவேண்டும் என்றார்.

மனமாசு அகற்றும் சிறந்த நூல்களைக் கற்றபின், நிற்க அதற்குத் தக என்று முடிவாகக் கூறினார்.

தான் கற்றதற்கு அடையாளமாக அந்தச் சிறந்த நூல் காட்டும் வழியில் நடக்க வேண்டும் என்று கூறினார்.

ஒரு சிலர் இது நல்ல நூல்; நீதி நூல்; ஞான நூல் என்று சிலவற்றை அறிமுகப் படுத்துவார்கள். நாம் கற்கத் தொடங்கும் போதுதான், அவை கசடு நிறைந்தவை என்பது புலப்படும்.

அப்போது அந்தக் கசடு எது என்று தெரிந்து அது அறும்படி கண்டு தெளிந்து விலகி நிற்க வேண்டும்.

அப்படிப்பட்ட நூல்களைக் கற்கும் போது

குணம் நாடிக்
குற்றமும் நாடி
மிகை நாடி மிக்க கொளல்

என்ற அறிவுரையின்படி நல்லன கொண்டு அல்லன தள்ளி நல்லவற்றின் வழி மட்டும் நிற்க வேண்டும்.

நிற்க அதற்குத் தக என்ற சொற்றொடர் நல்லதற்குத் தக்கவாறு ஒழுகி நிற்க வேண்டும் அல்லதற்குத் தக்கவாறு விலகி நிற்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது.

மேலும், அந்நூலைக் கற்கச் சொன்னவர்கள். அதை ஆக்கியவர்கள், அதைப் போற்றுபவர்கள் மிகப் பெரியவர்களாகவும், உயர்நிலையில் உள்ளவர்களாகவும், இருந்தாலும் அப்படியப்படியே அதை ஏற்றுக் கொள்ளாமல், அறிவு அனுபவம், நெறிமுறை ஆகியவற்றைப் பயன்படுத்தி அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து அதன் பிறகு தான் அதைப் போற்ற வேண்டும் என்றார்.

எப்பொருள் யார்யார் வாய்க்
கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்ப தறிவு

என்று ஓர் அருமையான குறளையும் வள்ளுவர் வழிகாட்டி யாகத் தந்து நம்மைக் காப்பாற்றி வருகிறார்.

வள்ளுவர் செய்திருக்குறளை
மறுவற நன்குணர்ந்தவர்கள்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி?

பேராசிரியர் சுந்தரனாரின் இந்தக் கருத்துரையை எடுத்துக் காட்டுவது பொருத்தமாகும்.

ஒரு குலத்துக்கொரு நீதி சொல்லும் நூல் மனுநீதி மட்டும் அல்ல; இன்னும் பல உள்ளன என்று கூறுவது போல மனுவாதி என்ற சொல்லை இங்கே சுந்தரனார் பயன்படுத்து கிறார்.

கீதை என்ற நூலை நான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளு கிறேன்.

இந்நூலைச் சமயத்துறையில் உள்ள பல பெரிய மனிதர்கள், போற்றுகிறார்கள்; பாராட்டுகிறார்கள். இவ்வுலக வாழ்விற்கும், மறு உலக வாழ்விற்கும் சிறந்த வழிகாட்டி என்று விளம்பரப் படுத்துகிறார்கள், கீதையை வழங்கியவர் மகா விஷ்ணுவாகிய கண்ண பெருமானே என்று போற்றப்படுகிறது. இப்படிப்பட்ட பல பெரிய புள்ளிகளால் போற்றப்படுகிற கீதையை நான் விரும்பிக் கற்கத் தொடங்கிய போது எனக்குச் சில கருத்துகள் தோன்றின.

கீதை வாழ்வுக்கு உறுதி பயக்கும் நூல் தானா? என்ற கேள்வி எழுந்தது.

அதற்கு விடை காண்பதற்காக நூல் முழுவதையும் அமைதியாகப் படிக்க முற்பட்டேன்.

சாதாரண மக்களுக்கு எளிதாக விளங்காத ஒரு கருத்து. பக்தர்களுக்கும் ஞானிகளுக்கும் ஏற்படாத ஒரு கருத்து எனக்குப் புலப்பட்டது.

ஒருமைப்பாடு என்றும், ஆன்மநேய ஒருமைப்பாடு என்றும், உலக ஒற்றுமை என்றும் உயர்ந்த உன்னதமாக இலட்சியங்களை அடைய முயன்று கொண்டிருக்கும் இந்த நாளிலே கீதை இதற்குத் துணை புரிகிறதா என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

அந்த கேள்விக்கு விடை காணும் முயற்சியில் இந்த நூலை ஆய்வு செய்திருக்கிறேன்.

என் ஆய்வு எந்த அளவு பயன் தந்திருக்கிறது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

இனி நீங்கள் நூலைப் படிக்கத் தொடங்கலாம்.

நாரா நாச்சியப்பன்

# இந்த நூலில்

சுலோகங்கள், மகாகவி பாரதியார் தமிழ் மொழி பெயர்ப்பு நூலில் உள்ளபடி எடுத்தாளப் பட்டுள்ளன. பாரதியாரின் மொழி பெயர்ப்பு மற்றவர்களின் மொழி பெயர்ப்பைக் காட்டிலும் எளிமையாகவும், கவிதையுணர்வுடனும் நல்ல தமிழில் அமைந்துள்ளது; சோர்வு தட்டாத நடையில் அமைந்துள்ளதால் தொடர்ந்து படிப் பதற்குத் துணைபுரிகின்றது.

மூலத்தின் கருத்தை மாற்றாமல் உள்ளது உள்ள படி மொழிபெயர்த்திருப்பது பாரதியாரிடம் காணப் படும் மற்றும் ஒரு சிறப்பாகும்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1 | பாரதப் போரின் அடிப்படை | 9 |
| 2 | பார்த்தனிடம் பூத்த நல்லெண்ணம் | 27 |
| 3 | தொழிலைச் செய்! பலனை எதிர்பார்க்காதே! | 40 |
| 4 | செத்து மடிவதே சிறப்பு | 59 |
| 5 | நான்கு வருணங்கள் ஒரு பயங்கர ஏற்பாடு | 66 |
| 6 | ஏழு குழப்பங்கள் | 74 |
| 7 | நானே உயர்ந்தவன் | 84 |
| 8 | கண்ணன் பேருருவம் | 91 |
| 9 | பிரிவுகளும் பாவங்களும் | 98 |
| 10 | கீதை காட்டும் கடவுட்கொள்கை | 103 |
| 11 | கீதை காட்டும் பாதை | 121 |
| 12 | கண்ணன் விரித்த வலை | 141 |

சேலம்

கே. ஆர். ஜி. நாகப்பன்—இராசம்மாள்

அறக்கட்டளையின் 1994ஆம் ஆண்டு

**பகுத்தறிவு நூலுக்கான முதற்பரிசினை**

**கீதை காட்டும் பாதை**

பெற்றுள்ளது.

இந்நூலினை முதற்பரிசுக் குரியதாகத்
தேர்ந்தெடுத்த இலக்கியக் குழுவினர்:

*புரவலர்* :

**அறப்பணிச் செம்மல் கே. ஆர். ஜி. நாகப்பன்**

*தலைவர்* :

**கவிஞர் எழுஞாயிறு**

*குழு உறுப்பினர்கள்* :

**கவிஞர் தமிழ் நாடன்**

**கவிஞர் ஆ. நாகராசன்**

**கவிஞர் எஸ். பால்பாண்டியன்**

**பேராசிரியர் எம். எம். மணி**

**புலவர் கோ. வேள் நம்பி**

பரிசு நல்கிச் சிறப்பித்த இலக்கியக்
குழுவினர்க்கு உளம் நிறைந்த நன்றி

**நாரா நாச்சியப்பன்**

# அறிஞர்கள் பாராட்டு

## திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை ஆசிரியர் வீரமணி

அண்மையில் வெளிவந்துள்ள சில நல்ல நூல்களில் இது ஒன்று. கீதையின் குழப்பங்களை மிகத் தெளிவாக விளக்குகிறது. விறுவிறுப்பான நடை. படிக்கத் தொடங்கியதும் புத்தகம் முழுவதும் படித்து முடித்த பிறகு தான் கீழே வைக்கத் தோன்றியது.

## தென்மொழி ஆசிரியர் பாவலர் பெருஞ்சித்திரனார்

கீதையில் உள்ள கசடுகளையும், கரவுகளையும், ஆரியச் சூழ்ச்சிகளையும் வெளிப்படுத்துகின்ற நூலாகும் இது.

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வி. ஐ. சுப்பிரமணியம்

நேர்மையான சீர் தூக்கு. அதில் புதைந்துள்ள பல கருத்துக்களைத் தெளிவாக, முரண்பாடு எவை எவை என்று நன்கு விளக்கியுள்ளீர்கள். நடையும் தெளிவாக இருக்கிறது. இந்த நூலை இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ வெளியிட முயல்க.

## பாவேந்தர் பாரதிதாசன் மகன், கலைமாமணி மன்னர் மன்னன்

துணிவான முயற்சி. யாரும் இதுவரை தொடவும் நினையாத துறையில் இறங்கி வெற்றி பெற்றுள்ளீர்கள்.

தமிழர்களின் தூக்கம் கலைய வேண்டும்.

## தொலைக் காட்சியில் பாடம் நடத்தும் டாக்டர் மா. நன்னன்

*நல்ல இனிய எளிய நடையும் தூய பொருள் பொதிந்த சொல்லாட்சியும் கொண்டுள்ள தங்கள் நூல், கீதையில் உள்ள முரண் குழப்பம் ஆகிய இரண்டையும் துலக்கி நிறுவியுள்ளது. அதில் உள்ளவை வெற்றுப் பேச்சு, வெட்டி வேதாந்தம் என்பதையும் மிக அருமையாக நிலை நாட்டப்பட்டுள்ளது.*

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

*ஆன்மிகவாதமே எதிரியை மடக்கத்தான் பயன்படுகிறது. வேறு வகையில் உப்புக்குக் கூடப் பயன்படுவதில்லை. (பக். 61) இதைப் படித்து நினைத்து நினைத்துச் சிரித்தேன்— மிக நல்லபகுதி.*

*திருக்குறளுக்கு முன்பு கீதை நிற்க முடியாது என்பதில் ஐயமில்லை.*

## சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் பீடத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை

*''கீதை காட்டும் பாதை'' என்னும் உங்கள் நூல் பகுத்தறிவுக் கண் கொண்டு நோக்கிய நோக்கு. இதுவரை யாரும் கூறாத—கூறத் துணியாத உண்மைகளை உலகுக்கு வெளிச்சப்படுத்தியுள்ளது.*

## பெரியார் பெருந்தொண்டர் தி. வே. சுந்தரமூர்த்தி

*அதர்மத்தைக் காத்து அதை நிலை நாட்டி அதன் மூலம் தங்கள் மேலாதிக்கத்தை எக்காலத்திலும் தக்க வைத்துக் கொள்வது தான் பகவத் கீதையின் நோக்கம்.*

## வெல்லும் தூயதமிழ் சிறப்பாசிரியர் க. தமிழமல்லன்

*மானவுணர்வும் மறவுணர்ச்சியும் சிறிதும் குன்றாமல் சுவையாகவும் சூடாகவும் இந்நூலை ஆக்கியுள்ளார். அவரின் கருத்துக்களை எவராலும் மறுக்க இயலாவண்ணம் தம் ஆற்றலை நிலைநாட்டியுள்ளார்.*

## தினமலர் 9-2-94 மதிப்புரை

*கீதை கூறும் கருத்துக்களின் உள்நோக்கம் என்ன என்ற நோக்கில் ஆராய்ச்சி நூலாக வெளியிட்டுள்ளார் நூலாசிரியர். பகவத் கீதை முரண்பாடுள்ள கருத்துக்கள் கொண்டுள்ளதாக ஆசிரியர் பல மேற்கோள்கள் காட்டியுள்ளார்.*

# 1

# பாரதப் போரின் அடிப்படை

மகா பாரதப் போர் தொடங்க இருக்கிறது. அந்தச் சமயத்திலே அர்ச்சுனன் போரிடத் தயங்குகிறான்.

கண்ணன் அவன் தயக்கத்தை நீக்க தன் திறமையால் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அர்ச்சுனனைப் போரிட வைக்கிறான்.

அப்படி அவன் எடுத்துக் கூறிய கருத்துக்களே **பகவத் கீதை** என்ற பெயரிலே நூலாகியுள்ளது.

இந்தப் பகவத் கீதை மிகுந்த கருத்துச் செறிவுள்ள நூலாகப் பலரால் எடுத்துரைக்கப்படுகிறது.

மகாபாரத இதிகாசத்திலேயே மிகச் சத்தான பகுதி பகவத்கீதை தான் என்று பேசப்படுகிறது.

அதே சமயம் மகாபாரத மூலத்தில் பகவத்கீதை கிடையாதென்றும், இடைச் செருகல் என்றும் கூறப்படுகிறது.

காந்தியடிகள் இக்கீதையை மிக மிகப் போற்றி னார். இன்னும் சமயவாதிகள், ஆன்மிகவாதிகள் என்று கூறப்படுகின்ற பெரிய மனிதர்கள் பலர் இதைப் பாராட்டி உரைத்திருக்கிறார்கள்.

பகவத் கீதை வேத சாரம் என்று கூறுகிறவர் களும் உண்டு. இதை உபநிடதங்களின் சாரம் என்றும், கீதோபநிஷத் என்றும் போற்றுகிறார்கள்.

ஆனால் 108 உபநிடதங்களின் பட்டியலில் இது காணப்படவில்லை. மிகப் பிற்காலத்தில் தோன்றிய தால் அல்லது இடைச் செருகலாய் இருப்பதால் பட்டியலில் இடம் பெறவில்லை போலும்.

கீதை மனிதர்களுக்குக் 'கண்ணன் காட்டிய வழி என்று பாராட்டப்படுகிறது.

எட்டு அயல் மொழிகளிலும் இருபத்து நான்கு இந்திய மொழிகளிலும் இது மொழி பெயர்க்கப்பட் டுள்ளது.

முந்நூறுக்கு மேற்பட்ட விளக்க நூல்கள் வெளி வந்துள்ளன.

ஆங்கிலத்தில் அன்னிபெசன்ட் அம்மையார் மொழி பெயர்த்திருக்கிறார்கள். வேறு பலர் மொழி பெயர்த்திருக்கிறார்கள். தமிழில் பாரதியார் மொழி பெயர்த்திருக்கிறார்.

மூதறிஞர் இராஜாஜியும், தன்னுடைய கருத்துரைகளோடு மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறார்.

சுவாமி சித்பவானந்த அவர்களும் அரிய விளக்கங்களோடு மொழி பெயர்த்திருக்கிறார்.

இவ்வளவு சிறப்பாகப் பேசப்படுகின்ற இந்த கீதையை— அதன் கருத்துக்களை— அவை எந்த அளவு நமக்கு வாழ்க்கைத் துணையாக உள்ளன என்பதை நாம் இப்போது ஆராயப் போகிறோம்.

பகவத் கீதையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னாலே பாரதப் போர் ஏன் ஏற்பட்டது என்பதை நாம் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது நல்லது.

இதற்கு நாம் பாரதக் கதையை ஓரளவு தெரிந்திருக்க வேண்டும்.

பாரதக் கதையின் சுருக்கம் இதுதான்:

பரதன் என்ற அரசன் ஆண்டதால் இந்த நாடு பாரதம் என்றும், இந்த நாட்டை ஆண்டவர் பரத குலத்தவர் என்றும் பெயர் பெற்றனர்.

பரதன் பரம்பரையில் குரு என்று ஓர் அரசன் வந்ததால், அவனுக்குப் பின் இந்த அரச குலம் குருகுலம் என்றும் அழைக்கப்பட்டது.

இந்தக் குருகுலத்தில் பிறந்த சந்தனு என்ற அரசன், பீஷ்மன் என்ற மகனைப் பெற்றிருந்தான்.

ஒருநாள் சந்தனு மன்னன் கங்கைக் கரையின் ஓரமாகச் செல்லும் போது, மீனவர்கள் குடியிருப்பி லிருந்த பகுதியிலிருந்து நாற்றம் வந்தது. அந்தத் திசையில் திரும்பினான்.

அங்கே அழகே வடிவான மீனவப் பெண் ஒருத்தி யைப் பார்த்து விட்டான்.

பார்த்த உடனே அவளை அடைய வேண்டும் என்று எண்ணினான்.

அரசன் அல்லவா, சற்றும் தாமதிக்காமல், உடனே சென்று மீனவப் பெண்ணின் தந்தையிடம் அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள விரும்பும் ஆசையை வெளியிட்டான்.

மீனவன் உலக நடப்புப் புரிந்தவன். அரசர் களின் போக்கும் தெரிந்தவன். மிக எச்சரிக்கையுடன் பேசினான்.

மன்னவன் நீ என் மகளைப் பார்த்து ஆசைப் பட்டதும் தவறில்லை. அவளை மனைவியாக்கிக் கொள்ள விரும்பியதும் தவறில்லை.

ஆனால் என் மகள் ஒரு நாட்டு மன்னனின் *வெறும் போகப் பொருளாக இருக்க நான் ஒப்ப* மாட்டேன்.

அவள் பட்டத்து ராணி என்ற உரிமையுள்ளவ ளாக இருக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, அவள் வயிற்றுப் பிள்ளைகளே இந்தப் பாரத நாட்டை ஆள வேண்டும்.

என் பேரர்களுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தர நீ ஒப்புக் கொண்டால், இன்றே இப்பொழுதே என் மகளை உன்னுடன் அனுப்பத் தயார் என்றான். மீனவன் போட்டபோட்டில் மன்னவன் அசந்து போனான்.

அவ்வளவு அழகான பெண்ணை, மனத்துக்கு இனிய கருவாட்டு நாற்றம் வீசுகின்ற உடலைப் பெற்ற **'மச்சகந்தி'** என்ற அந்தப் பெண்ணை அடைய முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் அரண்மனை சென்றான்.

ஏக்கம் தூக்கத்தைக் கெடுத்தது. துயரம் உயிரை வாட்டியது. உடல் சோர்ந்தது; முகம் கவிழ்ந்தது. ஆக்கமான செயல்களில் ஊக்கமாக ஈடுபட முடிய வில்லை.

பட்டம் சூட்டிக் கொள்ளத்தக்க வளர்ந்த இளை ஞனாக ஒரு மகன் இருப்பது அவன் மனத்தை வாட்டிக் கொண்டிருந்தது.

தந்தையின் வாட்டத்தைக் கவனித்தான் தனயன். தந்தை காரணம் சொல்லவில்லை; கூடச் சென்றவர்கள் மூலம் அறிந்தான். நேரே மீனவனிடம் சென்றான்.

உன் மகள் வயிற்றுப் பிள்ளைகளுக்கே பட்டம் சூட்டும் உரிமை கொடுக்கிறேன். எனக்குப் பட்டம்

வேண்டாம். என் தந்தையின் மகிழ்ச்சியே முக்கியம் என்றான்.

நீ நல்லவன். விட்டுக் கொடுத்துவிடுவாய். உன் மக்கள் என் பேரர்களோடு சண்டைக்கு வந்து ஆட்சியைப் பறித்துக் கொள்வார்களே என்று தன் அச்சத்தைக் கூறினான் செம்படவன்.

அந்த அச்சமும் உனக்கு வேண்டாம். நான் திருமணமே செய்து கொள்ளவில்லை என்றான்.

தன் தந்தையின் சிற்றின்ப வேட்கையைத் தீர்த்து வைக்க -தன் வாழ்வையே பணயம் வைத்துச் சபதம் செய்த போது, அதைப் பாராட்டித் தேவர்கள் வானிலிருந்தே பூமாரி பொழிந்தார்களாம்.

இந்தச் சபதம் பீஷ்ம சபதம் என்று போற்றப் பட்டதாம்.

மீனவன் மனநிறைவோடு தன் மகளை அனுப்பி வைத்தான். பீஷ்மன் கடைசிவரை திருமணமே செய்து கொள்ளவில்லை.

சந்தனு மன்னனுக்கும் மச்சகந்திக்கும் இரண்டு மகன்கள் பிறந்தனர்.

அவர்களில் ஒருவன் பகைவனால் இறந்தான். மற்றொருவன் சந்ததியில்லாமலே இறந்தான்.

மீனவன் கனவு அவன் பேரர்களோடு முடிந்து விட்டது.

அரச வம்சம் சந்ததியில்லாமல் போகலாமா? மீனவப் பெண்ணாயிருந்து அரசியான மச்சகந்தி சந்ததி வளர வழி செய்தாள்.

பீஷ்மரை அழைத்து, தம்பியின் மனைவிகள் இரண்டு பேருக்கும் பிள்ளைவரம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டாள். அதாவது அவர்களைப் புணரும்படி கேட்டுக் கொண்டாள்.

உங்கள் தந்தைக்குக் கொடுத்த வாக்கை நான் ஒளிவு மறைவாகக்கூட மீற மாட்டேன் என்று உறுதி யாகக் கூறிவிட்டார் பீஷ்மர்.

மச்சகந்தி முயற்சியை விடவில்லை. சந்தனுவை மணப்பதற்கு முன்னால், வேறொருவர் மூலம் தனக்குப் பிறந்து காட்டில் திரிந்து கொண்டிருந்த தன் மகன் வியாசனை அழைத்து, தன் மருமகள் களுக்குப் பிள்ளைவரம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறாள்.

அவ்வாறே வியாசன் சம்மதித்து இரண்டு பெண் களையும் சேருகிறான்.

மூத்தவள் காட்டு முனியான வியாசன் தன்னைப் புணரும் போது பயந்து கண்ணை மூடிக் கொள் கிறாள். அதனால் அவளுக்குப் பிறக்கும் மகன் குருடனாகப் பிறக்கிறான்.

குழந்தைப் பேறு மருத்துவர்கள் ஆராய வேண்டிய செய்தி இது!

இரண்டாவது மருமகளும் வியாசன் சேரும் போது அச்சத்தோடு இருக்கிறாள். அதனால் அவளுக்குப் பிறக்கிறவன் நோயாளியாகப் பிறக்கிறான்.

சந்தனு சந்ததியில்லாமல் நரகத்தில் விழுவானே என்பதைத் தடுப்பதற்காக - அந்த இரண்டு மருமகள்களும் - கட்டாயமாக ஒரு காட்டு முனிவனால் கற்பழிக்கப்பட்டபோது அடைந்த வேதனையை - அச்சத்தை - மருட்சியை நினைத்துப் பார்த்தாலும் நெஞ்சு வேகிறது.

இரண்டு பிள்ளைகளும் சொட்டையாய்ப் போகவே, மறுபடியும் மச்சகந்தி வியாசனை அழைத்து இரண்டாவது மருமகளை மறுபடி புணர்ந்து ஒரு ஒழுங்கான பிள்ளையைக் கொடுக்கும் படி கேட்கிறாள்.

வியாசன் வருகிற போது, அவனைக் கண்டு (அருவருப்பினால்) அச்சம் கொண்ட இரண்டாவது மருமகள் தன் வேலைக்காரியை அனுப்புகிறாள்.

வேலைக்காரி வியாசனோடு கூடி மகிழ்கிறாள். அவளுக்குக் குறையற்ற பிள்ளை பிறக்கிறது.

வியாசனுக்கு முதல் மருமகள் மூலம் பிறந்த பிள்ளைதான் குருடனான திருதராட்டிரன்.

வியாசனுக்கு இரண்டாவது மருமகள் மூலம் பிறந்த பிள்ளைதான் நோயாளியான பாண்டு.

வியாசனுக்கு வேலைக்காரியின் மூலம் பிறந்த பிள்ளைதான் விதுரன்.

குருட்டுப் பிள்ளை அரசனாகக் கூடாது என்று திருதராட்டிரன் ஒதுக்கப் படுகிறான்.

விதுரன் குறைவற்ற பிள்ளையாய்ப் பிறந்தும், வேலைக்காரி மகனாக இருந்ததால் ஆட்சி செய்யத் தகுதியில்லாதவனாகிறான்.

நோயாளியாகப் பிறந்த பாண்டுவே ஆளத் தகுதியுடையவனாகின்றான்.

சாத்திரங்கள் - அரசவையில் செல்வாக்குப் பெற்றவர்கள் - முனிவர்கள் - இவர்கள் ஏற்பாடு செய்த நியாயங்கள் - பாண்டுவுக்கே ஆட்சியைப் பெற்றுத் தருகின்றன.

பாண்டுவுக்கு அவன் மனைவி குந்தியும் மாத்ரியும் வேறு யாராரோ தேவர்களுடன் கூடிப் பெற்ற பிள்ளைகள் பாண்டவர்கள் என்று பெயர் பெறுகிறார்கள்.

ஆரிய சாத்திரங்கள் விசித்திரமானவை. நான் காவது சாதியைச் சேர்ந்த மச்சகந்திக்கு தன்னை மணந்த சந்தனுவின் மூலம் பிறக்காத - யாரோ ஒருவரால் தனக்குப் பிறந்து காட்டில் திரிந்து கொண்டிருந்த வியாசன் என்ற மகனுக்கும்,—சந்தனுவுக்கும் தனக்கும் பிறந்த மகன்களின் மனைவிமார்களுக்கும் பிறந்த புத்திரர்களிலே - மூத்தவன் திருதராஷ்டிரன் குருடன் என்பதால் விலக்கப் படுகிறான்.

மூன்றாமவன் விதுரன், அரண்மனைத் தாதி மகன் என்பதால் ஒதுக்கப் படுகிறான்.

நோயாளியான பாண்டுவே பட்டத்துக்குத் தகுதியுடையவனாக ஏற்கப் படுகிறான்.

அவன் மனைவி குந்தி - நோயாளியான கணவன் தன்னைக் கூடினால் இறந்து விடுவான் என்று தெரிந்து - அவளும் இன்னொரு மனைவி மாத்திரியும் அவன் அனுமதியுடன் வேறு சிலரைக் கூடி ஐந்து புதல்வர்களைப் பெறுகிறார்கள்.

அந்த வேறு சிலர் தேவர்களாம்!

இதைப் பாரதீய சாத்திரம் சம்பிரதாயம் ஒப்புக் கொள்கிறது.

பெண்ணுடன் கூடினால் இறப்பு வரும் என்று தெரிந்திருந்தும் பாண்டு அரண்மனைத் தாதி ஒருத்தியுடன் கூடி இறந்து போகிறான்.

பாண்டு இறந்து போனபின் பாண்டுவின் மக்கள் - அவர்களில் மூத்தவன் தருமன் (யுதிஷ்டிரன்) பட்டம் ஏற்கிறான்.

அப்போது துரியோதனன் - திருதராட்டிரனின் மகன் ஆளும் உரிமை தனதே என்று வாதிடுகிறான்.

குருடாக இல்லாதிருந்தால், தன் தந்தை திருதராட்டிரன் தான் ஆட்சிக்கு வந்திருப்பார் என்றும், அவருக்குப் பிறகு முறைப்படி ஆட்சி

தன்னைச் சேர வேண்டிய தென்றும் அவன் முறை யிடுகிறான்.

தன் தந்தைக்குப் பதிலாகவே பாண்டு ஆட்சி செய்தான் என்றும், தான் ஆட்சிப் பொறுப்பிற்கு வரக் கூடிய தகுதி வந்து விட்டதாலும், தான் குருடு இல்லை என்பதாலும், பாண்டு இறந்தபின் முறை யாகத் தான்தான் அரசாள உரியவன் என்றும் அவன் செய்த வாதங்கள், அன்றைய அரசியல் மேதைகளா லும் குலப் பெரியவர்களாலும் ஏற்றுக் கொள்ளப் பெறவில்லை.

சாத்திரங்களும், சட்டங்களும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கே வளைந்து கொடுக்கும். அதி காரத்தை இழந்தவர்களுக்கு அது எட்டுவதில்லை.

தருமனுக்கே பட்டம் சூட்டப் படுகிறது. அவன் ஆட்சி செய்யத் தொடங்குகிறான்.

துரியோதனன் போர் செய்தேனும் ஆட்சியைக் கைப்பற்றத் துடிக்கிறான். சாத்திரம் என்ற பெயரால் தனக்குரிய அரசாட்சி கை நழுவிப் போனதை அவனால் பொறுக்க முடியவில்லை.

அவன் மாமன் சகுனி அவனுக்குச் சூழ்ச்சி வழி ஒன்று காட்டுகிறான்.

போர் செய்து வீழ்த்துவது கடினம். போரின்றி, வெட்டும் இன்றிக், குத்தும் இன்றி ஆட்சியைக் கைப் பற்றச் சூதாடலாம் என்று கருத்துரைக்கிறான்.

தருமன் சூது ஆடுவதில் மோகம் உள்ளவன்; சகுனியோ அந்தக் கலையில் வல்லவன்.

தருமன் சூதாட வருகிறான். தோற்கிறான். நாடு மிக எளிதாகத் துரியோதனன் கைக்கு வருகிறது.

துரியோதனனின் நியாய வாதங்களை ஏற்றுக் கொள்ளாத பெரிய மனிதர்கள் சூதினால் அவன் வெற்றி பெற்றதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

சூதின் வெற்றிக்கு எல்லாரும் கட்டுப்பட்டவர் களாக இருக்கிறார்கள். அறநூலைக் காட்டிலும் சூதுக்கு அதிக மதிப்பு இருந்திருக்கிறது.

தோற்றவர்களும் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு வெளியேறுகிறார்கள்.

பதின்மூன்று ஆண்டுகள் காட்டிலே தலைமறை வாகத் திரிந்தபின் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும்படி கேட்கிறார்கள்.

துரியோதனன் மறுக்கிறான். எனவே அவர்கள் போருக்கு அணியப் ஆகிறார்கள். போர்செய்து நாட்டைக் கைப்பற்ற முடிவெடுக்கிறார்கள்.

குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களும் குறுநில மன்னர்களும் அதிகாரிகளும் இரு அணிகளாய்ப் பிரிகிறார்கள்.

போர் தொடங்கியது.

அதன் தொடக்கத்தில் தான் அர்ச்சுனன் களத்திலே இருபுறமும் நிற்பவர்களைப் பார்க்கிறான். எல்லாரும் உறவினர்கள். உறவினர்கள் வீண் அரசியல் பகையால் செத்தொழிய வேண்டுமா?

ஒருவரை யொருவர் வெட்டிச் சாய்த்துக் கொண்டு மாண்டு மடிய வேண்டுமா? பகை எண்ணம் கொண்ட துரியோதனனே ஆளட்டும். இதற்காக இருதரப்பிலும் பலர் மாண்டு மடிய வேண்டாம்.

இப்படி ஒரு நல்ல எண்ணம். மனிதாபிமானம் - ஆன்ம நேயம் அவனுக்கு உண்டாகிறது.

அந்தக் காலத்தில் இதயத்தில் பூத்த நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு போரைத் தவிர்த்திருக்கலாம். விட்டுக் கொடுப்பதன் மூலம் இரத்தக்களரி ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம். ஆனால், இந்த நல்ல எண்ணத்தை மாற்றுகிறான் கண்ணன்.

அர்ச்சுனன் எண்ணத்தை மாற்றி அவனைப் போருக்கு ஆயத்தப் படுத்துகிறான். இதற்காக அவன் கையாண்ட கருத்துரைதான் பகவத் கீதை என்று வழங்கப் படுகிறது.

பகவத் கீதையை ஆராயும் போது கீழ்க்கண்ட மூன்று கருத்துக்களை, நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அர்ச்சுனனைப் போருக்கு அணியப்படுத்த கண்ணன் கையாண்ட வேதாந்தக் கருத்துக்கள்.

அடுத்து கீதையில் அடிக்கடி கூறப்படும் ஆன்மிக வாதம்.

இறுதியாக, கண்ணன் தன்னைக் கடவுளாக அல்லது பிரம்மமாக வெளிப்படுத்திக் கொள்ளுதல்.

இக் கருத்துக்களிடையே மாந்தர் வாழ்வுக் கென்று காட்டப்படும் வழிமுறைகள் அல்லது நெறி முறைகள்.

இவற்றைப் பற்றி ஆராயும் போது, பொதுவாக கீதை பற்றி வழங்கப்படும் கருத்துக்கள் எந்த அளவு சரியானவை என்று கணிக்கலாம்.

பகவானே சொல்லி விட்டான். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் அதை ஆராயாமல் ஏற்றுக் கொள்ள வேண்டுமா?

மேலும், விளம்பரமான பெரிய மனிதர்கள் எல்லாரும் ஒன்றைப் போற்றிப் பேசுகிறார்கள் என்பதால் அது உயர்ந்த வழிகாட்டி ஆகிவிடுமா?

நியாயம் என்பது எல்லாருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் தான் பகவான் சொன்ன தாகக் கூறப்படும் பகவத் கீதையை நாம் ஆராயப் போகிறோம்.

இதிலே அறிவுப் பார்வை (ஞான திருஷ்டி) வேண்டும். அது பகுத்தறிவுப் பார்வையாக இருப்பது தவறாகாது.

திருதராட்டிரனுக்குக் கண் தெரியாது - பிறவிக் குருடன்.

போர்க்களத்தில் நடப்பவைகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள விழைகிறான்.

இதற்காக சஞ்சயன் என்ற அமைச்சனைத் தன் அருகிலே இருந்து அவ்வப்போது போர்க்களச் செய்திகளை தனக்குச் சொல்லும்படி ஏற்பாடு செய் தான். வியாசர் சஞ்சயனுக்கு தொலைவில் நடப் பதை அறியும் ஞான திருஷ்டியை வழங்குகிறார்.

அரண்மனைக்குள்ளே நான்கு புறமும் சுவர்கள் உள்ள மண்டபத்துக்குள்ளே கண்ணுள்ள சஞ்சயனும் கண்ணில்லாத திருதராட்டிரனும்அமர்ந்துள்ளார்கள்.

போர்க்களத்திலிருந்து தூதர்கள் மாறி மாறி வந்து செய்தி சொல்லவில்லை. ஏனென்றால், சஞ்சயன் ஞான திருஷ்டி பெற்றவன். அதாவது உலகில் எங்கு எது நடந்தாலும் நேருக்கு நேர் பார்ப்பது போல் அவனுக்குத் தெரியும்.

அந்த ஞான திருஷ்டியில் போர்க்களத்தில் நடப்பவைகளைக் கண்டு திருதராட்டிரனுக்கு தெரிவித்துக் கொண்டு வருகிறான்.

காண்பது மட்டுமல்ல; அங்கு ஏற்படும் ஒலிகளும் பேச்சுக்களும் கூட ஞான திருஷ்டியிலே காதில் கேட்கும்.

எனவே சஞ்சயன் அர்ச்சுனனும் கண்ணனும் பேசிக் கொண்டவைகளைத் திருதராட்டிரனுக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

திருதராட்டிரன் கேட்கக் கேட்க, கேட்ட கேள்விகளுக்கு, நேரே பார்த்தது போல், கேட்டது போல் சஞ்சயன் கூறி வருகிறான்.

இந்த ஞான திருஷ்டியை ஏற்றுக் கொண்ட பிறகு தான் நாம் பகவத் கீதையை அறியமுடியும்.

கண்ணில்லாதவனுக்கு கண்ணுள்ளவன் கண் காணாத இடத்திலே நடந்ததைக் கண்ணுக்கு நேரே பார்த்ததாகச் சொல்வதை நாம் கண்ணை மூடிக் கொண்டு நம்ப வேண்டும். நாம் **அறிவுப் பார்வையை** மூடிவிட்டு **ஞான திருஷ்டியை** நம்பினால் தான் பகவத் கீதையை அறிய முடியும்.

ஞானம் என்றால் அறிவு. திருஷ்டி என்றால் பார்வை. ஞான திருஷ்டி என்றால் அறிவுப் பார்வை, அதாவது எதையும் ஆராய்ந்து பார்க்கும் பார்வை. இதுதான் உண்மையான பொருள். ஆனால் பகவத்

கீதையில் கூறப்படும் ஞான திருஷ்டி என்பது தொலை தூரத்தில் நடப்பதைக் காணக் கூடிய தூரப் பார்வை என்றாகிறது.

இதை வைத்துக் கொண்டு பழமை வாதிகள், அந்தக் காலத்திலேயே வியாசமுனிவர் டெலிவிஷனைக் கண்டு பிடித்துவிட்டார். டெலிவிஷன் மூலமாகத் தான் சஞ்சயன் போர்க்களக் காட்சிகளைப் பார்த்தான். நம் பழங்கால சாத்திரங்களைத் திருடிக் கொண்டு போய்ப் பார்த்துத் தான் வெள்ளைக்காரன் டீவியைச் செய்யக் கற்றுக் கொண்டான் என்று சொல்லத் தயங்கமாட்டார்கள்.

விஞ்ஞானம் எதையும் பாரத ஞானமாகப் பார்க்கும் நாட்டுப் பற்றின் விளைவு என்று இதைக் கருதலாம்.

ஆனால் அந்த வியாச பகவான் கண் இல்லாத திருதராட்டிரனுக்கே இந்தத் தொலை நோக்கியைக் கொடுத்திருக்கலாம்.

சஞ்சயன் என்ற அமைச்சனுக்கு அருள் பாலித்த வியாசர் தன் மகனுக்கு, தன்னாலேயே குருடனாகப் பிறந்துவிட்ட திருதராட்டிரனுக்கு அருள் புரிய மனமில்லாமல் போனது ஏனோ? தெரியவில்லை.

ஞான திருஷ்டி என்ற சொல்லைக் கொச்சைப் படுத்தி - அறிவு நோக்குஎன்று இருக்க வேண்டிய

பொருளை மாற்றி, தூரத்துப் பார்வை என்ற பொருத்தமற்ற பொருளைக் கூறிக் கீதை காட்டப் படுகிறது.

பகவத் கீதை பதினெட்டு அத்தியாயங்களை யுடையது. முதல் அத்தியாயம் அர்ச்சுனன் துயரத்தை விளக்குகிறது. மற்ற அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் ஒரு யோகத்தை விளக்குகிறது.

துயர யோகம் என்று பெயரிட்டு, இதையும் சேர்த்துப் பதினெட்டு யோகங்களைக் குறிப்பிடு வதும் உண்டு.

பாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. பகவத் கீதையும் பதினெட்டு அத்தியாயங்களை உடையதாய் இருக்கிறது. இது தானாக அமைந்த பொருத்தமா! இல்லை கருதி யமைக்கப் பட்டதா என்பது தெரியவில்லை.

இனி நாம் கீதை காட்டும் பாதையை ஆய்வு செய்யலாம்.

# 2

# பார்த்தனிடம் பூத்த நல்லெண்ணம்

பகவத் கீதையின் தலைப்பு ஒவ்வொன்றும் யோகம் என்று அழைக்கப் படுகின்றது.

யோகம் என்ற சொல் பொது வழக்கில் அதிர்ஷ்டம் என்ற பொருளில் வழங்கப்படுகிறது.

உடற்பயிற்சிக்கும் யோகம் என்று வழங்குவதுண்டு.

துறவிகளை யோகி என்று அழைக்கும் வழக்கமும் இருப்பதைப் பார்க்கிறோம்.

சைவ சமயத்தில் இறை வழிபாடு நான்கு நிலைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது.

சரியை கிரியை யோகம் ஞானம் என்று இவை வழங்கப் படுகின்றன.

சரியை என்பது பூசை செய்தல், பூசைக்கு வேண்டிய பணிகளைச் செய்தல் என்றும்

கிரியை என்பது இறை யுணர்வோடு திருப்பணிகளைச் செய்தல் என்றும்

யோகம் என்பது தியானத்தில் இருந்து மனத்தை இறைவனோடு கூட்டி ஒன்றாய் இருத்தல் என்றும்

ஞானம் என்பது இறைநிலை தெளிந்து பழக்க வழக்கங்களுக்குச் சிறப்புக் கொடாது பொது நிலையில் இருத்தல் என்றும் பொருள்படும்.

இமயம், நியமம், இருப்பு, உயர்நிலை, மன ஒழுக்கம், தாரணை, தியானம், சமாதி என்று யோக நிலை எட்டு என்றும் கூறுவர்.

பகவத் கீதையில் யோகம் என்று குறிப்பிடுவது இந்த நிலைகளை விளக்குவதாகக் காணப்பட வில்லை.

பகவத் கீதை இதே கருத்துக்களைத் தான் பேசுகிறது என்றாலும் யோகம் என்ற சொல் அதற்குரிய பொருளோடு பேசப்படவில்லை.

சாங்கிய யோகம், கர்ம யோகம், ஞான யோகம், சந்நியாச யோகம் என்று பல யோகங்கள் பேசப்படு கின்றன.

யோகம் என்ற சொல் இங்கே ஏதோ பெரிய புதுமையான - அரிதான செய்திகளைச் சொல்லப் பயன்படுகிறது என்ற மயக்கத்தை ஏற்படுத்தி னாலும் சந்நியாசத்தைப் பற்றிச் சொல்லப்படுவது சந்நியாச யோகம் என்றும், பக்தியைப் பற்றிச் சொல்லப் படுவது பக்தி யோகம் என்றும், கூறப்படு

கிறதே தவிர, யோகம் என்ற சொல்லுக்குச் சிறப் பான தனியான ஒரு பொருள் காணப் படவில்லை.

இப்படிப் பார்க்கும் போது சந்நியாசம், பக்தி, ஞானம் போன்றவைகளே யோகம் என்ற பொதுப் பெயரில் கூறப்படுகின்றன என அறியலாம்.

கீதையின் முதல் அத்தியாயம் அர்ச்சுனனின் துயர யோகம் எனப்படுகிறது. துயரம் கூட யோகம் என்ற அளவிற்கு யோகம் என்ற சொல் இங்கே பொருளற்றுப் போகிறது.

கீதை கையாளும் யோகம் என்ற சொல்லின் பொருளை இப்போது தெரிந்தாயிற்று.

இனி நாம் அர்ச்சுனன் துயரம் என்ற முதல் யோகத்தில் - அத்தியாயத்தில் - என்ன சொல்லப் படுகிறது என்று பார்க்கலாம்.

இந்தப் பகுதியில் 47 சுலோகங்கள் அல்லது செய்யுள்கள் உள்ளன.

முதல் 10 சுலோகங்கள் படை அணி வகுப்பை விளக்குகின்றன.

12 முதல் 19 வரை உள்ளவை வீரர்கள் சங்க நாதம் செய்ததை விவரிக்கின்றன.

20வது சுலோகம் அம்புகள் பறந்து போர் தொடங்கி விட்டதை அறிவிக்கிறது. 21 முதல் 27 வது சுலோகம் வரை அர்ச்சுனன் தேரில் இருபடை

களுக்கும் நடுவில் சென்று பார்வை யிடுவதை விவரிக்கின்றன.

28 முதல் 47 வரை அர்ச்சுனன் தயக்கம் அடைவது பேசப்படுகிறது.

ஒரு செய்தியைச் சொல்லும் போது, நாம் என்ன சொல்கிறோமோ, அது கேட்பவனுக்குத் தெளிவாகப் புரியும்படி சொல்ல வேண்டும். இதுவா அதுவா என்று குழம்பும்படி சொல்லக் கூடாது.

சாதாரணச் செய்தியைச் சொல்லுவதற்கே இது முறை என்றால், பகவத் கீதையைச் சொல்லுகிற வியாச பகவான் எப்படிச் சொல்ல வேண்டும்.

இதோ பகவத் கீதையில் பத்தாவது சுலோகம் வியாச பகவான் அருளியது.

தொடங்கப் போகும் போர் பற்றிய செய்தி.

துரியோதனன் துரோணரிடம் சொன்னதாக இந்த சுலோகம் அமைந்துள்ளது.

போர்க்கள நிலவரம் பற்றி அறிந்து கொள்ளத் துடிக்கும் திருதராட்டிர மாமன்னருக்கு சஞ்சயன் என்ற அமைச்சன் இதை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

இந்தப் பத்தாவது சுலோகத்தைப் பாரதியார் நமக்கு மொழி பெயர்த்துத் தருகிறார்.

*பீஷ்மனால் காக்கப்படும் தமது படை (கண்ணுக்கு) நிறைந்திருக்கவில்லை. பீமனால் காக்கப்படும் அவர்களுடைய படையே நிறைந்திருக்கிறது.*

**—சுலோகம் 10**

இதே சுலோகத்தை மூதறிஞர் ராஜாஜி கீழ்க்கண்டவாறு மொழி பெயர்த்திருக்கிறார்.

*நம்முடைய சேனை பீஷ்மரால் பேணிக் காக்கப்பட்டு அளவு கடந்து நிற்பது உண்மையே. ஆனால் பீமன் தலைமை வகிக்கும் அந்தச் சேனையும் போதிய பலம் பெற்றுத்தான் இருக்கிறது.*

இதே சுலோகம் கீதா பிரஸ் வெளியீட்டில் கீழ்க் கண்டவாறு மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

This army of ours, fully protected by Bhisma, is unconquerable; while that army of theirs, guarded in every way by Bhima, is easy to conquer.

இதையே அன்னி பெசன்ட் அம்மையார் இவ்வாறு மொழி பெயர்க்கிறார்.

Yet insufficient seems this army of ours, though marshalled by Bhishma, while that army of theirs seems *sufficient, though marshalled by* Bhima.

துரியோதனனுடைய படை மிகுதியாகவும் *பாண்டவர் படை குறைவாகவும் உள்ளதாக ஒரு* சிலரும், துரியோதனன் படை குறைவாகவும் பாண்டவர் படை மிகுதியாகவும் இருப்பதாக வேறு சிலரும் மொழி பெயர்த்திருக்கிறார்கள்,

சுலோகம் ஒன்றுதான். அதன் செய்தி இரு மாதிரியாகவும் பொருள் படுகிறது.

நாம் மட்டும் குழம்பிப் போகவில்லை. இந்த சுலோகத்திலுள்ள சொற்களைக் கேட்ட கண்ணற்ற திருதராட்டிரன் எவ்வளவு குழம்பிப் போயிருப்பான்.

இந்தக் குழப்பத்திற்கு என்ன காரணம்.

முக்காலமும் அறிந்தவராகக் கருதப்படும் வியாச முனிவர், இந்தச் செய்யுளில் கையாண்டிருக்கும் ஒரு வட சொல் தான் இப்படி ஏறுக்கு மாறான பொருளைத் தருகிறது.

'அபரியாப்தம்' என்ற அந்தச் சொல் குறைவானது என்ற பொருளையும் தரக்கூடியதாம்; அளவற்றது என்றும் பொருள்படுமாம். அன்னி பெசன்ட் அம்மையார் இதை விளக்கிச் சொல்லுகிறார்.

இது வட மொழியின் குற்றமா, இதைக் கையாண்ட வியாச முனியின் குற்றமா, மொழி பெயர்த்த அறிஞர்களின் குற்றமா?

யார் குற்றமானாலும், எது சரியென்று யாராலும் தீர்மானிக்க முடியாததாக இருக்கிறது.

12 முதல் 16வது சுலோகம் வரை போர் தொடங்குவதற்கு அறிகுறியாக இரு தரப்புத் தளபதிகளும் சங்க முழக்கம் செய்கிறார்கள். 20வது சுலோகத்தில் போர் தொடங்கி விட்டதற்கு அடையாளமாக அம்புகள் பறக்கத் தொடங்கி விட்டன.

அந்த நேரத்தில் அர்ச்சுனன் தன் தேரை இரண்டு படைகளுக்கும் நடுவே கொண்டு போய் நிறுத்தச் சொல்லுகிறான்.

இரு புறத்திலிருந்தும் பறந்துவரும் அம்புகளுக் கிடையே போவதென்பது சற்றும் பொருத்தமாக இல்லை.

சுலோக வைப்பு முறையில் இது ஒரு குறைபாடு.

சஞ்சயன் என்பவன் துரியோதனனுடைய அமைச்சர்களிலே ஒருவன். திருதராஷ்டிரனுக்குப் போர்க்களச் செய்திகளைச் சொல்லுவதற்காக அமர்த்தப்பட்டவன். அவன் திருதராஷ்டிரனிடம் மதிப்பும் மரியாதையும் உடையவனாக இருப்பான் என்று எதிர்பார்ப்பது இயல்பு.

ஆனால், அவன், திருதராஷ்டிரனிடம் செய்தி களைக் கூறும் போது, தான் பாண்டவர்களின் கை யாள் என்று கருதும்படி பேசுகிறான்.

துரியோதனாதியரை, அவன் தந்தையிடமே இழிவு படுத்திப் பேசுகிறான்.

19வது சுலோகத்தில் பாண்டவர்களின் சங்க நாதம் திருதராஷ்டிரன் கூட்டத்தாரின் நெஞ்சு களைப் பிளந்தது என்று திருதராஷ்டிரனிடமே கூறு கிறான்.

20வது சுலோகத்தில் திருதராஷ்டிரன் கும்பலை நோக்கி வில்லை ஏந்திக் கொண்டு அர்ச்சுனன் சென்றான் என்கிறான்.

இப்படிப்பட்ட வஞ்சகன் கூறும் செய்திகளைத் திருதராஷ்டிரன் கேட்டுக் கொண்டிருந்தான் என்பது விந்தையே!

அடுத்துவரும் சுலோகங்கள் தாம் கீதை பிறப்ப தற்குக் காரணமானவை. அவற்றில் அர்ச்சுனன் மனமாற்றம் விளக்கப் படுகிறது.

அதுவரை பழியுணர்வோடு, துரியோதனாதி யரை வெறுத்து ஒழித்துவிட வேண்டும் என்ற வெறி யோடு இருந்த பார்த்தன், எதிரே நிற்கும் இரு படை வீரர்களையும் பார்த்தவுடன், அவன் நெஞ்சுக்குள்ளே உள்ள மனித நேயம் வெளிப்படப் பேசுகிறான்.

உறவினர்கள் வெறும் பூமிக்காக ஒருவரை யொருவர் வெட்டிச் சாய்த்துக் கொள்ள வேண்டுமா என்று நல்லெண்ணம் கொள்ளுகிறான்.

அந்த நேரத்திலே, அர்ச்சுனன் உண்மையான மாந்த நேயம் உள்ளவனாகப் பரிமளிக்கிறான்.

இரண்டு வரிசையிலும் நிற்பவர்கள் ஒருவருக் கொருவர் உறவினர்கள்.

தந்தை முறை யுள்ளவர்கள், பாட்டன் முறை யுள்ளவர்கள், ஆசிரியர்கள்!

இப்படிப்பட்ட மக்கள் ஒருவரை யொருவர் வெட்டிக் கொன்று புவியை இரத்தக் களரியாக்க வேண்டுமா என்று அவனுடைய நன்மனம் சிந்திக்கிறது.

*கண்ணா, போர் செய்ய வேண்டி இங்கு திரண்டு நிற்கும் என் சுற்றத்தார்களைக் கண்டு, என் அவயவங்கள் சோர்கின்றன. என் வாய் உலர்கிறது. என் உடம்பு நடுங்குகிறது. உயிர் சிலிர்க்கிறது! காண்டீபம் (வில்) கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் எரிச்சல் உண்டாகிறது. கைகால் நிற்க முடியவில்லை. என் மனம் சுழலுகிறது.*

**—சுலோகம் 28, 29 30.**

*குருக்களும், தந்தையரும், மக்களும், பாட்டன்மாரும், மாதவரும், மாமன்னரும், பேரரும், மைத்துனரும், சம்பந்திகளும் இங்குள்ளனர். நான் கொல்லப் பட்டாலும் இவர்களைக் கொல்ல விரும்பவில்லை.*

**— சுலோகம் 34, 35.**

அந்தச் சிந்தனைகளை வியாச முனிவர் தம் கவிகளில் அழகாகவே எடுத்துக் காட்டுகிறார்.

அடுத்து அர்ச்சுனன் தொடர்ந்து பேசும்பேபது, மிக உயர்ந்த பண்பு வெளிப்படப் பேசுகிறான். திருதராஷ்டிரன் பிள்ளைகள் மிக மோசமானவர்களாக இருந்தாலும் - பாதகர்களாக இருந்தாலும் - உறவினர்கள் - உறவினர்களை யெல்லாம் கொன்று விட்டு நாங்கள் சுகபோகமாக வாழ்வதில் என்ன பயன் இருக்கிறது என்று கூறுகிறான்.

அடுத்து போரின் விளைவுகளை மிக நன்றாக உணர்ந்து தெளிவோடு பேசுகிறான்.

உலக மகா கொடியவனான செங்கிஸ்கான் படையே யானாலும் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்த முகமது லோடி கஜினி முகமது போன்ற வெறிப் படையே யானாலும், அன்னிய நாட்டின் மீது படை யெடுத்துச் செல்லும் எந்தப் படையும் போர்ப் படை என்ற பெயரிலே மற்றொரு நாட்டுக்குள்ளே போன வுடனே அவர்கள் செய்வது கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற கொடுமை களே என்பதை வரலாறு ஒவ்வொரு முறையும் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

மிகப் பழங்காலத்திலும் இந்தக் கொடுமை வழக் கத்தில் இருந்திருக்கிறது என்பதை அர்ச்சுனன் வாக்கிலிருந்து அறிகிறோம்.

போரினால் குல நாசம் ஏற்படும் என்றும், குல நாசத்தால் குல தர்மங்கள் அழியும் என்றும், தர்மம் அழிவதனால் குலப் பெண்கள் கெட்டுப் போகிறார் கள் என்றும், குலமாதர் கெடுவதனால் வர்ணக் குழப்பம் உண்டாகிறதென்றும் அர்ச்சுனன் 39,40, 41 சுலோகங்களில் தெளிவாகக் குறிப்பிடுகிறான்.

போர் வீரர்கள் பகைவனின் ஊருக்குள் புகுந்து பெண்களைக் கற்பழிக்கப் போகும் போது சாதி வேற்றுமை பார்த்துக் கற்பழிப்பதில்லை.

அகப்பட்ட பெண்களை, அகப்பட்ட நேரத்தில் அலங்கோலமாக்கிக் கதறக் கதற கற்பழித்து விட்டுப் போய்விடுவார்கள்.

அந்தக் கற்பழிப்பிலே கர்ப்பம் அடையும் பெண்களுக்குப் பிறந்த பிள்ளைகள், எந்த வருணத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட முடியாது, மக்களால் வெறுத்து ஒதுக்கப் படுவார்கள்.

இதனைத்தான் அர்ச்சுனன் வருணக் குழப்பம் என்று தெளிவாகக் குறிப்பிடுகிறான்.

இங்கே நாம் அறிய வேண்டியது அர்ச்சுனனே வருணக் குழப்பத்தில் பிறந்தவன் தான். அர்ச்சுனன் பாரம்பரியத்தை அறிந்தால் அவன் எந்த வருணத்தைச் சேர்ந்தவன் என்று கூற முடியாது.

ஆனால், அர்ச்சுனன் பிறப்பு அதிகார வர்க்கத்தில் ஏற்பட்ட - தெரிந்தே செய்யப்பட்ட வினையினால் தோன்றியது. ஆனால் போர்க் களத்தில் நிகழும் கற்பழிப்புகள், மேலாதிக்கச் சமூகத்தை மட்டுமின்றிப் பொது மக்களையும் பாதிக்கும் கேடாகும்.

இதை நன்றாக உணர்ந்து தெளிவாகப் பேசுகிறான் பார்த்தனாகிய அர்ச்சுனன்.

மேலும் பாவம் நரகம் பற்றியெல்லாம் எடுத்துக் கூறிப் போர் செய்ய மறுத்துக் காண்டீபத்தைக் கீழே போட்டுவிட்டுத் தேர்த் தட்டிலே உட்கார்ந்து விடுகிறான்.

கலிங்கப் போர் முடிந்தபிறகு போரின் விளைவுகளைக் கண்டு அசோகர் மனம் திருந்தினார்.

அவரை - மனம்திருந்திய பிறகு - மீண்டும் தீய வழிகளில் செல்லாத வண்ணம் புத்தசங்கம் நெறிப்படுத்தியது.

அர்சசுனன் போருக்கு முன்னாலேயே மனந் திருந்தினான். ஆனால், அவன் திருந்திய வாழ்வில் தொடராத வண்ணம் போர் வெறிப் பாதையிலேயே மீண்டும் நடக்கும் வண்ணம் செய்யப் பயன்பட்டது கீதை.

கண்ணன் காட்டிய வழி போர் வழி. அதற்கு அவன் கையாண்ட கருவி தான் பகவத் கீதை.

கண்ணன் வழங்கிய கருத்துரைகள் அடுத்த அத்தியாயங்களில் வரிசையாக வருகின்றன.

சீனா தேசத்து ஞானி ஒருவன் சொன்னான். நீர் தெளிவாக உள்ள குட்டையை ஒரு கலக்குக் கலக்கிவிட்டால், நேரம் ஆக ஆக அது தெளிந்து விடும். தெளிவு ஏற்பட ஒரு குழப்பம் தேவை என்றான். தெளிவாக இருப்பதை ஏன் வெட்டியாகக் கலக்க வேண்டும் என்ற கேள்வியை அந்த ஞானி சிந்திக்க வில்லை.

இங்கே தெளிவாக உள்ள அர்ச்சுனனைக் கீதை சொல்லிக் கண்ணன் குழப்புகிறான். மறுபடியும் அர்ச்சுனன் தெளிந்தானா என்றால் தெளியவே இல்லை.

கண்ணன் காட்டிய வழியைப் பின்பற்றிப் போருக்குக் கிளம்பினான். போரின் முடிவில், குழப்பமும் அழிவும் ஏற்பட்டனவே தவிர, யாரும் அதிலிருந்து மீளவில்லை.

போர் முடிவில் வெற்றி பெற்றவர்களும் விரக்தி மனப்பான்மையே பெற்றிருந்தார்கள் என்றே பாரதக் கதை கூறுகிறது. இதுதான் கண்ணன் காட்டிய வழி! மேலும் ஆராய்ந்து பார்க்கலாம்.

# 3

# தொழிலைச் செய்
# பலனை எதிர்பார்க்காதே!

அர்ச்சுனன் மூட நம்பிக்கை உள்ளவனாகக் காணப்படுகிறான். நரகம், சுவர்க்கம் இவற்றில் நம்பிக்கை வைத்திருக்கிறான்.

பாவிகள் என்று தெரிந்து, அவர்களைக் கொன்றாலும் கூடப் பாவம் ஏற்படும் என்றும், கொலைப் பாவம் செய்தவன் நரகம் அடைவான் என்றும் தன் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறான்.

ஒரு குலத்தை அழித்தவர்களுக்கு நரகம் நிச்சயம் என்று அவன் நம்புகிறான்.

போரினால், குலநாசம் ஏற்படுவதோடு, குறிப்பிட்ட வருணத்தில் சேர்க்கப்பட முடியாத சந்ததி தோன்றுவதால் அவர்கள் பிதிர்க்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்யாமல் இருந்து விடுகிறார்கள்.

தம்முடைய குலம் தெரியாதவர்கள் எந்தப் பிதிர்க்களுக்குப் பிண்டம் கொடுப்பார்கள்?

சந்ததியினர் பிண்டமும் நீரும் கொடுத்தால் தான், பிதிர்க்கள் நலமாக இருப்பார்கள் என்ற பரம் பரை மூட நம்பிக்கை அர்ச்சுனனைப் பற்றி யுள்ளது.

போரினால் ஏற்படும் கேடுகளில் இதை முக்கிய மாகப் பேசுகிறான் அர்ச்சுனன், இந்தப் பாவத் திற்குத் தான் ஆளாகக் கூடாதென்பதைத் தெளிவா கவே கூறுகிறான்.

எல்லாவற்றிற்கும் மேலாக - தன் தாத்தாவான பீஷ்மரையும் - தன் ஆசாரியரான துரோணரையும் - எதிர்த்துப் போரிடவும் - கொல்லவும் அர்ச்சுனன் பெரிதும் கூசுகிறான் - தயங்குகிறான்.

எல்லாப் பிள்ளைகளையும் போல் தன்னையும், எடுத்து வளர்த்தவர் பீஷ்மர். சத்தியத்தின் உருவ மாக உள்ளவர்.

துரோணரோ தனக்கு வில்வித்தை கற்பித்த குரு.

எத்தனையோ பேருக்குக் குருவாய் இருந்த போதிலும் தன்னிடம் தனி அன்பு செலுத்தி வந்தவர். தன்னுடைய போர்த் திறமையே அவர் இட்ட பிச்சை.

அப்படிப்பட்ட இரண்டு பேரும் எதிர் அணியில் நிற்கிறார்கள். அவர்களால் தான் கொல்லப் பட் டால் அது பெருமை என்றும், தன்னால் அவர்கள் கொல்லப்படுவது பெரும் பாவம் என்றும் அர்ச்சுனன் நினைக்கிறான்.

பாவ புண்ணியங்களில் நம்பிக்கையும் மோட்ச நரகங்கள் பற்றிய கருத்தும் பிடித்துக் கொண்டிருக்கும் - மூட நம்பிக்கையுள்ள அர்ச்சுனனைக் குழப்புவது கிருஷ்ணனுக்கு எளிதாக இருக்கிறது.

கொல்லுவது பாவம் என்று கூறும் அர்ச்சுனனை —கொல்லாமல் இருப்பது பாவம் என்று கூறிப் புதுப் பாவம் ஒன்றை உருவாக்குகிறான் கிருஷ்ணன். இதற்கு வேதாந்தம் - ஆத்ம வாதம் பேசுகிறான்.

மனிதன் அழிந்தாலும், மனிதனுடைய ஆத்மா அழிவதில்லை என்றும், ஆத்மாவுக்கு அழிவில்லாததால், யாரும் உண்மையாகக் கொல்லப்படுவதில்லை என்றும் வேதாந்தம் பேசுகிறான் கிருஷ்ணன்.

போரிலே ஒருவனைக் கொன்றால் அவன் உடல் தான் வீழ்கிறதே தவிர அவன் ஆத்மா அழிவதில்லை என்று ஆத்ம வாதம் பேசுகிறான். ஆகையினால் போர் செய்; எழுந்திரு என்று தட்டி எழுப்புகிறான்.

*ஆத்மா நிலைத்தவன்; அழிவற்றவன், அளவிட இயலாதவன்; எனினும் அவனுடைய வடிவங்கள் மட்டுமே முடிவுடையன; ஆகையால் பாரதா போர் செய்!*

**—பகவத் கீதை சாங்கிய யோகம் 2 : 18**

*ஆத்மா பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. இது பிறவாதது; இறவாதது; தேயாதது; வளராதது; உடல் கொல்லப் படும்போது ஆத்மா கொல்லப் படுவதில்லை.*

**—2 : 20**

பழுதுபட்ட துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதிய துணிகளை அணிந்து கொள்வது போல், ஆத்மா பழைய உடல்களை விட்டு விட்டு புதிய உடல்களை அடைகிறது.

—2 : 22

பாரதா எல்லார் உடம்பிலும் உள்ள இந்த ஆத்மா கொல்ல முடியாதவன் ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டாம்.

—2 : 30

மனிதனுக்கு ஆத்மா என்ற ஒன்று இருப்பதாகவும் - அது அழிவில்லாதது என்றும் - ஆகவே கொல்வது பாவம் இல்லை என்றும் கிருஷ்ணன் கூறுகிறான். கொல்லுவதை நியாயப் படுத்துவதற்காக இந்த வேதாந்தக் கருத்தைக் கூறுகிறான்.

வேதாந்தம் என்ற சொல்லுக்கும் வேதம் என்ற சொல்லுக்கும் பொருள் தொடர்பு கிடையாது; மேல் போக்காகப் பார்த்தால் வேதத்தின் சாரம் வேதாந்தம் என்று தோன்றும்.

ஆனால் வேத நூலில் - குறிப்பாக ரிக் வேதத்தில் இந்த நிலையாமைக் கருத்துக் காணப்படவில்லை.

ஆத்ம வாதமே ரிக் வேதத்தில் இல்லை; இந்த ஆத்மவாதம் வேதத்திற்குப் பிற்பட்ட நூல்களில் தான் காணப்படுகிறது.

கிருஷ்ணன் பேசும் இந்தக் கீதைக் கருத்துக்கள் முழுக்கவே வேதாந்தம் ஆகின்றன. வேதாந்தத்

தைச் சாதாரண மக்கள் குறிப்பிடும் போது வெட்டி வேதாந்தம் என்று குறிப்பிடுவார்கள்.

இந்த வெட்டி வேதாந்தம் பேசியே கிருஷ்ணன் அர்ச்சுனனைத் தன் வழிக்குக் கொண்டு வருகிறான்.

ஆத்மா என்பது என்ன? இதிலும் வேதாந்தம் பேசுபவர்களுக்கிடையே சரியான கருத்தில்லை.

ஆத்மா என்று குறிப்பிடும் போது சாதாரணமாக உயிர் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

உயிர் என்பது நிலையானதா? வேதாந்திகள் அது நிலையானது என்று கூறுகிறார்கள். அது ஓர் உடலை விட்டு மற்றோர் உடலுக்குள் புகுந்து கொள்கிறது என்கிறார்கள். உடல்கள் அதற்குச் சட்டை போன்றது என்கிறார்கள்.

ஓர் உயிர் ஓர் உடலை விட்டு மற்றோர் உடலில் புகுந்து கொள்ளும் தன்மை யுள்ளது என்றால், அது நினைத்த போது ஒன்றை விட்டு ஒன்றுக்குள் புகுந்து கொள்ளலாமே!

அப்படிப் புகுந்து கொள்ளும் ஆற்றலை வைத்துத் தான் கூடுவிட்டுக் கூடு பாயும் நிலையைக் கற்பனை செய்தார்கள்.

திருமூலர் என்பவர், தன் உடலை விட்டு, இறந்து போன மூலன் என்ற மாடு மேய்ப்பவன் உடலில் புகுந்து கொண்டதாகக் கூறும் கதைக்கு இந்த வேதாந்தக் கருத்துத்தான் அடி மூலம் ஆகும்.

வேதாந்தத்திற்கு முற்றிலும் மாறுபாடான சித்தாந்தக் கருத்துக்களை வகுத்துக் கொடுத்தவர் திருமூலர்.

பொதுவான கருத்து, மனிதன் இறந்துபோகும் போது, பிரியும் உயிர் புதிதாகப் பிறக்கும் ஒரு குழந்தையின் உடலில் புகுந்து கொள்வதாகவே கூறப்படுகிறது.

இந்த அடிப்படையில் நாம் பார்த்தால், உலகில் உள்ள உயிர்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையே இருப்பதாகவும், அவை மாறி மாறி ஒன்று இறக்க மற்றொன்றில் புகுந்து நிலை கொள்வதாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதில் நரகம் சொர்க்கம் ஆகியவற்றில் புகுந்து விட்ட உயிர்கள் மீண்டும் பிறக்காவிட்டால், உலகில் உயிர்களின் தொகை குறைந்து வர வேண்டும்.

நடைமுறையில் பார்த்தால், உலகத்தில் இறப்பு வீதத்தை விடப் பிறப்பு வீதம் அதிகப்பட்டுக் கொண்டு வருவதை அறியலாம்.

மனிதன் முதல் ஈ எறும்பு வரை ஈ எறும்பு முதல் பாக்டீரியாக்கள் வரை உற்று நோக்கினோமேயானால், பிறப்புத் தொகை பெருகி வருவதோடு நிற்கவில்லை. பெருகிப் பெருகி விரைவு விரைவாக வளருவதைக் காணலாம்.

இந்தக் கருத்தில் காணும் போது இறந்த உடலில் இருந்து பிரிந்த ஆத்மா இன்னோர் உயிருக்குள் புகுந்து கொள்கிறது என்றால், ஒன்று பத்தாகப் பெருகும் போதும், பத்து நூறாகப் பெருகும் போதும், பிறக்கும் உயிர்களுக்குள் வந்து புகுந்த ஆத்மாக்கள் எங்கிருந்து வந்தன என்று சொல்ல முடியுமா?

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் முப்பது கோடியாக இருந்த பாரத நாட்டின் மக்கள் தொகை இன்று நூறு கோடியாகி யிருக்கிறது.

ஒவ்வொரு இந்தியப் பெண்ணும் சராசரியாக தன் ஆயுளுக்குள் ஆறு புதிய ஆத்மாக்களை உருவாக்கி விட்டுத் தான் சாகிறாள்.

ஒவ்வொரு பசுவும் தான் வாழும் வரை ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு கன்றுகளைத் தந்து விட்டுப் போகிறது.

ஒவ்வொரு நாயும் ஒவ்வொரு ஆண்டும் ஆறு குட்டிகளைப் புது வரவாக்கி விடுகிறது.

ஒவ்வொரு எறும்பும் தான் சாவதற்குள் நூறு நூறு எறும்புகளைப் படைத்து விடுகிறது.

ஒவ்வொரு பாக்டீரியாவும், இலட்ச லட்சம் பாக்டீரியாக்களைச் சில மணி நேரங்களுக்குள் பெருக்கி விடுகிறது.

ஒவ்வொரு மரம், செடி, கொடிகளும் நூற்றுக் கணக்கான விதைகளை உற்பத்தி செய்கின்றன.

இதை யெல்லாம் பார்க்கும் போது, ஆத்மா நிலயானது என்பதோ அது புது உடலில் புகுந்து கொள்கிறது என்பதோ அர்த்தமற்ற கருத்தாகவே யிருக்கிறது.

உயிர்கள் பன்முகப் பெருக்கம் உடையனவாக விளங்குகின்றன என்பதை அறிகிறோம்.

உடலுக்கும் உயிருக்கும் தொடர்பு இல்லை என்ற கீதைக் கருத்து; உயிரை அழிக்க முடியாது என்ற கருத்து சரியானதல்ல என்பது புரியும். உடல் அழியும் போதே உயிரும் அழிந்து விடுகிறது என்பது தான் உண்மை.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர் என்பது திருமூலர் திருமந்திரம்.

உயிர் அல்லது ஆத்மா என்பது தனியான ஒரு பொருள் அல்ல. அதற்கென்று தனித்தன்மை எது வும் கிடையாது. உடலின் தன்மைதான் உயிருக்கும் உரியது. உடல் செயலற்றுப் போகும் போது உயிரும் செயலற்று விடுகிறது.

உயிர் என்பது உடலில் ஓடும் மூச்சுத்தான்! மூச்சு என்பது காற்றுத்தான்.

**காயமே இது பொய்யடா—வெறும்**
**காற்றடைத்த பையடா**

என்ற இந்தக் கருத்து இங்கு எண்ணத் தக்கது. காற்று உடலை விட்டுப் பிரியும் போது - காற்றோடு

காற்றாகக் கலக்கும் போதுதான் காயம் பொய்யா கிறது. அதுவரை - உயிருள்ளவரை - அது மெய் யாகத் தான் இருக்கிறது.

*சுறந்த பால் முலைப் புகா;*
*கடைந்த வெண்ணெய் மோர்புகா;*
*உடைந்துபோன சங்கின் ஓசை*
*உயிர்களும் உடற்புகா;*
*விரிந்த பூ உதிர்ந்த காயும்*
*மீண்டுபோய் மரம்புகா;*
*இறந்தவர் பிறப்பதில்லை;*
*இல்லை யில்லை இல்லையே!*

சித்தரின் இந்தப் பாட்டு, உயிர் மீண்டும் எதிலும் புகுவதில்லை என்பதைத் தெளிவாகவே விளக்கு கிறது.

பெருகிப் பெருகி விளைவது தான் உயிரின் இயற்கை. அதாவது உயிரோடு கூடிய உடலின் இயற்கை.

உடல் பழுதுபடும்போது, நோயினாலோ, பகை வன் செயலினாலோ பழுதுபடும் போது உயிர் பிரிகிறது.

பிரிகிற உயிர் வேறோர் உடலில் புகும் என்ப தும், நரகம் மோட்சம் செல்லும் என்பதும், அது அழியாதது என்பதும் வெட்டி வேதாந்தமே யாகும்.

இந்த வெட்டி வேதாந்தத்தின் அடிப்படையில் உயிர் அழியாதது; ஆகையால் உடலை வெட்டிக் கொல் என்று கிருஷ்ணன் கூறுவது ஏற்கனவே மூடநம்பிக்கை யுள்ளவனான அர்ச்சுனனை மேலும்

மூட நம்பிக்கை யுள்ளவனாக மூளைச் சலவை (Brain Wash) செய்யும் செயலாகும்.

கொல்லுவது பாவம் அதனால் நரகம் வாய்க்கும் என்று அர்ச்சுனன் .சொன்னான். கிருஷ்ணனோ, போரை நடத்தா விட்டால் பாவம் சேரும் என்றும், போர் செய்தால் அதிலே கொல்லப்பட்டால் மோட்சம் கிடைக்கும் என்றும் பாவ புண்ணியத்தின் இலக்கணத்தையே மாற்றுகிறான்.

*நீ இந்தத் தர்ம யுத்தத்தை நடத்தாமல் விடுவாயானால் அதனால், சுவ தர்மத்தையும், கீர்த்தியையும் கொன்ற பாவத்தை அடைவாய்.*

—2 : 33

அர்ச்சுனன், தன்னைப் பகைவர்கள் கொன்று போட்டாலும் சரி, நான் உறவினர்களை - குருவை —தாத்தாவைக் கொல்ல மாட்டேன் என்று தெளிவாகவே சொல்லுகிறான்.

நீ போர் செய்யாவிட்டால், அச்சத்தால் விலகியதாகக் கருதுவார்கள். இதனால் நீ சிறுமை யடைவாய் என்று மனம் பேதலிக்கச் செய்கிறான் கண்ணன்.

நீ கொல்லப் பட்டால் வானுலகடைவாய்; வெற்றி பெற்றால்; புவியை ஆள்வாய் - அதனால் போர் செய்ய எழுந்து நில் (2:37) என்று மோட்ச வழி காட்டுகிறான்.

அர்ச்சுனன் எதனால் தனக்குப் பாவம் உண்டாகும்; நரகம் கிடைக்கும் என்று சொன்னானோ, அதே

செயலால், மோட்சம் உண்டாகும் என்று கிருஷ்ணன் கூறுகிறான்.

தொடர்ந்து கிருஷ்ணன் பேசும் போது கீதையின் முக்கிய கருத்தாகப் பலரும் கூறும் கருத்தைக் கூறுகிறான்.

*தொழில் செய்யத் தான் உனக்கு அதிகாரம் உண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக்கு அதிகாரம் இல்லை. பயனைக் கருதாதே. தொழில் செய்யாமல் இராதே.*
**—2 : 47**

கடமையைச் செய். பயனை எதிர் பார்க்காதே என்பதுதான் இதன் பொருள். இதைத் தான் மிகச் சிறந்த கருத்தாகப் பிரசாரம் செய்கிறார்கள்.

மேற் போக்காகப் பார்க்கும் போது இது ஏதோ ஞான உபதேசம் போலத் தோன்றும். ஆழ்ந்து நோக்கினால் ஞானத்தைப் பேதலிக்கச் செய்யும் தன்மையை உணரலாம்.

மக்களிடையே அடிமை மனப்பான்மை வளரவே இக்கருத்துப் பயன்படுகிறது.

அடுத்த சுலோகத்தில்,

*தனஞ்சயா, யோகத்தில் நின்று பற்றை நீக்கி வெற்றி தோல்விகளை நிகர் எனக் கொண்டு தொழில்களைச் செய்க. இந்த நடுநிலையே யோகம் எனப்படும்.* **—கீதை 2 : 48**

கீதை சொல்லும் யோகம் எப்படிப் பட்டது என்று இந்த சுலோகத்தில் புரிந்து விடுகிறது.

பொதுவாக நாம் ஒரு தொழில் அல்லது செயலைச் செய்யும் போது ஒரு பயன் கருதியே செய்கிறோம்.

எந்தச் செயலுக்கும் ஒரு பயன் உண்டு.

அந்தப் பயன் என்பது தனிப்பட்ட முறையில் தனக்கு நன்மை பயப்பதாக இருக்கலாம். அல்லது பொது நன்மை கருதியதாக இருக்கலாம். அல்லது தன் வருங்கால பரம்பரைக்கு நன்மை பயப்பதாக இருக்கலாம்.

ஒரு செயலால் நன்மையும் விளையலாம், தீமையும் விளையலாம். நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டது நல்ல செயல் என்றும், தீமை விளைப்பது தீய செயல் என்றும் கருதப்படுகிறது.

தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு என்பது திருக்குறள்.

பயனைக் கருதாமல் செய்ய வேண்டும் என்ற கருத்து எந்த வகையிலும் பயனில்லாத கருத்தாகும்.

ஒரு போர் வீரனிடம் நீ பயன்பற்றிக் கருதாதே; உன் கடமையைச் செய் என்றால் ஒரு வகையில் பொருத்தமாக இருக்கலாம்.

போரினால் விளையும் பயன் அவனைச் சேர்ந்த தல்ல; அது அவனுடைய அரசனைச் சேர்ந்ததாகும். அப்போதும் அரசனுடைய அல்லது தன் தாய் நாட்டினுடைய வெற்றி என்பது மறைமுகமான பயனாக இருக்கிறது.

மேலும் அவன் செயலால் அவனுக்கு நேரடிப் பயன் இல்லை என்றாலும், அவன் பெறும் ஊதியம்

அவன் பெறும் பயனாகிறது. அந்தப் பயனும் இல்லாமல் அவன் போர் செய்வதில் பொருளே இல்லை.

சாதாரணப் போர்வீரனின் வெற்றி தோல்வி அவனுடைய அரசனுக்குப் பயன் தருவதாக இருக்கலாம். அவனை உன் சொந்தப் பயனைக் கருதாதே; உன் கடமையைச் செய் என்று சொல்லி விடலாம்.

ஆனால், அர்ச்சுனன் ஒரு மன்னன். அவன் தன் நாட்டு வெற்றிக்காக - தான் அரசு பெறுதவற்காக - பாண்டவர்கள் மீண்டும் ஆளும் உரிமை பெறுவதற்காக - ஒரு பெரிய பயன் கருதிய போராட்டத்தில் தான் ஈடுபட்டிருக்கிறான்.

போரின் வெற்றி அவர்களுடைய பதின்மூன்றாண்டுக்குக் கனவுகளை - இலட்சியத்தை - குறிக்கோளை அடையும் பயன் உள்ளதாகும்.

அவனைப் பார்த்து நீ பயனை எதிர்பாராதே. உன் தொழிலைப் - போர்த் தொழிலைச் செய் என்று சொல்வது பொருத்தமா யில்லை.

வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல் போர் செய்வது என்பது - உற்சாகமற்ற - ஈடுபாடற்ற - வெறும் பொம்மை விளையாட்டாகத்தான் இருக்க முடியும்.

ஒரு வீரனுக்கு வெற்றி என்பது இலட்சியமாக இருக்க வேண்டும். தோல்வி ஏற்பட்டால் தாங்கிக் கொள்ள உறுதி வேண்டும். அல்லது வீரமரணம் அடைதல் வேண்டும்.

ஆனால் இலட்சியம் வெற்றியாகத்தான் இருக்க வேண்டும். வெற்றி தோல்விகள் நிகர் எனக் கொள்வது என்பது வீரத்தின் இலக்கணத்துக்கே ஒவ்வாததாகும்.

எனவே கடமையைச் செய்; பலனைப் பற்றி நினைக்காதே என்பது எவ்வகையிலும் நல்ல கருத்தல்ல.

கீதையின் இந்தக் கருத்து சூழ்ச்சிக்காரர்களுக்குத் தான் உதவியாக இருக்கும். ஒரு தொழில் செய்பவனை - ஏமாற்றி வேலை வாங்க இந்தக் கருத்தைப் பயன் படுத்தலாம்.

அவனவன் தன் சாதித் தொழிலைச் செய்ய வேண்டும்; பலனை எதிர்பார்க்கக் கூடாது என்று புது முயற்சிகளில் ஈடுபடாமல் தடுப்பதற்கே இது பயன்பட்டு வருகிறது.

எதுவும் செய்யாமலே பலனை எதிர் பார்க்கும் ஏமாற்றுக் காரர்கள், செயல் செய்பவர்களைப் பார்த்துப் பலனை எதிர் பார்க்காதே; உன் தொழிலைச் செய் என்று கூறுவது தான் கீதை காட்டும் வழியாக இருக்க முடியும்.

நேர்மை எண்ணம் கொண்டவர்கள் இதை ஏற்றுக் கொள்ள இயலாது.

கீதையைப் பற்றிப் பேசும் பலர் அதைத் திருக்குறளோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள்.

கீதை பலனைப் பற்றிக் கவலைப் படாமல் செயல் செய்ய வேண்டும் என்று கூறுகிறது.

திருக்குறளோ, பலன் ஏற்படும் வகையில் ஆராய்ந்து செயல் செய்ய வேண்டும் என்று கூறுகிறது.

*அழிவதூஉம் ஆவதூஉம்*
*ஆகி வழி பயக்கும்*
*ஊதியமும் சூழ்ந்து செயல்*

ஞாலம் கருதினும் கைகூடும்
*காலம் கருதி*
*இடத்தாற் செயின்*

என்று பலனை எதிர்பார்த்து, அப்பலனைத் தவறாது எய்தும் வழியைத் தான் கூறுகிறது திருக்குறள்.

கீதையைப் போல் வெட்டி வேதாந்தம் பேச வில்லை.

ஔவையார் கூட நல்லது செய்வது பற்றி ஒரு கருத்துக் கூறுகிறார். ஒருவருக்கு நன்மை செய்வதால், செய்யப்படுபவருக்குத்தான் பலன் உண்டு.

செய்பவர் பிறர் நலம் கருதுபவராக இருக்க வேண்டும். தன்னலம் கருதிச் செய்யக் கூடாது. அப்படித் தன்னலம் கருதாமல் செய்யும் நற்செயலுக்கும் பயன் உண்டு; அது தாமதமாகக் கிடைக்கும் என்கிறார்.

ஒருவருக்கு நல்லது செய்யும் போது அதன் பலனை எதிர்பார்த்துச் செய்யாதீர்கள். நீங்கள் எதிர்

பாராமலே அது கிடைக்கும். தென்னைக்கு நீர் வார்த்துக் கொண்டு வந்தால், அது ஒரு நாள் தன் அடியிலே கொட்டிய நீரைத் தலையிலே சுமந்து தரும் என்கிறார்.

*நன்றி ஒருவற்குச்*
*செய்தக் கால் அந்நன்றி*
*என்று தருங்கொல்*
*என வேண்டா—நின்று*
*தளரா வளர்தெங்கு*
*தாளுண்ட நீரைத்*
*தலையாலே தான் தருதலான்.*

இந்தக் கருத்து பலனின்றி எந்த நல்ல செயலும் வீண் போகாது என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

பிறருக்கு உதவி செய்பவர் பலனை எதிர் பார்க்கக் கூடாது என்பதுதான் ஔவையார் கருத்து. தொழில் செய்பவர் பலனை எதிர் பார்க்கக் கூடாது என்பதல்ல.

அர்ச்சுனன் போரினால் அழிவு வருமே என்று கவலைப் படுகிறான். நாடு சீர் குலையுமே என்று வருந்துகிறான். வருணாசிரமம் பாதிக்கப் படுமே என்று கலங்குகிறான். சுற்றத்தார் ஒருவருக் கொரு வர் வெட்டி மாய்த்துக் கொண்டு ஒன்றும் இல்லாமற் போவார்களே என்று தடுமாறுகிறான். தன்னைப் போற்றி வளர்த்த பீஷ்மரையும், போர்க் கலை பயிற் றுவித்த குருநாதரையும் கொல்ல வேண்டுமே என்று தயங்குகிறான். இந்த நல்லுணர்வுகளை யெல்லாம் மாற்றுவதற்கு,

நீ உன் தொழிலை (போரை)ச் செய்; அதனால் ஏற்படும் சாதக பாதகங்களை நினைத்துப் பார்க்காதே என்று வெறியேற்றுகிறான் கண்ணன்.

இந்த வெறியேற்றும் செயல்தான் கண்ணன் காட்டிய வழியாகப் பாராட்டப் படுகிறது.

ஒரே கருத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதென்பது கீதையிலே அடிக்கடி காணப்படுகிறது. தான் சொல்லுவது மாற்றான் மனத்திலே ஏறி விட்டதா என்று எளிதில் அறிந்து கொள்ள முடியாதவன்தான் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வான். அப்பொழுதும் அவனுக்கு ஐயமே!

முதலில் தான் சொல்லும் கருத்து புரியக் கூடிய வகையில் அமைந்திருக்கிறதா என்ற குழப்பம் சொல்பவனுக்கு இருந்து கொண்டேயிருக்கிறது. அதனால், அவன் கேட்பவன் ஈர்த்துக் கொள்ளுகின்றானா என்ற ஐயத்தின் அடிப்படையில் திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லுகிறான்.

கீழே வரும் சுலோகங்கள் கூறியதையே திரும்பத் திரும்பக் கூறுவதைக் காணலாம்.

*''பார்த்தா ஒருவன் தன் மனத்தில் எழும் விருப்பங்கள் அனைத்தையும் துறந்து, தன்னிலேதான் மகிழ்ச்சி பெறுவானாயின், அப்போது நிலையான அறிவுடையவனென்று சொல்லப் பெறுகிறான்''.*

—கீதை 2 : 55

துன்பங்களினால் பாதிக்கப் படாமல், இன்பத்திலே நாட்டம் இல்லாமல், பற்று அச்சம் சினம் ஆகியவற்றை விட்டு உறுதியான மனம் படைத்தவன் முனி ஆகிறான்.

—கீதை 2 : 56

எவன் எதிலும் பற்றில்லாதவனாய், நல்லது வரும்போது மகிழாமலும், கெட்டது வரும் போது வருந்தாமலும் இருக்கிறானோ அவன் அறிவு உறுதி பெறுகிறது. —கீதை 2 : 57

இந்த மூன்று சுலோகங்களும் திரும்பத் திரும்ப ஒரே கருத்தைத் தான் கூறுகின்றன.

நிலையான அறிவுக்கு அடையாளம் நல்லதையும் கெட்டதையும் ஒன்றுபோலப் பாவிக்க வேண்டும் என்பதே இந்தக் கீதையின் பொருள்.

நல்லது, கெட்டது, இன்பம், துன்பம், ஆசை, வெறுப்பு இவை யில்லாதவன் அறிஞன் என்று கூறுகின்றன இந்த சுலோகங்கள்.

கெட்டதைத் தள்ளி நல்லதை ஏற்பவன் தான் அறிஞனாக இருக்க முடியும். துன்பத்தை அகற்றி இன்பத்தை உண்டாக்குபவன்தான் நல்லவனாக இருக்க முடியும். வெறுப்புக் குரியதை விலக்கி, விரும்பக் கூடியதைச் செய்பவன் தான் சிறப்புடையவனாய் இருக்க முடியும். இரண்டையும் சமமாக நோக்குபவனால் எந்த நன்மையையும் செய்ய முடியாது.

துன்பம் வரும்போது துடிப்பது எல்லோருக்கும் இயல்பு. அந்தத் துடிப்பின் காரணமாக அவன் துவண்டு போய் விடக்கூடாது. தாங்கிக் கொள்ளும்

தன்மை வேண்டும். இன்பம் வரும்போது மகிழ்வது மாந்தர் இயல்பு.

ஆனால் அந்த இன்பத்தின் காரணமாக ஆட்டம் போடக் கூடாது; அது மீண்டும் துன்பத்தையே உண்டாக்கும்; இதே கருத்தைத் திருக்குறளில் நாம் காண்கிறோம்.

ஒட்டு மொத்தமாக இன்பத்தைத் துறந்துவிடு என்று வள்ளுவர் சொல்லவில்லை. தவறாக வரும் இன்பத்தை - அது எவ்வளவு நலம் தருமாயினும் விலக்க வேண்டும் என்று கூறுகிறார்.

நன்றே தரினும்
நடுவிகந்து ஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

இன்பமும் துன்பமும் பெரிதாகிய, அந்த நிலைகளில் நிலை தடுமாறாமல் இருப்பது தான் சான்றோர்க்குச் சிறப்பு என்று வள்ளுவர் கூறுகிறார்.

கேடும் பெருக்கமும்
இல் அல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

நடுவு நிலை என்பதை விளக்க வள்ளுவர் கூறும் தெளிவுரை இது.

திருக்குறளில் ஒவ்வொரு கருத்தும் மயக்கம் இல்லாத தெளிவுரையாக இருக்கிறது. கீதை கூறும் கருத்தோ தெளிவற்றதாகவும், மயக்கந் தருவதாகவும், குழப்பமாகவும் உள்ளது.

திருக்குறளைக் கீதையோடு ஒப்பிட்டுப் பேசுபவர்கள் இதை உணராமல் பேசுகிறார்கள்.

# 4
# செத்து மடிவதே சிறப்பு

அர்ச்சுனன் குழம்புகிறான். பலனை எதிர்பார்க்காதே - உனக்கு விதிக்கப்பட்ட போர்த் தொழிலைச் செய் என்று உபதேசிக்கிறான் கிருஷ்ணன். உன் கடமையைச் செய்வதால் உனக்கு மோட்ச உலகில் இடம் கிடைக்கும் என்று அதற்கு ஒரு பலனும் சொல்கிறான். ஆக ஒரு பலன் இருக்கிறது என்று காட்டாமல் அர்ச்சுனனை அவனால் வயப்படுத்த முடியவில்லை.

*கீதையையும் கிருஷ்ணனையும் எப்படியாவது* காப்பாற்ற வேண்டும் என்று ஒரு துறவியார் முயல்கிறார். கொலை செய்யச் சொல்லுகிறானே *கிருஷ்ணன் இது நியாயமா? என்று பலர்* கேட்கிறார்கள். இது நரகத்தில் தள்ளுமே என்று அஞ்சுகிறார்கள்.

உலக உயிர்கள் எல்லாமே ஒன்றையொன்று கொன்று தான் வாழ்கின்றன. உலகமே ஒரு கொலைக் களமாக இருக்கிறது. கொலைக் களத்துக்குள் வந்தவன், அதாவது மனிதனாகப் பிறந்த

வன் கொலைக்கு அஞ்சலாமா என்று கேட்கிறார் துறவியார். கீதையையும் கிருஷ்ணனையும் காப்பாற்றுவதற்காக - அருள் நெறியைத் துறக்கச் சொல்லுகின்ற இப்படிப்பட்ட துறவிகளால் நாட்டில் எப்படி அன்பு தழைத்தோங்க முடியும்.

காந்தி அடிகளார் கீதையைப் படித்தார். கீதை சிறந்த நூல் என்று பாராட்டினார். ஒவ்வொருவரும் கீதை படிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார். ஆனால் அவர் போர் வழியை ஏற்றுக் கொள்ளவில்லை. பகைவனைக் கூட அன்பினால் அஹிம்சையினால் தான் வெல்ல முடியுமே தவிர, வன்முறையால் முடியாது என்று அவருடைய அந்தராத்மா கூறியதை அவர் உலகுக்குக் கூறினார்.

ஆத்மாவைப் பற்றிப் பேசிய கண்ணனின் வன்மைப் போக்கு அந்தராத்மாவைப் போற்றிய காந்தி யடிகளாருக்கு ஒத்து வரவில்லை.

ஆத்மா என்று உயிருக்குப் பெயர் வைத்தான் கிருஷ்ணன்.

அந்தராத்மா என்று உன் மனத்திற்குப் பெயர் வைத்தார் காந்தியடிகள்.

ஆத்மா என்ற சொல், அவரவர் விருப்பம் போல் பொருள் படுத்திக் கொள்ளக் கூடிய ஒரு சொல்லாய் இருக்கிறது. எந்த நேரத்தில் எந்தச் சட்டை வேண்டுமோ அதை அணிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கிறது.

ஆன்மீக வாதமே, எதிரியை மடக்கத்தான் பயன் படுகிறது. வேறு வகையில் உப்புக்குக் கூடப் பயன்படுவதில்லை.

*குழப்பமான பேச்சினால் என் புத்தியை மயங்கச் செய்கிறாய். ஆதலால் எது எனக்கு நன்மை தரும் என்பதை உறுதிப் படுத்தி ஒரே வார்த்தையாகச் சொல்.*

—கீதை 3 : 2

அர்ச்சுனனின் இந்த வேண்டுகோளுக்குப் பிறகு கிருஷ்ணன் சொல்லத் தொடங்கும் கர்மயோகம் பற்றிய கருத்துக்கள் மேலும் குழப்பத்தையே உண்டாக்குகின்றன.

*வேள்வியின் பொருட் டென்று செய்யப்படுவது தவிர மற்றைத் தொழில் மனிதருக்குத் தளையாகிறது. ஆதலால் குந்தி மகனே பற்றைக் களைந்து தொழில் செய்து கொண்டிரு.*

—கீதை 3 : 9

ஒரு யாகம் நடத்துவதற்கு என்று செய்யும் தொழில் சிறப்பானதாம். வேறு தொழில்களைச் செய்யும் போது மனிதன் அவற்றில் - அவற்றின் நன்மை தீமைகளில் கட்டுண்டு போகிறானாம். ஆதலால், பலனை எதிர்பாராமல் - நன்மை தீமை களை எண்ணிப் பார்க்காமல் தொழிலைச் செய்ய வேண்டுமாம்!

தொடர்ந்து யாகங்கள் செய்ய வேண்டியது பற்றி யும், யாகத்தினால் தேவர்களை மகிழ்விப்பது பற்றி யும், தேவர்களுக்குக் கொடுத்தது போக மீதியை உண்பது தான் மனிதர்களுக்கு நலம் பயக்கும் என்றும் சொல்லுகிறான்.

உயிர்கள் உணவினால் அமைகின்றனவாம். உணவு மழையினால் உண்டாகிறதாம். மழை யாகங்களால் உண்டாகிறதாம். யாகங்கள் மனிதர்களின் செயல்களால் நடக்கின்றனவாம். செயல்கள் பிரமத்திலிருந்து பிறப்பதாம். பிரமம் அமிர்தத்தில் தோன்றுவதாம். ஆதலால் யாகத்தினால் தான் பிரமம் நிலை பெற்றுள்ளதாம்.

உயிர்ப்பலி கொடுத்து யாகம் செய்வது சிறந்த செயல் என்றும், அதனால் தான் உலகம் ஒழுங்காக நடக்கிறது என்றும் கூறுகிறான்.

யாகம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதை இங்கே வற்புறுத்திக் கூறுகிறான்.

யாகத்தில் உயிர்ப்பலி கொடுப்பதற்கு வேண்டிய செயல்கள் கண்ணனால் பாராட்டப் படுகின்றன.

யாகம் தவிர மற்ற தொழில்களைச் செய்யும் போது அத்தொழிலின் பலனில் பற்று வைக்காமல்— இலாப நஷ்டத்தை எதிர் பாராமல் தன் தன் குலத் தொழிலைச் செய்து வர வேண்டும் என்று வற்புறுத்துகிறான்.

கண்ணன் இங்கே தன்னை மிக உயர்ந்த கடவுளாகப் பாவித்துக் கொண்டு பேசுகிறான். கடவுளாகிய அவன் தொடர்ந்து தொழிலைச் செய்யாமல் விட்டுவிட்டால் எல்லாரும் அவனைப் பின்பற்றித் தொழில் செய்யாமல் இருந்து விடுவார்களாம். அதனால் மக்கள் எல்லோரும் அழிந்து போவார்களாம்.

அவன் தொடர்ந்து தொழில் செய்வது போலவே எல்லாரும் தத்தம் தொழிலைச் செய்து வர வேண்டுமாம். அதுவும் பலனை எதிர் பாராமல் செய்ய வேண்டுமாம். பலனை எதிர் பார்த்துச் செய்பவன் மூடனாம்; எதிர் பாராமல் செய்பவனே ஞானியாம்.

இப்படிப்பட்ட தவறான வழிகளையே கீதையில் தொடர்ந்து கண்ணன் கூறி வருகிறான்.

நச்சுத் தன்மை வாய்ந்த இன்னொரு கருத்தை இங்கே கண்ணன் கூறுகிறான்.

நன்றாகச் செய்யப்படும் பர தர்மத்தைக் காட்டிலும். குணமற்றதெனினும் சுய தர்மமே சிறந்தது. சுய தர்மத்தில் இறந்து விடினும் நன்றேயாம். பரதர்மம் பயத்துக் இடமானது.

—கீதை 5 : 35

சாதி முறையைக் கட்டிக் காப்பதற்காக இந்த உபதேசத்தைச் செய்கிறான்.

வேறு சாதிக்காரனுடைய தொழிலில் தேர்ச்சி பெற்று அதை நன்றாகப் பலனுடையதாகச் செய் தாலும் அது கேடு தருமாம். தன் சாதித் தொழிலால் பலன் இல்லாவிட்டாலும், அதனால் சாவே வந்தா லும் அதையே தொடர்ந்து செய்து சாவது சிறந்த தாம். இவ்வாறு மோசமான உபதேசத்தை— கண்ணனைத் தவிர வேறு எவரும் சொல்லத் துணிய மாட்டார்கள். வருணாசிரமத்தையும் சாதித்தீயை யும் காப்பாற்றவே இவ்வளவு மோசமான கருத்தைக் கீதை சொல்லுகிறது.

கீதையில் கண்ணன் கூறும் இந்த ஒரு கருத்தே மக்கள் முன்னேற்றத்திற்கு எதிரான சதிக் கருத்தாகும். உயர்ந்த வருணத்தாரைக் காப்பாற்றித் தாழ்ந்த வருணத்தாரை என்றென்றும் துன்பத்தில் உழலச் செய்வதற்கே இது போன்ற தீய கருத்துக்களைக் கீதை கூறுகிறது.

மக்களைக் கூறுபடுத்தி ஊறுபடுத்தும் மன்னிக்க முடியாத இந்தக் கருத்தைப் பாராட்டுபவர்கள் மனித இனத்தின் பகைவர்களே யாவர். அவர்களுக் கெல்லாம் தலைமையான சூத்திரதாரியாக இருக்கிறான் கிருஷ்ணன்.

உழைப்பவன் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும், உயர்வடைவதற்கு ஆசைப்படக் கூடாதென்றும், உயர்ந்த நிலையில் இருப்பவன் மீது ஆத்திரப்படக் கூடாதென்றும், அவனைப் போல் தானும் உயர் நிலைக்கு வர ஆசைப்படக் கூடா தென்றும், இந்த ஆசையும் ஆத்திரமும் அழிவு தரும் என்றும், அது பாவம் என்றும் இந்தக் கர்ம யோகத்தில் கூறி முடிக்கிறான் கண்ணன்.

வேறு சாதிக்காரன் தொழிலைக் கற்றுக் கொண்டு நன்றாகச் செய்தாலும் அது கூடாதாம். தன் சாதித் தொழிலைச் செய்து செத்துப் போனாலும் அது நல்லதாம். இப்படி சமுதாய முன்னேற்றத் துக்குத் தடையான ஒரு கருத்தை மேலான தென்று சொல்லுபவர்கள்,

மக்களைக் கூறுபடுத்தி - அவர்களின் உழைப்பில் தாங்கள் சுகமாக வாழ நினைக்கும் கொடிய பாதகர்களே யல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்.

தாழ்த்தப்பட்டவர்களை மேலும் மேலும் தாழ்த்தி வைக்கவும், ஏறிக் கொண்டவர்களை மேலும் மேலும் ஏற்றங் கொள்ளச் செய்யவும் ஏற்படுத்தப்பட்ட சதி தான் கீதையாக உருவாகி யிருக்கிறது. இந்தச் சதிக் கூட்டத்தின் தலைவனாகக் கண்ணன் திகழுகிறான்.

இதில் அய்யமே இல்லை.

# 5

# நான்கு வருணங்கள் ஒரு பயங்கர ஏற்பாடு

இதுவரை கிருஷ்ணன் தன்னைப் பரமாத்மா என்று குறிப்பிட்டுக் கொண்டு வந்தான்.

இப்போது வெளிப்படையாகவே தன்னைப் பெரிய பரம் பொருள் என்று சொல்லத் தொடங்குகிறான்.

இடை யிடையே தன்னைப் பற்றிக் கண்ணன் கூறிவந்ததை அர்ச்சுனன் கவனித்துக் கொள்ளவில்லையோ அல்லது அவன் மனத்தில் படியவில்லையோ தெரியவில்லை.

ஞான யோகத்தை விவஸ்வான் என்கிறவனுக்குத் தான் முதன் முதலில் சொன்னதாகக் கண்ணன் கூறினான்.

விவஸ்வான் முன் இருந்தவன். நீ இப்போது பிறந்தவன். அப்படி யிருக்க நீ எப்படி அவனுக்குச் சொல்லியிருக்க முடியும் என்று அர்ச்சுனன் கேட்கிறான்.

அக்கரை யில்லாமல் கேட்டுக் கொண்டிருக்கும் ஒருவனுக்குத் தான் ஏதேதோ சொல்லிக் கொண் டிருப்பதை அந்தக் கண்ணன் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

மேன்மேலும் தன்னைப் பற்றிச் சொல்லத் தொடங்குகிறான். ஞான யோகம் என்ற நான் காவது அத்தியாயத்தில் தன் பெருமைகளைப் பேசுகிறான்.

*அர்ச்சுனா, எனக்குப் பல பிறப்புக்கள் ஏற்பட்டிருக் கின்றன. உனக்கும் அப்படியே. நீ அவற்றை அறிய மாட்டாய் நான் அறிவேன்.*

**—கீதை 4 : 5**

*உயிர்களுக்கெல்லாம் நான் ஈசன். எனக்குப் பிறப்பும் இல்லை அழிவும் இல்லை. ஆனால், ஆத்ம மாயையால் நான் பிறப்பெய்துகிறேன்.*

**—கீதை 4 : 8**

*எப்போதெல்லாம் தர்மம் அழிந்து போய் அதர்மம் தலை தூக்குகிறதோ, அப்போதெல்லாம் என்னை நான் பிறப் பித்துக் கொள்கிறேன்.*

**—கீதை 4 : 7**

*நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்.*

**—கீதை 4 : 8**

*குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களைச் சமைத்தேன். செய்கை யற்றவனும் அழிவற் றவனுமாகிய யானே அவற்றைச் செய்தேன். இதை உணர்ந்து கொள்வாயாக.*

**—கீதை 4 : 13**

*செய்கையில் செயலின்மையும், செயலின்மையில் செய்கையையும் எவன் காணுகிறானோ, அவனே அறிவுடையோன். அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்தில் இருப்பான்.*
**—கீதை 4 : 18**

*வேள்வியில் மிஞ்சிய அமுதை உண்போர் என்றும் உளதாகிய பிரமத்தை எய்துகிறார்கள். வேள்வி செய்யாதோருக்கு இவ்வுலகம் இல்லை. அவர்களுக்குப் பரமலோகம் ஏது?*
**—கீதை 4 : 13**

பிறப்புகள் பல உண்டு என்பதே கற்பனை! அந்த மூடக் கற்பனையை அடிப்படையாகக் கொண்டு, இங்கே அர்ச்சுனனையும் தன்னையும் வேறுபடுத்திக் காட்டுகிறான்.

அர்ச்சுனன் சாதாரண ஆத்மா என்பதால், தன் பிறப்புக்களை அறியமாட்டானாம்; கண்ணன் பரமாத்மாவாக இருப்பதால் தன் பிறப்புக்களைப் பற்றி அறிவானாம். அதனால், தன் முன் பிறப்பில் விவஸ்வானுக்கு ஞான யோகத்தைச் சொன்னதாகக் கூறுகிறான்.

அடுத்து தன்னுடைய கடவுள் தன்மையை எடுத்துக் காட்டுகிறான். எல்லாருக்கும் கடவுளாகத் தான் இருப்பதால் தனக்குப் பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை என்கிறான். அப்படியானால் இப்போது பிறந்திருக்கிறாயே என்று கேட்டால், ஆத்ம மாயையால் அவன் தன்னைப் பிறப்பித்துக் கொண்டதாகக் கூறுகிறான்.

எல்லாம் வல்லவனாகிய கடவுள் தன் ஆற்றலால் எதனையும் சாதிக்க முடிந்தவனாக இருக்க

வேண்டும். எல்லாம் வல்லவன் என்பதற்கு அது தான் இலக்கணம். ஒரு சாதனையைச் செய்ய அவன் பிறந்து ஆக வேண்டியதில்லை.

மாயையால் பிறப்பெடுத்துக் கொள்வதாகக் கூறுகிறான். அதே மாயையில் கட்டுண்டு, வேண்டியவர் வேண்டாதவர் என்று தரம் பிரித்து, ஒருவருக்கு நன்மையும் மற்றொருவருக்குத் தீமையும் செய்பவன், சாதாரண மனிதனாகத் தான் இருக்க முடியுமே தவிர - வல்லமையுள்ள பரம் பொருளாக இருக்க முடியாது.

நடுவு நிலையில் மனத்தை வைத்திருக்க வேண்டும் என்று கீதோபதேசம் செய்கிறான். தானே நடுவு நிலையில் நிற்காததனால், உபதேசிக்கும் தகுதியை இழந்தவனாகிறான். இதன் மூலம் பரம் பொருள் என்ற நிலைக்கும் அருகதையற்றவனாகிறான்.

தர்மங்கள் அழியும் போதெல்லாம் பிறப்பெடுத்து அதர்மத்தை யொழித்து தர்மத்தை நிலைநாட்டுவதாகக் கூறுகிறவன், தானும் அதர்ம வழியிலேயே சென்று, பழிக்குப் பழிவாங்குதல், துன்பப் படுத்தி உயிர் பறித்தல், பிறருக்கு வேதனை தருதல் போன்ற தீய செயல்களைச் செய்பவனாகப் பிறப்பெடுத்தல் பரம் பொருள் இலக்கணத்துக்கு மாறுபட்டதாகிறது.

உலகில் அவன் பிறப்பெடுத்ததாகக் கூறப்படும் காலங்களிலும் அதர்மம் ஒழிந்ததாகக் காணப்பட வில்லை. மேலும், அவனே பல அதர்மங்களைச் செய்ததாகவும், அவற்றிற்குக் காரணமாக இருந்த தாகவும் புராணங்கள் இதிகாசங்கள் கூறுகின்றன.

இறை நிலையில் தன்னை வைத்துப் பேசுகிற வன் என்றாவது தான் அருள் நிலையில் இருந்து பகைவர்களுக்கு நல்வழி காட்டியதாக ஒரு கதையும் இல்லை. அவர்களைப் பழிவாங்கிச் சாகடித்து மோட்சம் அருளியதாகத் தான் அத்தனை கதை களும் பேசுகின்றன.

அருளற்ற ஒருவன், தன்னை மனிதன் என்று சொல்லிக் கொள்வதற்கே அருகதையற்றவன் என்னும்போது தன்னைத் தானே இறைவன் என்றும் பரம்பொருள் என்றும் பேசிக் கொள்வது பிறரை ஏமாற்றுவதற்கேயாகும்.

யுகந்தோறும் நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் அறத்தை நிலை நிறுத்தவும் தான் பிறப் பதாகக் கண்ணன் கூறுகிறான்.

ஆனால் அவனுடைய திருவிளையாடல்களாகப் புராணங்கள் விளக்குவதெல்லாம், நல்லோரை அழிப் பதற்கும், தீயோரைக் காப்பதற்கும் பயன்பட்ட தாகவே யுள்ளது.

இறைவனாகத் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்பவன் நேர் வழியாக எதையும் செய்யாமல்,

வஞ்சகமாகவும் சூழ்ச்சியாகவும் சாகசமாகவும் செயல் புரிந்ததாகவே புராணங்கள் கூறுகின்றன.

பெண்ணாசை கொண்டு சீதையைக் கடத்திச் சென்ற இராவணன் தீயவன் ஆகவே அவனைக் கொன்றதாகவும், அவனுடைய சிறையில் பல ஆண்டுகள் அடைபட்டிருந்த சீதை, கடைசிவரை கற்பரசியாக இருந்தாள் என்பதும் முன்னுக்குப் பின் முரணான கட்டுக் கதைகள். இராவணன் காமுக னாக இருந்திருந்தால், சீதை கற்பிழந்தவளாகத் தான் இருக்க வேண்டும். சீதை கற்பரசியாக இருந்திருந்தால், இராவணன் நல்லற வேந்தனாக இருந்திருக்கத்தான் வேண்டும்; இதிலேயே குழறு படியான வாதங்களைப் புரிபவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்களாவர், பிறரையும் ஏமாற்றுபவர் ஆவர்.

யுகந்தோறும் பிறந்து சாதித்த பாவச் செயல்கள் அனைத்தும் பரம் பொருளாக உள்ள ஒருவர் செய்த தாகக் கூறுவது, அறம் நிலை நிறுத்தவந்த ஒருவனுடைய செயல்கள் ஆகா என்பதே அறியத் தக்கது.

நான்கு வருணங்களைத் தானே யுண்டாக்கிய தாக (கீதை 7:13) கண்ணன் கூறுவது, அருளிச் செயல் அல்ல. இந்த உலகத்தில் என்றென்றும் வேற்றுமையை நிலை நிறுத்தவும், ஏற்றத் தாழ்வு என்னும் கொடுமையைத் தொடர்ந்து நடத்தவும்

இந்தச் செயல் பேருதவியாக இருக்கிறது. மக்களில் ஒரு சாராரை உயர்வானவராகவும், பெரும்பாலோரை அடிமைகளாகவும் செய்யத் தக்க இந்த ஏற்பாட்டைத் தானே செய்ததாகக் கூறிக் கொள்பவன் மாபாதகனாக இருக்க முடியுமே தவிர மகேசனாக இருக்க முடியாது.

உழைக்கவென்றே ஒரு பெருங் கூட்டத்தையும், அந்த உழைப்பை உறிஞ்சவென்றே ஒரு சிறு கூட்டத்தையும் நிலையாகச் செய்வதற்குப் பயன்படும் இந்த வருணாசிரம ஏற்பாடு, உலகத்திலேயே மிகக் கொடுமையான ஏற்பாடாகும்.

இந்த ஏற்பாட்டைத் தானே செய்ததாக ஒருவன் கூறிக் கொள்வானேயானால் அவன் பெரிதும் பழிக்கத் தக்கவனே யாவான்!

ஞான யோகம் என்ற பெயரிலே கண்ணன் இங்கே கூறுகின்ற கருத்துக்கள் நன்னெறிக்கு மாறுபாடானவையாகக் காண்ப்படுகின்றன.

யாகங்களைச் செய்ய வேண்டும் என்கிறான். யாகங்கள் என்பவை உயிர்க்கொலை புரியும் வேள்விகளாம்.

இந்த யாகங்களைத் திருவள்ளுவர் வன்மையாகக் கண்டிக்கிறார்.

*அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர் செகுத் துண்ணாமை நன்று*

ஆயிரம் யாகங்களைச் செய்வதைக் காட்டிலும் மிக நன்மை பயப்பது, ஓர் உயிரையும் கொன்று தின்னா மையே யாகும்.

திருவள்ளுவர் போன்ற சான்றோர்கள் பழிக்கும் வினையைக் கண்ணன் கட்டாயமாகச் செய்யச் சொல்கிறான்.

*ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை*

என்பது வள்ளுவர் வாக்கு!

அறநெறிக்குப் புறம்பாக; மக்களைக் கொடுமைப் படுத்தும் வருணாசிரம முறையைத் தானே ஏற்படுத் தியதாகக் கூறிக் கொள்ளும் ஒருவன், தன்னைத் தானே பரம் பொருள் என்றும், தன்னால் தான் எல்லாம் நடப்பதாகவும் கூறிக் கொள்வது போற்றத் தக்கதாக இல்லை.

சாதாரணமாகச் சிறிது நேரம் ஒருவனைத் துன் புறுத்துவதே பாவம் அல்லது கொடுமை என்றால், காலகாலத்துக்கும் பெருவாரியான மக்கள் கூட்டத் தை அடிப்படுத்தி அடிமைகளாய்த் தொழும்பர் களாய், வாழ வழியற்றவர்களாய், மேற்குலத்தார் களால் என்றும் நசுக்கி அழுத்தி வைக்கப்பட்டவர் களாய் இருக்கும்படியான ஒரு பயங்கரமான ஏற்பாட் டைச் செய்த - அருளற்ற செயல் செய்த ஒருவன் எப்படி ஒரு பரம் பொருளாக இருக்க முடியும்.

# 6

# ஏழு குழப்பங்கள்

கீதையில் கண்ணன் சொல்வதாகக் கூறப்படும் சுலோகங்களில் பல விளக்கமற்றவையாகவும், பொருளற்றவையாகவும், குழப்பம் ஏற்படுத்துவனவாகவும் உள்ளன;

தான் என்ன சொல்லுகிறோம் என்ற உணர்வே யற்றுப் பேசுகின்ற ஒருவனுடைய சொற்களில் பொருள் இருக்காது. தான் என்ன சொல்ல நினைக்கிறோம் என்பது அவனுக்குப் புரியாது; தெளிவற்ற சொற்களில் சொல்லப்படும் அந்த சொற்றொடரைச் சொல்பவனும் விளங்கிக் கொள்ள முடியாது. கேட்பவனுக்கும் புரியாது.

இப்படிப் பல சுலோகங்கள் ஆங்காங்கே கீதையில் காணப்படுகின்றன.

நான்காவது அத்தியாயம் 18வது சுலோகம் இது போன்ற தன்மை உடையது.

கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்போன் மக்களுள் மேதாவி. அவனே யோகி. அவனே எல்லாம் செய்து முடித்தவன்

இதே சுலோகத்தை பாரதியார் நல்ல தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்;

செய்கையில் செயலின்மையையும், செயலின்மையில் செய்கையையும் எவன் காண்கின்றானோ, அவனே மனிதரில் அறிவுடையோன்; அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்திலிருப்பான்.

—4 : 18

He who Seath Inaction in action, and action in Inaction, he is wise among men, he is harmonious, even while performing all action.

—Annie Besant

பொருள் விளங்காத எல்லாம் வேதாந்தம் என்று நினைப்பவர்கள் - இது மிகப் பெரிய தத்துவம் என்று கூறுவார்கள்.

மேற்கண்ட சொற்களுக்கு என்ன பொருள் என்பது எனக்கு விளங்கவில்லை. சரி, நமது சிற்றறிவுக்குத்தான் விளங்கவில்லை போல் இருக்கிறது. மேதைகளின் அறிவுக்கு ஏதாவது விளங்கியிருக்க வேண்டுமே.

—என்ற எண்ணத்தில் பல மேதைகளின் கருத்தை ஆராயும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மேதாவிலாசத்துக்குத் தகுந்தபடி இந்த சுலோகத்துக்குப் பொருள் செய்ய முயன்றிருக்கிறார்கள்: எந்த மேதையாவது சரியாகப் பொருள் உரைத்திருக்கிறார்களா என்று பார்த்தால், ஒவ்வொரு மேதையும் ஒவ்வொரு பொருளைக் கூறுகிறார்கள்.

பரமாத்மா சொன்னது பொருள் இல்லாமல் போகுமா என்ற கருத்தில் ஒவ்வொருவரும் பொருள் கூற முற்பட்டிருப்பதால், யாருடைய பொருளும் பொருத்தமாகவும் இல்லை; ஒன்று போலவும் இல்லை.

ஆதிசங்கரர்
இராமானுஜாசாரியர்
மத்வாசாரியர்
சீதரர்
விவேகானந்தர்
இராம கிருஷ்ண பரம அம்சர்
சித்பவானந்தர்

சமய உலகில் பெரும் புகழ் பெற்ற இந்த மேதைகள் ஒவ்வொருவரும் கூறியுள்ள விளக்கங்கள் கீழே தரப் படுகின்றன.

அஞ்ஞானியானவன் தேகத்தைத் தான் என்று வைத்துக் கொள்கிறான். பிரகிருதியின் செயலை ஆத்மாவின் மீது ஆரோபிக்கிறான். இத்தகையவன் ஒரு செயலும் செய்யாது சும்மா இருந்தாலும் அகங்காரமும் கர்த்ருத்வமும் அவனிடம் இருக்குமளவு அவன் கர்மம் செய்பவனே யாகிறான். இந்த அக்ஞான நிலை அகர்மத்தில் கர்மம் என்பதாகும்.

ஆத்மசொருபத்தை அறிந்த ஞானிக்கு அகங்காரமில்லை. அவனது உடல் ஓயாது வேலை செய்தாலும் ஆத்மா சாட்சி யாய் இருக்கிறது. உடல் செய்யும் கர்மமெல்லாம் ஆத்மா வைச் சேர்வதில்லை. கர்மத்தில் அகர்மம் என்ற ஒரு நிலை யாகும் இது.

## இது சங்கர பாஷ்யம்

தேகம் வேறு ஆத்மா வேறு என்ற திரிபு வாதம் இது.

ஒரு மனிதன் சமைக்கிறான். இது சமைத்தல் என்னும் கர்மம். சமைத்துச் சமைத்து அவன் சமையல் ஞானம் பெறுகிறான். இது கர்மத்தில் அகர்மம்.

கர்மம்—தொழில். அகர்மம்—ஞானம்.

சமையல் ஞானம் வந்தால் மேலும் திறமையுடன் சமைக்கிறான். இது அகர்மத்தில் கர்மம்.

தொழில் பழகப் பழக ஞானம் உண்டாகிறது. ஞானத்துடன் பிறகு தொழில் செய்யப்படுகிறது. கர்மத்தில் அகர்மம் உண்டாகிறது. அகர்மம் கர்மத்தைச் செய்கிறது.

## இது இராமாநுஜ பாஷ்யம்

ஒரு செயலையே இரண்டு நிலையில் வைத்துப் பார்க்கும் விசித்திர வாதம் இது.

x x x

தான் கர்த்தா என்ற எண்ணத்தை அகற்றி தான் செய்யும் கர்மங்கள் எல்லாம் பகவானுடையவை என்று எண்ணுபவன் கர்மத்தில் அகர்மத்தைக் காண்கிறான்.

சொப்பனத்தில் நடைபெறும் கர்மங்கள் பகவானுடையவை. அப்போது மனிதன் கர்மம் செய்வதில்லை. எனவே அது அகர்மத்தில் கர்மம் ஆகிறது. இதை அறிந்து கொள்பவன் புத்திமான்.

## இது மத்வ பாஷ்யம்

புத்திமான் என்பதற்கு விசித்திரமான விளக்கம் இது.

x x x

*ஜீவனைப் பந்தப் படுத்துவது கர்மம். அகங்கார மமகார மற்று ஈசுவரார்ப்பணமாகச் செய்யும் கர்மம் மனிதனைப் பந்தப் படுத்துவதில்லை. இது கர்மத்தில் அகர்மம் ஆகும்.*

*சோம்பலால் நல்வினை செய்யாமல் இருப்பின் கேடு உண்டாகிறது. நல்வினை செய்யாதிருப்பது அகர்மம். அதனால் விளையும் கேடு கர்வம். இது அகர்மத்தில் கர்மம் ஆகும்.*

**—ஸ்ரீதர பாஷ்யம்**

குழப்பத்திற்கு இன்னொரு குழப்பம் சரியான விளக்கம் தான்.

x x x

*பல வேலைகளுக்கு நடுவிலும் மனது ஒரே நிலையில் அமைதியாய் இருப்பது கர்மத்தில் அகர்மம். எந்த வேலையும் செய்யாமல் அமைதியாகத் தியானத்தில் இருக்கும் போது மனம் தொடர்ந்து ஈசுவரனை நினைத்துக் கொண்டிருப்பது அகர்மத்தில் கர்மம்.*

**—விவேகானந்தர்**

அமைதியாய் இருப்பதற்கே இரண்டு விளக்கங்கள்!

x x x

*அர்ச்சுனன் வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டு செயலற்றவனாக இருக்கிறான். அவன் மனமோ துன்பத்தில் உழல்கிறது. இந்த நிலை அகர்மத்தில் கர்மமாகும்.*

*கிருஷ்ணர் தேரை ஓட்டிக் கொண்டிருக்கிறார். அவருடைய மனம் மலைபோல அசையாமல் சாந்தியாய் இருக்கிறது. இது கர்மத்தில் அகர்மம்.*

**—இராம கிருஷ்ணர்**

எடுத்துக் காட்டிற்கு எங்கும் அலையாமல் பாரதப் போர்த் தொடக்கத்தையே எடுத்துக்

கொண்டிருக்கிறார். மனமும் செயலும் ஒன்று படாமல் இருப்பதையே விளக்கமாகத் தருகிறார்.

x x x

*ஓடும் இரயிலில் இருப்பவன் வெளியில் அசையாமல் இருக்கும் மரங்கள் எதிர் திசையில் ஓடுவது போல் காண்கிறான். இது அகர்மத்தில் கர்மம்.*

*கடலில் ஓடிக் கொண்டிருக்கும் கப்பல் கரையில் இருப்பவனுக்கு ஒரே இடத்தில் நிற்பது போல் காணப்படுகிறது. இது கர்மத்தில் அகர்மம். அஞ்ஞானத்தினால் கர்மம் அகர்மமாகவும் அகர்மம் கர்மமாகவும் காணப்படுகின்றன.*

**—சித்பவானந்தர்**

மாயத் தோற்றமே இங்கு விளக்கமாகக் கூறப்படுகிறது.

x x x

ஒரு கீதைக்கு ஏழு விளக்கம். ஏழும் ஏழு விதம். ஏழு விளக்கங்களும் படித்த பிறகு எட்டாவதாக ஒன்றை முயலத் தோன்றுமே தவிர ஏழு விளக்கத்திலும் பொருள் எட்டி விட்டதாகக் கூற முடியாது.

ஒரு செயலைச் செய்யும் போது, மனம் ஒன்றிச் செயல் புரிய வேண்டும். அப்போது தான் அந்தச் செயல் வெற்றிபெறும். ஆனால் இங்கே மனம் ஒன்றாத ஒரு செயலை வைத்துக் கொண்டு கர்மத்தில் அகர்மம் அகர்மத்தில் கர்மம் என்று பேதப்படுத்தி, ஒரு பைத்தியக்காரத் தனமாக சொற்றொடரை சுலோகமாக்கி எல்லாரையும் குழப்பியிருக்கிறது கீதை.

புலவர் ஒருவரிடம் கேட்டேன். இவ்வளவு படித்த பிறகும் ஒன்றும் புரியவில்லையே. முழுக்க முழுக்கக் குழப்பமாய் இருக்கிறதே.

கீதைக்குத்தான் பொருள் புரியவில்லை. அதற்குப் பொருள் சொன்னவர்களின் பொருளும் புரியவில்லையே என்றேன்.

நம்பிக்கை என்று ஒன்று வேண்டும். ஆத்மா வில் உனக்கு நம்பிக்கையில்லை. அதனால் பொருள் விளங்கவில்லை.

நான் சொல்லுகின்றேன்.

ஒருவன் செயல் செய்யும் போது அவன் ஆத்மா செயல்படாமல் இருந்தால் அது கர்மத்தில் அகர்மம்.

ஒருவன் சும்மா யிருக்கும் போது ஆத்மா செயல் பட்டால் அது அகர்மத்தில் கர்மம் என்றார்.

இதுவும் புரியவில்லையே என்றேன்.

பொருள் புரிவதாக நம்ப வேண்டும். நம்பிக்கை யில்லாவிட்டால் புரியவே புரியாது. பெரிய பெரிய மகான்கள் புரியாமலா பொருள் சொல்லி யிருப்பார் கள் என்று கேட்டார் அந்தப் புலவர்.

மகான்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி யல்லவா பொருள் கூறுகிறார்கள். எதுவும் ஒரே மாதிரியாக இல்லையே! ஒரு கீதைக்கு ஏழு மாதிரி யான விளக்கமா? என்றேன்.

அவரவர் கொள்கைக்குத் தகுந்த மாதிரிதான் விளக்கம் சொல்வார்கள். கொள்கை ஒன்று இல்லை என்றால் விளக்கமே கிடைக்காது என்றார் புலவர்.

கர்மத்தில் அகர்மம் அகர்மத்தில் கர்மம் - தலை சுற்றுகிறது. இப்படி ஒரு கீதையை அருளிச் செய்தார் பகவான். பகவான் பெயரில் சுலோகத்தை எழுதியவர் வியாச பகவான். வியாச பகவானும் எழுதவில்லை. இடையில் யாரோ சேர்த்து விட்டது தான் கீதை என்றொரு சாரார் கூறுகின்றனர்.

வேள்வி செய்வதை வலியுறுத்திப் பல கீதை சுலோகங்கள் காணப்படுகின்றன.

*வேள்வியில் மிஞ்சிய அமுதை உண்போர் என்றும் உளதாகிய பிரமத்தை எய்துகிறார்கள். வேள்வி செய்யாதோருக்கு இவ்வுலகம் இல்லை. அவர்களுக்குப் பரலோகம் ஏது?*

**—கீதை 4 : 31**

அர்ச்சுனன், பாவிகளுக்கெல்லாம் பெரும் பாவியாகச் சித்தரிக்கப் படுகிறான். அந்த சுலோகம் இது தான்.

*பாவிகளெல்லாரைக் காட்டிலும் நீ அதிக பாவியாக இருந்தாலும், அப்பாவத்தையெல்லாம் ஞானத் தோணியால் கடந்து கொள்வாய்!*

**—கீதை 4 : 36**

கவனமில்லா விட்டாலும், ஊதுகிறவரை ஊதட்டும் என்று பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த பார்த்தனுக்கு இந்தப் பாவிப்பட்டம் வேண்டியது தான்.

எந்தச் செயலையும் ஆராய்ந்து தெளிவதே ஞானம் என்று நாம் நம்புகிறோம். ஆனால் ஆராயாமல் நம்புவதையே அறிவு என்று கீதை சொல்கிறது.

*அறிவும் சிரத்தையும் இன்றி ஐயத்தை இயல்பாகக் கொண்டோன் அழிந்து போகிறான். ஐயம் உடையோனுக்கு இவ்வுலகம் இல்லை. மேலுலகும் இல்லை. இன்பமும் இல்லை.*

**—கீதை 4 : 40**

*அஞ்ஞானத்தால் தோன்றி நெஞ்சில் நிலை கொண்டிருக்கும் இந்த ஐயத்தை உன் ஞான வாளால் அறுத்து யோக நிலை கொள். எழுந்து நில்!*

**—கீதை 4 : 42**

எதிலும் ஐயம் கொண்டு ஆராய்ந்து தெளிவது தான் அறிவுடைமை என்று பொதுவாகக் கருது கிறோம்.

ஐயம் அஞ்ஞானத்தில் தோன்றுகிறது என்கிறார் கீதாசாரியார். ஐயத்தை ஞான வாளால் அறுத்தெறிய வேண்டும் என்கிறார். ஞான வாள் என்பது என்ன? ஆராயாமல் நம்புவதா? அதற்கு ஞான வாள் என்ற பெயர் பொருந்துமா?

ஐயத்தின் நீங்கித் தெளிய வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

*எப்பொருள் எத்தன்மை தாயினும் அப்பொருள்*
*மெய்ப் பொருள் காண்ப தறிவு*

என்று ஆராய்ந்து தெளிவதையே சிறப்பாகக் கூறுகிறது திருக்குறள். ஆராய்ந்து தெளிவது

தானே அறிவாக இருக்க முடியும். ஐயம் தானே ஆராயும் முயற்சியைத் தூண்டுகிறது.

அறிதோறும் அறியாமை கண்டற்றால் என்பது குறள்.

ஒவ்வொரு முறையும் நாம் ஆராய்ந்து அறிவு பெறும் போதெல்லாம் இதுவரை நாம் கொண்டிருந்த அறியாமை புலப்படுகிறது என்கிறார் திருவள்ளுவர்.

ஐயம் கொண்டு ஆராயா விட்டால் நாம் அறிவு பெற்று, அறிவு பெறும் போதெல்லாம் முன்னிருந்த அறியாமையை உணர முடியாது.

குறளின் கருத்துக்கு நேர்மாறாக, ஐயம் அஞ்ஞானத்தால் தோன்றுகிறது என்று கீதை கூறுகிறது. அஞ்ஞானத்தை அகற்றி ஞானத்தைப் பெறுவதற்கு கருவியாக இருப்பது தான் ஐயம். ஐயம் தான் ஞானம் பெறுவதற்கு அச்சாணி என்பதை மறந்து மறுக்கிறது கீதை.

# 7

# நானே உயர்ந்தவன்

கண்ணன் பேசப் பேச அர்ச்சுனனுக்கு எதுவும் புரியவில்லை. ஒரு செய்தியைக் கூறும் போது அய்யம் அகற்றித் தெளிவு உண்டாக்குவது சிறப்பு. ஆனால், கூறக் கூறக் குழப்பம் உண்டாகிற தென்றால், கேட்பவனுக்கு அதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாமல் இருக்க வேண்டும். அல்லது, சொல்பவனுக்குத் தெளிவாகச் சொல்லத் தெரியாமல் இருக்க வேண்டும்.

இரண்டு பேரில் யாராவது ஒருவர் சரியில்லை யென்றாலும், அந்தப் பேச்சு வீண் பேச்சாகவே போய் விடும்.

சொல்லுகிறவன் ஆற்றல் வாய்ந்தவனாக இருந்தால், தான் நினைக்கிற செய்தியைக் கேட்ப வனுக்கு எளிதாக உணர்த்தி விட முடியும். பேசும் ஆற்றல் வாய்ந்தவர்கள், தங்கள் பேச்சின் மூலம் எத்தனையோ பெரிய செயல்களைச் செய்து முடித் திருக்கிறார்கள். அதனால், நாட்டுக்கும் உலகுக்குமே பல நன்மைகள் தோன்றி யிருக்கின்றன.

அந்த ஆற்றல் இல்லாதவர்கள், வாயை மூடிக் கொண்டிருந்தாலே நன்மை யுண்டாகும்.

*திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்*
*பொருளும் அதனின் ஊங்கு இல்*

என்றும்,

*சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை*
*வெல்லும் சொல் இன்மை அறிந்து*

என்றும்,

பேச்சுத் திறமை பற்றித் திருவள்ளுவர் பேசுவார்.

நெடுநேரம் கண்ணன் பேசியதைக் கேட்ட பிறகு, அர்ச்சுனன் ஒரு கேள்வி கேட்கிறான். அதிலேயே அவன் எவ்வளவுக்குப் புரியாமல், புரிந்து கொள்ள முடியாமல் தவித்துப் போயிருக்கிறான் என்பது புரிகிறது.

*கண்ணா, செய்கைகளின் துறவைப் புகழ்ந்து பேசுகிறாய்; பின்னர் அவற்றுடன் கலப்பதைப் புகழ்கிறாய். இவ்விரண்டில் எது சிறந்தது என்பதை நன்கு நிச்சயப்படுத்திச் சொல்.*
—கீதை 5 : 1

இதையும் அதையும் சொல்லி என்னைக் குழப்பாதே; எதையாவது உறுதியாகச் சொல்லித் தெளிய வை என்பது தான் அர்ச்சுனன் கேள்வியின் பொருள். அர்ச்சுனன் கேள்வி தெளிவாகவே இருக்கிறது.

இந்தக் கேள்விக்காவது உருப்படியான பதில் வருகிறதா என்று எதிர் பார்க்கிறோம்.

பதில்.

பகவான் சொல்லுகிறான்;

*துறவு, கர்மயோகம் இவ்விரண்டும் உயர்ந்த நலத்தைத் தருவன. இவற்றுள் கர்மத் துறவைக் காட்டிலும், கர்ம யோகம் மேம்பட்டது.*

—கீதை 5 : 2

*ஸாங்கியத்தையும், யோகத்தையும் வெவ்வேறென்று சொல்வோர் குழந்தைகள்; பண்டிதர் அங்ஙனம் கூறார். இவற்றில் யாதேனும் ஒன்றில் நன்கு நிலை பெற்றோன் இரண்டின் பயனையும் எய்துகிறான்.*

—கீதை 5 : 4

இடது பக்கம் போக வேண்டுமா? வலது பக்கம் போக வேண்டுமா? சரியாகச் சொல் என்கிறான் அர்ச்சுனன். இடது வலது என்று வேறு படுத்துவது அறியாமை. ஏதேனும் ஒரு பக்கம் போனால், இரண்டு பக்கமும் போன பலன் கிடைக்கும்.

இப்படி இருக்கிறது பகவான் பதில்.

தொழிலைச் செய்து கொண்டேயிரு. பலனை எதிர்பார்க்காதே. ஏதேனும் ஒரு திசையில் சென்று கொண்டேயிரு. போய்ச் சேரும் இடத்தைப் பற்றிக் கவலைப்படாதே - இப்படிப்பட்ட உபதேசங்கள் பகவத் கீதையில் தொடர்ந்து பார்க்கலாம்.

*செய்கைகளை யெல்லாம் பிரம்மத்தில் சார்த்தி விட்டுப் பற்றுதலை நீக்கி எவன் தொழில் செய்து கொண்டிருக்கிறானோ, அவன் நீரில் தாமரையிலை போல பாவத்தால் தீண்டப் பெறுவதில்லை.*

—கீதை 5 : 10

இதே கருத்தை இன்னொரு மாதிரியாகவும் கண்ணன் கூறுகிறான்.

*பிரம்மத்தில் புத்தியை நாட்டி, அதுவே தாமாய், அதில் நிஷ்டை யெய்தி, அதில் ஈடுபட்டோர், தம்முடைய பாவங் களெல்லாம் நன்கு கழுவப் பெற்றோராய், மீளாப் பதமடை கிறார்கள்.*

**—கீதை 5 : 17**

பாவங்கள் கழுவப் பெற வேண்டுமானால் மேலும் பாவச் செயல்களைச் செய்யாமல் அறவழி யில் நிற்றல் வேண்டும் என்றுதான் சான்றோர் கூறுவர்.

*தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்*

என்றும்,

*ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும் வா யெல்லாம் செயல்*

என்றும் ஒரு நல்ல வழியை வள்ளுவர் காட்டுகிறார்.

கண்ணனோ, பாவம் நீங்க பிரமத்தில் புத்தியை நாட்ட வேண்டும் என்கிறான்.

மேலும் அர்ச்சுனனை யோகி யாகும்படி கூறுகிறான்.

அர்ச்சுனன் மனத்தைக் கட்ட முடியாது என்றும் அது மிக அரிய செயல் என்றும் கூற, பழக்கத்தாலும் விருப்பமின்மையாலும் கட்டி விடலாம் என்கிறான்.

ஒருவன் யோகத்தில் முயல வேண்டும் என்றும், பல பிறவிகளில் முயன்றால் அதன் பயனாகப் பரகதியை அடையலாம் என்றும் கூறுகிறான்.

பரமாத்மாவான அவனல்லாத மற்ற எளிய ஆத்மாக்கள் தங்கள் முற்பிறப்பு, பிற்பிறப்பு பற்றிய செய்திகளை அறிய இயலாது என்று கூறியிருக்கிறான்.

அப்படியிருக்கும் போது பிறவிதோறும் தொடர்ந்து முயற்சி செய்வது எப்படி என்பதற்கு விளக்கம் இல்லை.

ஆத்மாக்கள், பரமாத்மாவான தன்னையே இறுதியில் வந்து அடைய வேண்டும் என்கிறான்.

பரமாத்மாவான தன் பெருமைகளைக் கூறத் தொடங்குகிறான்.

தன்னை மிக உயர்ந்தவனாகக் கூறிக் கொள்கிறான்.

உலகில் உள்ள ஒவ்வொரு பொருளிலும் தானே உயர்ந்த பொருள் என்பதைப் பல எடுத்துக் காட்டுகளால் கூறுகிறான்.

வேதங்களில் கூறப்படும் பிரணவம் தானே என்கிறான்.

யோகிகளின் தவமாகவும், ஆண்களின் ஆண்மையாகவும், வானில் ஒலியாகவும், ஒளியாகவும், அறிவாகவும், வலிமையாகவும், உயிர்களின் மூச்சாகவும் இப்படி ஒவ்வொன்றின் உயர் தன்மையாகவும் தான் இருப்பதாகக் கூறிக் கொள்கிறான்.

தானே உலகத்தின் தாயும் தந்தையும் எல்லாமாகவும் இருப்பதாகச் சொல்கிறான்.

மூன்று வேதங்களும் தானே என்று கூறுகிறான். (பகவத் கீதை தோன்றிய காலத்தில் நான்காவது வேதம் தோன்றவில்லை)

உலகத்தின் தொடக்கமும் முடிவும் தானே என்கிறான்.

இயற்கை சக்திகள் அனைத்தும் தானே என்கிறான்.

மீண்டும் மீண்டும் தான் எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்பதைப் பல எடுத்துக் காட்டுகளால் கூறிக் கொள்கிறான்.

மரங்களில் அரசமரம், குதிரைகளில் உச்சைசிரவம், யானைகளில் ஐராவதம், பசுக்களில் காமதேனு, அனந்தன், வருணன், யமன், விலங்குகளில் சிங்கம், மீன்களில் சுறா, ஆறுகளில் கங்கை. பருவங்களில் இளவேனில், மாதங்களில் மார்கழி, எழுத்துக்களில் அகரம், புகழ், பிறப்பு, மரணம் எல்லாம் தானே என்று தன்னை மிக உயர்ந்த பொருள் என்று கூறி முடிக்கிறான்.

தன்னை வந்து அடைந்தவர்களுக்கு, மறு பிறப்பு இல்லை என்றும், உயிர்கள் தன்னை வந்து அடைவதே இறுதி யென்றும் கூறுகிறான்.

*எதெது பெருமையுடைத்து, எதெது உண்மை யுடைத்து எதெது அழகுடைத்து, எதெது வலிமை யுடைத்து அது வெல்லாம் என் ஒளியின் அம்சத்தில் பிறந்ததென்று உணர்வாயாக.*

—கீதை 10:41

இவ்வளவு பெருமையுடைய தன்னை வணங்க வேண்டும் என்றும், தன்னை யடைய வேண்டும் என்றும் அர்ச்சுனனுக்குக் கூறுகிறான்.

*மனத்தை எனக்காக்கி விடு. பக்தியை எனக்காக்கு; என்னைத் தொழு; என்னைப் பரமாகக் கொள். இங்ஙனம் இயற்றும் தற்கலப்பு யோகத்தால் என்னை எய்துவாய்.*

— கீதை 9 : 34

ஆகப் பிறப்பெடுத்தவர்களின் இறுதி இலட்சியம் பரம் பொருளாகிய தன்னை அடைவதே என்று கூறி முடிக்கிறான்.

# 8
# கண்ணன் பேருருவம்

இதுவரை ஐயம் கொண்டு கேள்விகளைக் கேட்டுக் கொண்டு வந்த அர்ச்சுனன், தன் ஐயம் தீர்ந்து விட்டதாகக் கூறுகிறான். கண்ணன் பெருமையை அறிந்து விட்டதாகக் கூறுகிறான்.

ஒருவனைப் பற்றி அறியும் முன் ஐயம் கொண்டு ஆராய வேண்டும். அவனை நன்கு அறிந்த பிறகு அவன் மீது சிறிது கூட ஐயம் தோன்றக் கூடாது.

இங்கே அர்ச்சுனன் கண்ணன் பெருமையை உணர்ந்து விட்டதாகக் கூறுகிறான். அதே சமயம் கண்ணனுடைய கடவுள் வடிவத்தைக் காண வேண்டும் என்று கூறுகிறான்.

நேரில் பார்த்தால் ஒழிய நம்ப மாட்டேன் என்பதை அர்ச்சுனன் நயமாகக் கூறுகிறான். இதிலிருந்து அவன் ஐயம் அறவே தெளியவில்லை என்பது தெரிகிறது.

அவன் அய்யத்தைத் தவிர்க்க முன் வருகிறான் கண்ணன். தன் கடவுள் வடிவத்தைக் காட்ட ஒப்புக் கொள்கிறான்.

அர்ச்சுனன் ஊனக் கண்ணால் அந்த வடிவத்தைப் பார்க்க இயலாது என்பதால் அவனுக்குக் கண்ணன் ஞானக் கண் ஒன்றைக் கொடுக்கிறான்

கடவுளுக்கு உருவம் இல்லை என்ற கொள்கையுள்ளவர்கள் இங்கே கண்ணையும் கருத்தையும் மூடிக் கொள்ள வேண்டும்.

கடவுளுக்கு உருவம் உண்டு; அதை ஞானக் கண்ணால் தான் பார்க்க முடியும்; அந்த ஞானக் கண்ணைத் தரும் சக்தி படைத்தவன் கண்ணன் ஒருவனே என்பதை ஒப்புக் கொண்டவர்கள் தான் கீதையை ஒப்புக் கொள்ள முடியும்.

ஏற்கெனவே கீதை முதல் அத்தியாயத்தில் சஞ்சயனுக்கு ஞானக் கண்ணை வியாச முனிவர் கொடுத்திருக்கிறார். வியாச பகவான் என்று அழைக்கப்படும் அவர் அருளிய ஞானக் கண்ணுக்கும், கண்ணன் அர்ச்சுனனுக்குக் கொடுக்கும் ஞானக் கண்ணுக்கும் ஒரு வேற்றுமை யுண்டு. வியாசர் அருளிய ஞானக் கண் தொலை தூரத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் காணவும் கேட்கவும் கொடுக்கப் பட்டது. கண்ணன் பார்த்தனுக்குக் கொடுக்கும் ஞானக் கண் கடவுள் வடிவத்தைக் காணத் துணைபுரிவது.

போர்க் களத்திலே இரண்டு படைகளுக்கும் நடுவிலே கண்ணனும் பார்த்தனும் இருக்கிறார்கள். அந்த நிலையில் அங்கு போர் செய்ய அணியமாக

நிற்கும் அத்தனை பேருக்கும் நடுவிலே, போர் தொடங்கி விட்டதற்கு அறிகுறியாக அம்புகள் பறந்து கொண்டிருக்கும் நிலையிலே, கண்ணன் தன் கடவுள் வடிவத்தை அர்ச்சுனனுக்கு மட்டும் இரகசிய மாகக் காட்டிக் கொண்டிருக்கிறான். இந்த இரகசிய ஏற்பாட்டுக்குத் தான் ஞானக்கண் பயன்பட்டிருக் கிறது.

ஊனக் கண் மட்டுமே படைத்த அத்தனை படை களாலும் பார்க்க முடியாத கண்ணன் வடிவத்தை அர்ச்சுனன் மட்டும் ஞானக் கண்ணால் பார்க்கிறான்.

அர்ச்சுனன் பார்த்த அந்த ஞானக் காட்சியை நாமும் அறிந்து கொள்ளுமாறு வியாசர் பகவத் கீதையில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

நாமும் அர்ச்சுனன் பார்த்த அந்தக் காட்சியைக் காணப் பின்வரும் சுலோகங்கள் உதவுகின்றன.

*அர்ச்சுனா, இன்று, இங்கே என் உடலில் சராசரமான உலக முழுவதும் ஒருங்கு நிற்பதைப் பார்! இன்னும் வேறு எதைக் காண விரும்பினும் அதை இங்கே பார்.*

**—கீதை 11 : 7**

*உன்னுடைய இயற்கையான இந்தக் கண்களால் என்னைப் பார்க்க முடியாது. உனக்கு ஞானக் கண் கொடுக் கிறேன். என்னுடைய ஈசுவர யோகத்தைப் பார்.*

**—கீதை 11 : 8**

யோகம் என்ற சொல்லை வியாசர் பல பொருள் களில் கையாளுகிறார். இங்கே யோகம் என்றால் வடிவம் என்று பொருள் கொள்ள வேண்டும்.

வியாச பகவானால் ஏற்கனவே ஞானக் கண் பெற்ற சஞ்சயன், அர்ச்சுனன், புதிதாக ஞானக் கண் பெற்றுப் பார்த்த காட்சிகளையும் பார்த்து திருதராட்டிரனுக்கு விளக்கிச் சொல்லுகிறான்.

கண்ணன் அருளினால் அர்ச்சுனன் கண்ட காட்சிகள், வியாசர் அருளால் ஞானக் கண் பெற்ற சஞ்சயனுக்கும் தெரிந்து அதை அவன் திருதராட்டிரனுக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

இந்த இரண்டு பேரும் தவிர வேறு யாரும் கடவுள் வடிவத்தைக் கண்டதில்லை என்று கூறலாம்.

இனி அர்ச்சுனனுக்குக் கண்ணன் காட்டிய கடவுள் வடிவம் எப்படிப் பட்டது என்று சஞ்சயன் திருதராட்டிரனுக்குச் சொல்லுவதைப் பின்வரும் சுலோகங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

*அவ்வடிவம் பல வாய்களும் பல விழிகளுமுடையது. பல அற்புதக் காட்சிகளுடையது. பல திவ்யாபரணங்கள் பூண்டது. பல தெய்விகப் படைகள் ஏந்தியது.*

**—கீதை 11 : 10**

*அர்ச்சுனன் சொல்கிறான்:*

*தேவனே, நின் உடலில் எல்லாத் தேவர்களையும் காண்கிறேன். பூத வகைகளின் தொகுதிகளைக் காண்கிறேன். தாமரை மலரில் வீற்றிருக்கும் ஈசனாகிய பிரமனையும், எல்லா ரிஷிகளையும் தேவ ஸர்ப்பங்களையும் இங்கு காண்கிறேன்.*

**—கீதை 11 : 15**

*பல தோளும், பல வயிறும், பல வாயும், பல விழிகளுமுடைய எல்லையற்ற வடிவிலே நின்னை எங்கணும் காணுகி*

*றேன். எல்லாவற்றுக்கும் ஈசனே, எல்லாந் தன் வடிவாகக் கொண்டவனே, உனக்கு முடிவேனும், இடையேனும், தொடக்கமேனும் காண்கிலேன்.*

—கீதை 11 : 16

ஏற்கெனவே தான் எல்லாரையும் கொன்று முடித்து விட்டதாகவும், அர்ச்சுனன் இனிமேல் போர் புரிந்து கொல்லப் போவது கண்ணன் முடித்துவிட்ட செயலை வெளிக் காரணமாக நடத்திக் காட்டத்தான் என்றும், ஆகையால் உன் குலத் தொழிலைச் செய், அதாவது போர் செய் என்றும் கண்ணன் கூறுகிறான்.

அர்ச்சுனன் மெய் நடுங்குகிறான். தேவ தேவனாகிய ஒருவனை அதுவரை தோழன் என்று கருதி-செய்த செயல்களை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறான்.

கண்ணனுடைய தெய்வ வடிவத்தைக் காண விரும்பிய அர்ச்சுனன் அந்தக் கோர வடிவத்தைக் கண்டு அஞ்சிச் சோர்ந்து, பார்த்தது போதும் என்று கலங்கி மானிட வடிவத்தை மீண்டும் எடுக்கும்படி வேண்டுகிறான்.

*இப்படிப்பட்ட என் கோர வடிவத்தைக் கண்டு கலங்காதே! மயங்காதே! அச்சம் நீங்கி இன்புற்ற மனத்துடன் என் முன்னை வடிவத்தைப் பார்.*

—கீதை 11 : 49

இப்போது அர்ச்சுனன் கண்ணன் தான் எல்லாமாகிய கடவுள் என்பதை உணர்ந்து அவன் பக்தனாகி விடுகிறான்,

பக்தனாகி விட்ட அர்ச்சுனனுக்கு கண்ணன் சொல்லுகிறான்.

*என்னை நீ கண்டபடி இவ்விதமாக வேதங்களாலும் தவத்தாலும், தானத்தாலும், வேள்விகளாலும் காண இயலாது.*

**—கீதை 11 : 53**

வேதங்களாலும், வேள்விகளாலும் காண முடியாத இந்தப் பயங்கரக் காட்சியை, அர்ச்சுனன் மட்டும் காண என்ன தகுதி பெற்றிருந்தான் என்பதை அவன் சொல்ல வில்லை.

ஆனால், யாரால் பார்க்க முடியும் என்பதை அடுத்த சுலோகத்தில் சொல்லுகிறான்.

*பிறிதிடம் செல்லாத பக்தியால் மாத்திரமே என்னை இவ்விதமாக அறிதலும், உள்ளபடி காணுதலும், என்னுள் புகுதலும் இயலும்.*

**—கீதை 11 : 54**

அர்ச்சுனன் இப்போது முழுக்க முழுக்க, கிருஷ்ண பக்தன் ஆகிவிட்டான்.

அவனுக்கு பக்தியின் பெருமையைக் கண்ணன் பலவிதமாக எடுத்துக் கூறுகிறான்.

பக்தர்களின் சிறந்த பண்புகளை எல்லாம் எடுத்துக் கூறுகிறான்.

சமநோக்கு உள்ளவனே சிறந்த பக்தன் என்கிறான்.

பகைவன்—நண்பன்

மானம்—அவமானம்

குளிர்—வெப்பம்

இன்பம்—துன்பம்

புகழ்—இகழ்

இவற்றை யெல்லாம் சமமாகக் கருதவேண்டும்.

மகனையும் மனைவியையும் வீட்டையும் தன் உடைமை என்று கருதாதவனும் பற்றில்லாதவனுமே இந்த சமநோக்கு உடையவன் ஆக முடியும் என்கிறான்.

*ஆகாசம் எங்கும் இருந்தாலும், தன் நுண்மையால் பற்றற்று நிற்பதுபோல் உடம்பில் ஆத்மா எங்கும் இருந்தாலும் பற்று உறுவதில்லை.*

—கீதை 13 : 33

# 9

# பிரிவுகளும் பாவங்களும்

மனிதர்களை அவர்கள் குணங்களைக் கொண்டு மூன்று விதமாகப் பிரிக்கிறான்.

சத்வம்

ரஜஸ்

தமஸ்

என்று இந்தக் குணங்களுக்குப் பெயர் சூட்டுகிறான்.

சத்வம் என்பது ஞானத்தால் ஒளி பெறுவது.

ரஜஸ் குணம் என்பது அவாவினால் துன்பம் அடைவது.

தாமச குணம் சோம்பலால்—அஞ்ஞானத்தால் மயக்க மடைவது.

இந்த மூன்று குணங்களையும் கடந்து, பிறப்பு, சாவு, மூப்பு, வருத்தம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டோன் அமிர்த நிலை அடைகிறான். அவனுக்குப் பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை.

இந்த வேறுபாடுகள் இல்லாத பக்தன் பிரமத் தன்மை அடைகிறான்.

அந்தப் பிரமம் நானே என்று கண்ணன் தன்னைப் பெரிய கடவுளாக அறிமுகப் படுத்துகிறான்.

ஒருவன் தொழில் செய்வதற்கு ஒரு கட்டுப்பாட்டை விதித்திருக்கிறான் கீதைக் கண்ணன்.

*சாஸ்திர விதியை மீறி, விருப்பத்தால் தொழில் புரிவோன் சித்தி பெறான். அவன் இன்பமெய்தான். பரகதியடையான்.*

—கீதை 16 : 23

*ஆதலால் எது செய்யத் தக்கது. எது செய்யத் தகாதது என்று நிச்சயிப்பதில் நீ சாஸ்திரத்தைப் பிரமாணமாகக் கொள். அதை யறிந்து சாஸ்திர விதியால் கூறப்பட்ட தொழிலைச் செய்யக் கடவாய்.*

—கீதை 16 : 24

இப்படி ஒரு கட்டுப்பாடு விதித்து விட்டால், நான்கு வர்ணங்களையும் கட்டிக் காக்க முடியும். அவனவன் குலத் தொழில் என்ற போர்வையில் எவனும் முன்னேறி விட முடியாமல் தடுத்து விட முடியும். மேலாதிக்க முடையவர்கள் கீழ் நிலையில் உள்ளவர்களை எப்போதும் அடக்கி ஆண்டு கொண்டிருக்கலாம்.

விடா முயற்சியும் ஊக்கமும் கொண்டவர்கள், மேற் குலத்தாரின் தொழில்களைக் கற்றுக் கொண்டு முன்னேறி விடாமல் தடுக்க இந்த சாஸ்திர ஏற்பாடு சரியான முட்டுக் கட்டையாக இருக்கும்.

கீதை உபதேசம் என்ற பெயரில் கண்ணன் இங்கே நல்ல சூழ்ச்சியைக் கையாண்டிருக்கிறான்

சூழ்ச்சி தொடருகிறது.

மேலும் விளக்கமாகச் சொல்லுகிறான்.

*பிறர்க்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும் தனக்குரிய தர்மத்தைக் குணமின்றிச் செய்தலும் நன்று. இயற்கையில் ஏற்பட்ட தொழிலைச் செய்வதனால் ஒருவன் பாவமடைய மாட்டான்.*

—கீதை 18 : 47

இதன் பொருள் என்ன?

உழுபவன் நன்றாக உழா விட்டாலும் தவறில்லை. உழுபவன் பயிற்சி பெற்று குருவாகி, குரு செய்ய வேண்டிய தொழிலை, அதாவது ஆசிரியத் தொழிலைச் சிறப்பாகச் செய்தாலும் அது பாவமாகும்.

முடி வெட்டுபவன் நன்றாக வெட்டா விட்டால் தவறாகாது. அவனே, எஞ்சினியராகி, அதில் திறமையாக வேலை செய்தாலும் அது பாவமாகும்.

இப்படி ஒரு சாஸ்திரத்தைச் சொல்லி விட்டால், அதை மீறுபவன் நரகம் அடைவான் என்றும் எழுதி வைத்து விட்டால், எவனாவது முன்னேற நினைப்பானா?

நான்கு வருணங்களையும் அவற்றிற்குரிய தொழில்களையும் கண்ணன் தெளிவாகக் கூறுகிறான்.

*பரந்தபா! பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், இவர்களுடைய தொழில்கள் அவரவரின் இயல்பில் விளையும் குணங்களின் படி வகுப்புற்றனவாம்.* —கீதை 18 : 41

*அகக் கரணத்தை அடக்குதல், புறக் கரணத்தை யடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், கல்வி, ஆஸ்திகம்—இவை இயல்பிலே தோன்றும் பிராமண கர்மங்களாம்.* —கீதை 18 : 42

*சூரத் தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, ஈகை, இறைமை—இவை இயற்கையிலே தோன்றும் சத்திரிய குணங்களாம்.* —கீதை 18 : 43

*உழவு, பசுக் காத்தல், வாணிகம், இவை இயற்கையிலே பிறக்கும் வைசிய கர்மங்களாம்.*

*தொண்டு புரிதல் சூத்திரனுக்கு அவனியற்கையால் ஏற்பட்ட தொழில்.* —கீதை 18 : 44

இவ்வளவும் கூறி அர்ச்சுனனை அவனுடைய தொழிலான போரைச் செய்யும்படி அறிவுரை கூறுகிறான் கண்ணன். அப்படிப் போர் செய்யும் போது கண்ணன் அருளால் எல்லாத் தடைகளையும் கடந்து செல்வான் என்று உறுதி கூறுகிறான். கண்ணன் பேச்சைக் கேளாமல், அகங்காரத்தால் மறுப்பானாகில் பெரிய நாசத்தை அடைவான் என்றும் பயமுறுத்துகிறான்.

அப்படி மீறிப் போர் புரியாமல் இருக்க முயன்றாலும், இயற்கை அவனைப் போர் செய்ய இழுத்துச் செல்லும் என்றும், அதிலிருந்து தப்ப முடியாது என்றும் எச்சரிக்கிறான்.

கடைசியாக ஒரு கருத்தைச் சொல்கிறான்:

*எல்லா அறங்களையும் விட்டுவிட்டு என்னையே சரண் புகு, எல்லாப் பாவங்களினின்றும் நான் உன்னை விடுவிக்கிறேன். துயரப் படாதே.* —கீதை 18 : 66

பக்தியிருந்தால் போதும் அறச் செயல் செய்ய வேண்டியதில்லை. பாவங்கள் விலகிவிடும்.

இப்படிப்பட்ட கருத்து நாட்டில் எத்தனை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று வரை சமயத் தலைவர்கள் என்போர் பக்தியை வளர்க்கிறோம் என்ற பெயரால், நாட்டில் பரப்பி வருகின்ற கீதைகள், புராணங்கள், இதிகாசங்கள், சொற்பொழிவுகள், கருத்துரைகள் எல்லாம் மனிதனைத் தவறான பாதைக்கு இழுத்துச் செல்லுகின்றன என்பதை அந்தக் கதைகளைப் படித்தாலே புரியும்.

தொன்று தொட்டு நாட்டைக் குட்டிச் சுவராக்கி வருகின்ற இந்தக் கதைகள் — புராணங்கள், மனித குலத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் எவ்வளவு தூரம் பாதித்திருக்கின்றன என்று எண்ணிப் பார்த்தால் நல்லவர்களின் இதயங்கள் வெடித்து விடும்.

கீதை—நாகரிக மனப்பான்மைக்கு வேட்டு வைக்கும் நூல். கடவுள் பக்தி என்ற பெயரால் மனித குலத்தை வேறு படுத்திக் கூறுபடுத்தி ஊறு படுத்தும் ஒரு கருவியாகவே உள்ளது என்பதை உணரலாம்.

# 10

# கீதை காட்டும் கடவுட் கொள்கை

கடவுள் உண்டா இல்லையா என்பது ஆத்திக நாத்திக வாதம் ஆகும். இந்த வாதத்திற்கு முடிவு என்பது கிடையாது.

இல்லை என்பவர்கள் எல்லாம் இயற்கை என்று கூறி முடிவு கட்டி விடுவார்கள். உண்டு என்பவர் களோ, ஆக்குவோன் ஒருவன் இல்லாமல் ஆக்கப்படு பொருள் இல்லை என்று கூறி உலகத்தையும், உலகில் உள்ள உயிர் வாழ்வன அல்லன அனைத் தையும் அண்ட கோளங்கள் அனைத்தையும் உண்டாக்கி, அவற்றிற்குக் கால வரையறை காட்டிக் கட்டிக் காத்து, இறுதியில் அழித்துத் துடைத்து விளையாடுவது இறைவன் பொழுது போக்கு என்று கூறுவார்கள்.

கம்பர்

*உலகம் யாவையும் தாமுள வாக்கலும்*
*நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட் டுடையா ரவர்*
*தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!*

என்று கடவுள் வாழ்த்துப் பாடுவார்.

ஆக்கல் காத்தல் அழித்தல் என்ற முத்தொழில்களை இறைவன் செய்வதாகக் கூறலாம்.

சிவ பெருமான் பிறப்பு இல்லாதவன் என்றும், மிக்க அருள் உடையவன் என்றும், இறப்பு இல்லாதவன் என்றும், எல்லார்க்கும் இன்பம் அருள்பவன் என்றும் திருமூலர் குறிப்பிடுவார்.

*மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க*
*அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க*
*பந்தமும் வீடும் படைப்போன் காண்க*
*கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க*

இவ்வாறு திருவாசகம் இறைவன் இயல்பைக் கூறும்.

*எல்லாம் செய வல்லதெய்வம்*
*எங்கும் நின்ற தெய்வம்*
*என்னுயிரில் கலந்தெனக்கே*
*இன்ப நல்கும் தெய்வம்*
*நல்லார்க்கு நல்ல தெய்வம்*
*நடுவான தெய்வம்*
*நற்சபையில் ஆடுகின்ற*
*நடராசத் தெய்வம்*

என்று வள்ளலார் தெய்வத்தை வடித்துக் காட்டுவார்.

உலகின் முதல் தலைவன்
மிக்க அறிவுடையவன்
இதயத் தாமரையில் உள்ளவன்
விருப்பு வெறுப்பற்றோன்
நன்மை தீமை யில்லாதவன்

ஐம்புல உணர் வழித்தோன்
தனக்குவமை யில்லாதவன்
அற வடிவானவன்
எண் குணத்தான்
இறைவன்

என்று திருவள்ளுவர் இறைவனைப் படம் பிடித்துக் காட்டுவார்.

இப்படிப் பலவிதமாகத் தத்தமக்குத் தோன்றிய பொதுத் தன்மையுள்ள இறைவனை எல்லாரும் காட்டுவார்கள்.

கீதையில் கண்ணன் தன்னையே தெய்வமாகக் காட்டுகின்றான். அப்படி அவன் காட்டும் தெய்வ நிலை தெளிவற்றதாகவும், இன்னதென்று வரையறுக்க முடியாததாகவும் உள்ளது.

இதை இங்கு விரிவாகக் காணலாம்.

புராணங்களில் காட்டப்படும் தெய்வங்கள் அளவு இழி நிலையற்றதாக இருந்தாலும், கீதைக் கண்ணனின் தெய்வ நிலை தெளிவற்றதாக உள்ளது.

பாரதத்தில் கண்ணன் பல அதிசயங்கள் புரிந்ததாகக் கூறப்படுகிறது. இந்த அதிசயங்களை வைத்து அர்ச்சுனன் கண்ணனைத் தெய்வமாக மதித்ததாகத் தெரியவில்லை.

ஏனெனில் கீதையில் கண்ணன் தன்னைப் பற்றிச் சொல்லச் சொல்ல அர்ச்சுனன் அவன்

தெய்வத் தன்மையை உணர்ந்தது போலப் பேச வில்லை. கடைசியில் பத்தாவது அத்தியாய முடிவில் தான், அவன் முழுமையாக உணர்ந்து கொண்ட தாகப் பேசுகிறான்.

இரண்டாவது அத்தியாயத்தில் கண்ணன் குறிப்பாகத் தன் தெய்வத் தன்மையை உணர்த்தத் தொடங்குகிறான்.

*இந்திரியங்களை எல்லாம் அடக்கி, யோகத்தில் அமர்ந்த வனாய், என்னைப் பரமாகக் கொண்டு, புலன்களை வசப் படுத்தி வைத்திருப்பவன் எவனோ, அவனுடைய அறிவே நிலை கொண்டது.*

கீதை 2 : 61

இங்கேதான் தான் பரம்பொருள் என்பதை கீதையில் முதன் முதலாகக் குறிப்பிடுகிறான்.

பிரமஸ்திதி என்பதாக ஒரு நிலையைக் குறிப் பிடுகிறான். இந்த பிரமஸ்திதியை அடைய ஆசை களையும் இன்பங்களையும் துறந்து யான் எனது என்பதை அகற்றி சாந்தி நிலை யடைவதே பிரமஸ் திதி என்கிறான். இந்த நிலையை யடைந்தவன் இறுதியில் பிரம நிர்வாணம் எய்துவான் என்கிறான்.

பற்றில்லாமல் தொழில் செய்து கொண்டிருப்ப வன் பரம் பொருளை எய்துகிறான் என்றும் கண்ணன் சொல்கிறான்.

பிரமஸ்திதி என்றும் பரம் பொருள் என்றும் படர்க்கையில் மூன்றாவது இடமாக வைத்துப் பேசிக் கொண்டிருந்த கிருஷ்ணன்,

தான் தொழில் செய்யா விட்டால் மக்கள் எல்லோரும் அழிந்து போவார்கள்; அதனால் சோம்பல் இல்லாமல் தான் தொடர்ந்து தொழில் செய்து கொண்டிருப்பதாகக் கூறுகிறான். இங்கு தானே பரம் பொருள் என்று சொல்லிக் காட்டுகிறான். இவ்வளவு வெளிப்படையாகப் பேசியும் அர்ச்சுனன் அவனைப் பரம் பொருளாக அறிந்து கொள்ள வில்லை.

ஞான யோகத்தைத் தான் விவஸ்வானுக்குச் சொன்னதாகக் கிருஷ்ணன் கூறுகிறான். அப்போது அர்ச்சுனன் குறுக்கிட்டு, 'விவஸ்வான் முன்பு இருந்தவன்; நீ இப்போது பிறந்தவன். அப்படி யிருக்க நீ எப்படி விவஸ்வானுக்குக் கூற முடியும்!' என்று கேட்கிறான்.

அப்போது கிருஷ்ணன் மிக விளக்கமாகத் தான் தான் கடவுள் என்பதை எடுத்துச் சொல்லுகிறான்.

*அர்ச்சுனா? எனக்குப் பல பிறப்புக்கள் கழிந்திருக்கின்றன. உனக்கும் அப்படியே. நான் அவற்றை யெல்லாம் அறிவேன். நீ அறிகிலை.*

**—கீதை 4 : 5**

*பிறப்பற்றேன் எனினும், அழிவற்றேன் எனினும், உயிர் களுக்கெல்லாம் ஈசனே எனினும், யான் எனது பிரகிருதியில் நிலை பெற்று, ஆத்ம மாயையால் பிறப்பெய்துகிறேன்.*

**—கீதை 4 : 6**

*பாரதா, எப்போதெப்போது தர்மம் அழிந்து போய் அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்கிறேன்.*

**—கீதை 4 : 7**

*நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்.*

**—கீதை 4 : 8**

*யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ, அவர்களை நான் அங்ஙனமே அறிகிறேன்.*

**—கீதை 4 : 11**

*எந்த எந்த பக்தன் நம்பிக்கையுடன் எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகிறானோ, அவனவனுடைய அசையாத நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன்.*

**—கீதை 4 : 91**

கிருஷ்ணன் தன் கடவுள் தன்மையை அர்ச்சுனனுக்கு விளக்க முயன்ற சுலோகங்களை மேலே காணுகிறோம்.

கிருஷ்ணனுடைய கருத்துப்படி ஆத்மா என்பது அழிவதில்லை, உடல் தான் அழிகிறது. ஆத்மாவுக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை.

அர்ச்சுனன் போன்ற மக்கள் சாதாரண ஆத்மாக்கள். கண்ணன் பரமாத்மா. ஆத்மாக்களுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள ஒரே வேற்றுமை ஆத்மாக்களுக்குத் தம் பிறப்புகள் பற்றி அறியும் ஆற்றல் கிடையாது. பரமாத்மாவாகிய கிருஷ்ணனுக்கு அந்த ஆற்றல் உண்டு.

தன்னுடைய பழம் பிறப்புக்களையும் இனிவரும் பிறப்புக்களையும் அவன் அறிவான். மேலும், ஆத்மாக்கள் தம் இச்சைப்படி பிறப்பதில்லை.

அவற்றின் கர்மங்களுக்குத் தக்கபடி பிறப் பெய்துகின்றன. கிருஷ்ணனோ, தன்னைத்தானே தன் எண்ணப்படி பிறப்பித்துக் கொள்கிறான். இதற்கு அவனிடம் உள்ள ஆத்ம மாயை என்ற சக்தி துணை புரிகிறது.

இந்த அடிப்படையில் பகவத் கீதையில் வரும் சுலோகங்களில் அவன் தன்னைப் பற்றிக் கூறும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்கும் போது அவனே தன் பிறப்புக்களைப் பற்றி அறியாதவனாக இருந்திருக்கிறான் என்பது தெரிகிறது.

பல செய்திகளை அவன் அறியாதவனாக இருந்திருக்கிறான் என்பது புரிகிறது.

யுகந்தோறும் நான் பிறக்கிறேன் என்று கூறு கிறான். அப்படியானால் அவன் பல பிறப்புக் களை – கணக்கில் அடங்காத பல பிறவிகளை அடைந்திருக்க வேண்டும். ஆனால், விஷ்ணுவாகிய அவன் மொத்தம் பத்துப் பிறப்புக்களை உடையவன் என்றும் அதில் பத்தாவது பிறப்பை இன்னும் அவன் எடுக்கவில்லை என்றும், ஒன்பதாவது பிறப்பையே கிருஷ்ணன் அடைந்திருக்கிறான் என்றும் புராணங் கள் கூறுகின்றன.

புராணங்களின் கூற்றுப்படி ஒன்பதாவது பிறப்பை அடைந்துள்ள கிருஷ்ணன், முந்திய தன் பிறப்புகளைப் பற்றி அறிந்திருப்பதாக கீதையின் மூலம் அறிய முடியவில்லை. ஏனெனில் தான்

அடைந்த முந்திய பிறப்புகளைப் பற்றி கிருஷ்ணன் எவ்விதத் தகவலும் கொடுக்கவில்லை.

ஒரே ஓர் இடத்தில் இராமனைப் பற்றிக் குறிப்பிடுகிறான். அந்த இடத்திலும் முன் தான் இராமனாகப் பிறந்ததாகக் குறிப்பிடவில்லை.

ஒவ்வோர் இனத்திலும் சிறந்து விளங்கும் பொருள்கள், பறவைகள், விலங்குகள், மக்கள், தேவர், அசுரர் ஆகியவை தானே என்று அடுக்கிக் கொண்டு போகும் போது,

அசுரரில் பிரகலாதன் யான்
இயங்குவனவற்றில் காலம் யான்
விலங்குகளில் சிங்கம் யான்
பறவைகளில் கருடன்
தூய்மை செய்வனவற்றுள் காற்று
படை தரித்தோரில் இராமன்
மீன்களில் சுறா
ஆறுகளில் கங்கை

என்று தன்னை, படைக்கலங்களைக் கையாளும் சிறந்த வீரனான இராமனுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறானே தவிர, முற்பிறப்பில் நான் இராமனாகப் பிறந்தேன் என்று குறிப்பிடவில்லை.

மகா விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்பதாவது அவதாரமாகக் கிருஷ்ணனைப் புராணங்கள் கூறுகின்றன.

பகவத் கீதையில்தான் தன் பிறப்புக்களைப் பற்றி அறிந்தவன் என்று கூறிக் கொள்ளும் கிருஷ்ணன் ஓர் இடத்தில் கூட

நான் மீனாகப் பிறந்திருக்கிறேன்,
ஆமையாய்ப் பிறந்திருக்கிறேன்
பன்றியாகப் பிறந்திருக்கிறேன்
மனிதச் சிம்மமாகப் பிறந்திருக்கிறேன்
குள்ள வடிவோடு பிறந்திருக்கிறேன்
பரசுராமனாகவும்
இராமனாகவும்
பல்ராமனாகவும்

ஏற்கனவே பிறந்திருக்கிறேன் என்று குறிப்பிட வில்லை.

இதிலிருந்து இந்தப் பிறப்புக்களைப் பற்றி அவன் அறிந்திருக்க நியாயமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

ஒரு சுலோகத்தில்
ஓங்காரம் நான்
ரிக் நான்
சாமம் நான்
யஜுர் நான்

என்று தானே மூன்று வேதங்களாகவும் இருப்பதாகக் கூறுகிறான்.

அதர்வண வேதம் என்று ஒன்று பின்னால் தோன்றப் போவதை அவன் அறியாத காரணத்தால் அதைக் குறிப்பிடவில்லை.

பகவத் கீதை பிறந்த காலத்தில் மூன்று வேதங்களே தொகுக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த மூன்று வேதமாகவும் நான் இருக்கிறேன் என்று கூறுகிறான்.

முதல் வேதமான ரிக்கில், கிருஷ்ணனைப் பற்றி எந்த குறிப்பும் இல்லை.

கிருஷ்ணனுக்கும், மற்ற அவதாரங்களுக்கும் மூலமாகப் பேசப் படுகின்ற விஷ்ணுவைப் பற்றி ரிக்கில் குறிப்பிடப் படுகிறது.

ரிக்கில் விஷ்ணு பரம் பொருளாகப் பேசப்படவில்லை. பிரம்மமாகவும் குறிப்பிடப் படவில்லை.

ரிக் வேதத்தில் பிரமமம் பற்றியோ, முழுமுதற் பொருளான பரம் பொருள், பரமாத்மா என்பவை பற்றியோ எந்தச் செய்தியும் இல்லை.

பிரம்மம் என்றோ, பரப்பிரம்மம் என்றோ, பரம் பொருள் என்றோ இன்று நாம் பேசுகின்ற தனிப் பெருங் கடவுள் அல்லது மூலப் பொருள் ஒன்று இருந்ததாகவோ, இருக்கிறதாகவோ, இருக்கப் போவதாகவோ, ரிக் வேத சுலோகங்களைப் பாடிய ரிஷிகள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

விஷ்ணுவை தேவர்களில் ஒரு தேவனாகவே இந்த ரிக் குறிப்பிடுகிறது.

ரிக்கில் அக்கினி தேவனுக்கும், இந்திரனுக்கும் தான் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

விஷ்ணுவை நூற்றோடு நூற்றியொன்றாக ஒரு சாதாரணத் தேவனாகவே சித்தரிக்கப் பட்டுள்ளது.

புராணங்கள் விஷ்ணு இருக்கும் இடம் வைகுண்டம் என்று கூறுகின்றன.

ரிக் வேதம் இந்திரனின் உலகமே வைகுண்டம் என்று குறிப்பிடுகிறது.

விஷ்ணு இந்திரனின் நண்பன் என்றும், அடிக்கடி வைகுண்டம் வருவான் என்றும், ஒரு சாதாரணத் தேவனாகவே ரிக் பேசுகிறது.

ரிக் வேதத்தில் ஏராளமான சுலோகங்கள் அக்கினியைப் போற்றியே பாடுகின்றன. அடுத்த படியாக இந்திரனைப் பாடுகின்றன. விஷ்ணுவை நான்கு இடங்களில் மட்டுமே போற்றிப் பேசுகின்றன.

ரிக்கில் எந்தத் தேவனையும் சகல சக்திகளும் படைத்த மூல முழுப் பொருளாக வணங்கவில்லை. ஒவ்வொரு தேவனுக்கும் குறிப்பிட்ட சில சக்திகளைக் கூறி அந்த ஆற்றலைப் பயன்படுத்தி தங்கள் பகைவர்களான தஸ்யூக்களை ஒழித்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டும் சுலோகங்களே நிறைந்துள்ளன.

இதிலிருந்து வேதம் விஷ்ணுவைப் பெருங் கடவுளாகப் போற்றவில்லை என்பதும், ரிக்காக நான் இருக்கிறேன் என்று பகவத் கீதையில் கிருஷ்ணன் கூறுவது பொருத்தம் இல்லை என்பதும் புரிகிறது.

பரமாத்மாவாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் கிருஷ்ணன், மற்ற தெய்வங்களை வணங்குவது தவறு என்று கூறவில்லை.

*எந்த எந்த பக்தன் எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகிறானோ, அவனவனுடைய அசையாத நம்பிக் கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன்.*

**—கீதை 7 : 21**

எந்த வடிவமுள்ள தெய்வத்தை வணங்கினாலும் அதனால், அந்த பக்தன் அடையும் நன்மையை நானே வகுத்துக் கொடுக்கிறேன் என்று கிருஷ்ணன் கூறினான்.

இக் கருத்தின்படி பார்த்தால், காளியை வணங்கிப் பலன் அடைபவனும், கணபதியை வணங்கிப் பலன் அடைபவனும், மதுரை வீரனை வணங்கிப் பலன் அடைபவனும் அடையும் பலனெல் லாம் கிருஷ்ணன் கொடுத்த பலனே யாகின்றன.

*அன்னிய தேவதைகளை நம்பிக்கையுடன் தொழும் அன்பரும், குந்தியின் மகனே, விதி வழுவி என்னையே தொழுகின்றார்.*

**—கீதை 9 : 23**

இங்கேயும் கிருஷ்ணன் அந்தத் தேவதைகளின் மூலம் தானே தொழப்படுவதாகக் கூறுகிறான்.

அடுத்து வரும் ஒரு சுலோகத்தில் கிருஷ்ணன் கூறும் கருத்து, எல்லாம் தன்னையே அடைகின்றன என்ற கருத்துக்கு மாறுபட்டதாய் உள்ளது.

*தேவ விரதிகள் தேவரை*
*எய்துவர்*
*பிதிர்க்களை நோற்போர்*
*பிதிர்க்களை யடைவார்*
*பூதங்களைத் தொழுவோர்*
*பூதங்களை யடைவார்*
*என்னை வேட்போர்*
*என்னையே அடைவார்*

— கீதை 9 : 25

இந்த சுலோகத்தில் எல்லாரும் தன்னை அடைவார் என்று கிருஷ்ணன் சொல்லவில்லை. யாராரை வணங்குகிறார்களோ அவரவர்களை அடைவார்கள் என்று மட்டுமே கூறுகிறான்.

இது ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளது.

இன்னொரு மோசமான கருத்தையும் சொல்கிறான். நடத்தையை விட வழிபடுவதையே அவன் வற்புறுத்துகிறான். பக்திதான் முக்கியமே தவிர பண்பு தேவையில்லை என்கிறது இந்த சுலோகம்.

*மிகவும் கொடிய நடையோனாயினும் பிறிது வழிபடாதே என்னை வழிபடுவோன் நல்லோனென்றே கருதுக ஏனெனில் நன்கு முயல்கின்றான் ஆகலின்.*

—கீதை 9 : 30

தான் நடு நிலையில் உள்ள கடவுள் என்று எடுத்துக் காட்ட கீழ்வரும் சுலோகங்களில் நல்ல கருத்துக்களைக் கூறுகிறான்.

*நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன். எனக்குப் பகைவனும் இல்லை. நண்பனுமில்லை. என்னை அன்புடன் தொழுவோர் அகத்தில் நான் இருக்கிறேன், என் அகத்தில் அவர் உள்ளார்.*

—கீதை 9 : 29

*பாவிகளென்னைப் பணிவாராயினும், மாதரேனும், வைசியரேனும், சூத்திரரும் பரகதி பெறுவார்.*

—கீதை 9 : 35

இவ்வளவு உயர்ந்த நினைப்பில் பேசுபவன் பிறிதோர் இடத்தில் நஞ்சைக் கக்குகிறான்.

*தீமை செய்யும் மூடர், மனிதரில் கடைப் பட்டார். மாயையால் ஞான மழிந்தோர், அசுரத் தன்மையைப் பற்றி நிற்போர்—இனையோர் என்னைச் சரண் புகார்.*

—கீதை 7 : 15

சூத்திரர்கள், கடைப் பட்டோர், பாவிகள், மூடர் என்று ஒதுக்கி மனித இனத்திலே வேற்றுமை வளர்க்கும் கருத்துக்களைக் கொள்பவன் எல்லோருக்கும் அப்பனாய் அம்மையாய் எப்படி இருப்பான்.

உலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமாய் நானே இருக்கிறேன் என்று தன்னை உயர்த்திக் கூறுபவன், உயிர்க்கொலை வேள்வியைச் செய்வது மனிதரின் கடமை என்று இடைவிடாமல் வற்புறுத்திப் பேசுகிறான்.

ஓரிடத்திலே பொதுப்படையான கருத்தைக் கூறுகிறான்.

*சிலர் ஆத்மாவில் ஆத்மாவால் ஆத்மாவை அறிகிறார்கள். பிறர் சாங்கிய யோகத்தால் அறிகிறார்கள். பிறர் கர்ம யோகத்தால் அறிகிறார்கள்.*

—கீதை 13 : 25

*இங்ஙனம் அறியாத பிறர் அன்னியரிடமிருந்து பெற்ற சுருதிகளை வழிபடுகிறார்கள். அவர்களும் அந்த சுருதிகளின் படி ஒழுகுவார்களாயின் மரணத்தை வெல்வார்.*

—கீதை 13 : 26

பிற மதத்தைத் தழுவுவதும், அம்மத நெறிகளின்படி ஒழுகுவதும் தவறில்லை என்ற உன்னதமான கருத்தை இந்த சுலோகம் விளக்குகிறது.

இவ்வளவு உயர்வான கருத்தைக் கூறிய அதே வாய் கீழே காணும் இழிவான கருத்தையும் கூறுகிறது.

*குந்தியின் மகனே, பிறப்புத்தோறும் அசுரக் கருக்களில் தோன்றும் இம் மூடர் என்னை யெய்தாமலே மிகவும் கீழான கதியைச் சேர்கிறார்கள்.*

—கீதை 16 : 20

இப்படியான இரண்டுங் கெட்ட முரண்பாடான பல கருத்துக்கள் கீதையிலே காணப்படுகின்றன.

தன்னை உலகுக் கெல்லாம் ஒரு தெய்வமாக அறிமுகப் படுத்திக் கொள்ள விரும்பும் கிருஷ்ணன், நச்சுத்தன்மையுள்ள, முரண்பாடான, மக்களிடையே வேற்றுமையை வளர்க்கும் கருத்துக்களைக் கூறுவது கண்டிக்கத் தக்கதாகும்.

நடுநிலையில் இருப்பதுதான் பக்தனுக்கு இலக்கணம் என்று கூறும் இவன், தானே நடுநிலை பிறழ்ந்து பேசுவது பண்பின்பாற் பட்டதாயில்லை.

தன்னுடைய பரத்துவத்தை அர்ச்சுனனுக்கு எடுத்துக் காட்ட விரும்பிய போது, தன்னுடைய பேராற்றலையும், உயர் தன்மையையும் எடுத்து விளக்கிக் காட்டி அவனை மனமாற்றம் அடையச் செய்வதை விட்டு விட்டு மாயமந்திர வித்தை அல்லது கண்கட்டு வித்தை போல விசுவ ரூப தரிசனம் என்ற ஒன்றைக் காட்டி அவனை அஞ்சி நடுங்க வைத்து தன்னை ஏற்றுக் கொள்ள வைத்த செயல் இறையாண்மைக்கே இழுக்கான செயலாகும்.

மனித குலத்தில் பலரைப் பிறப்பிலேயே கடைப்பட்டவர்களாகக் காட்டுவதும், அவர்களைக் காரணமின்றி வெறுப்பதும், அசுரர்கள் என்றும், பாவிகள் என்றும், மூடர் என்றும் தரம் பிரித்துப் பார்க்கும் கீழ்த் தரமான செயல்களை ஒரு பரமாத்மா செய்வதென்பது சிறிதும் பொருத்தமாக இல்லை.

கடவுள் எப்படி யிருப்பார் என்றால், சமயத் துறையில் உள்ள அறிஞர் பெருமக்கள், பொதுப் படையான ஒரு கற்பனையை உருவாக்கியிருக்கிறார்கள்.

பிரமம் என்றும் பரப்பிருமம் என்றும், மூல முதல்வன் என்றும் தனிப் பெருங் கடவுள் என்றும் முழு முதல் என்றும் பேசப்படுகின்ற இந்தக் கடவுளுக்கு

தனிப்பட்ட உருவம் இல்லை
தனிப்பட்ட நிறம் இல்லை
தனிப்பட்ட குணம் இல்லை
தனிப்பட்ட இடம் இல்லை
தனிப்பட்ட காலம் இல்லை
தனிப்பட்ட நிலை இல்லை

எல்லாமாய் எங்குமாய் யாவுமாய் ஏகமாய் வல்லதாய் நல்லதாய் இருக்கும் அந்தப் பரம்பொருள்.

கண்ணால் காண அரியது; ஐம்புலன்களால் அறிய ஒண்ணாதது.

இப்படி ஒன்று இருப்பதாகச் சொல்பவர் யாரும் இதைக் கண்டதில்லை. இப்படி ஒன்றைக் கண்டதாக யாரும் சொன்னதில்லை.

கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்

என்று கடவுளுக்கு இலக்கணம் கூறுவர்.

இப்படித் தனிப்பெரும் தலைமைக் கடவுளைத் தவிர மற்ற, உருவு கொண்ட, வடிவு கொண்ட பொருள்கள் யாவும் பிள்ளை விளையாட்டுப் பொம்மைகளே என்று கூறுவர்.

கண்ணனோ, நான் தான் கடவுள் என்று கூறியதோடு, தன்னுடைய விசுவ ரூபத்தைக் காட்டி அர்ச்சுனனைப் பயமுறுத்தி தன் பக்தனாக்கிக் கொண்டதாக கீதை கூறுகிறது.

அப்படியே தன்னைக் காட்டிக் கொண்ட கண்ணன் அத்தனை படைகளுக்கு மத்தியிலே

அனைவரும் காணத் தோன்றாமல், அர்ச்சுனனுக்கு மட்டும் ஞானக்கண் கொடுத்து இரகசியமாகக் காட்டிய காட்சியின் பொருள் என்ன?

அர்ச்சுனனைப் போல் மற்றவர்கள் தன்னை நம்ப மாட்டார்கள் என்றா? தன்னை எதிர்ப்பார்கள் என்றா? தன்னை அடைய மாட்டார்கள் என்றா?

இப்படிக் கேள்விமேல் கேள்வி கேட்டுக் கொண்டே போகலாம்.

இன்றும் சர்க்கரை வரவழைப்பவர்களும், விபூதி வரவழைப்பவர்களும், சில அதிசயங்களைச் செய்து காட்டுபவர்களும், தாங்கள் மற்ற மாந்தரைப் போல், விதி வந்தால் செத்தொழிய வேண்டிய - சாவை எதிர்த்து நிற்க முடியாத - தங்கள் ஆற்றல்களாலும், சாகசங்களாலும் மரணத்தை வெல்ல முடியாத சாதாரண மனிதப் பிறவிகளே என்று கருத்தில் கொள்ளாமல், பிறர் பிறரெல்லாம் தங்கள் காலடியில் விழுந்து வணங்க அதைப் பார்த்துக் கொண்டு பதறாமல், அற்பப் பெருமையால் ஆனந்தப்பட்டுக் கொண்டு நிற்கும் சிறு புல்லை நிகர்த்தவர்கள் எல்லாம், பிறர் முன் தாங்கள் பெரிய கடவுள்களாகக் காட்டிக் கொள்ளும் ஏமாற்று வேலைக்கு மூல காரணமாய் இருப்பது தவிர - எடுத்துக் காட்டாய் இருப்பது தவிர - வழிகாட்டியாய் நிற்பது தவிர . கீதைக் கண்ணன் சாதித்தது ஒன்றும் இல்லை.

அன்று கண்ணன்; இன்று இவர்கள்! அவ்வளவு தான்!

# 11

# கீதை காட்டும் பாதை

இதுவரை கீதையில் கண்ணன் அர்ச்சுனனுக்குக் காட்டிய வழியைப் பகுதி பகுதியாக உற்று நோக்கினோம். ஒட்டு மொத்தமாக - இதுவரை நாம் பார்த்த செய்திகளைத் தொகுத்துப் பார்ப்பதாக அமைகிறது இக்கட்டுரை.

மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு கீதை கூறும் பொன்மொழிகள் வேதாந்தமாகவும், தத்துவக் கருத்துப் போலவும், சிறந்த நீதி மொழியாகவும், மாந்தர் குலத்தைத் திருத்த வந்த புதுக் கருத்துப் போலவும் தோற்றமளிக்கும்.

கூர்ந்து சிந்தித்துப் பார்த்தால், மாந்தர் குலத்தைக் கூறு கூறாக்கி, ஆண்டான் அடிமை என்ற வேறுபாட்டை, இறைவன் பெயரால் நிரந்தரமாக நிலைநாட்டுவதற்கு விரிக்கப்பட்ட ஒரு வலையாக அது காணப்படுவதை உணரலாம்.

வேதம், உபநிஷத், வேதாந்தம், கீதை, புராணம், சாஸ்திரம், மனுநீதி என்ற இப்படிப்பட்ட நூல்கள் அனைத்துமே நம் நாட்டில் பெரும்பாலான மக்களை அடிமைகளாகவும், உரிமையற்று உழைக்கும் சாதியினராகவும் நடத்துவதற்கும், இழிவுபடுத்துவதற்கும் துணை நிற்கும் பொல்லாங்கு களாக இருக்கின்றன என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

போர் வேண்டாம் என்ற அர்ச்சுனனைப் போருக்கு அணியப்படுத்தும் முயற்சியாக கீதைக் கருத்துக்களைக் கண்ணன் வழங்குகின்றான்.

அர்ச்சுனனைக் காரணமாக வைத்து அவன் கூறும் கருத்துக்கள், மக்களை அடிமைப்படுத்தும் கருத்துக்களாக அமைகின்றன.

ஆத்ம வாதம் தொடங்கி

மூட நம்பிக்கைகளைப் புகுத்தி

கர்மயோகம், ஞான யோகம், பக்தி யோகம் ஆகியவைகளைத் தொடர்ந்து,

வருண பேதத்தை வலியுறுத்தி,

ஒவ்வொரு முறையும் உயிர்ப்பலி யாகங்களைச் செய்ய வேண்டிய இன்றியமையாமையைக் கூறி,

மோட்சம், நரகம், பரமபதம் ஆகியவற்றை அடைவது வரை

அறிவுக்குப் புறம்பான வாதங்களை முன் வைத்து,

விசுவரூப தரிசனம் என்ற மாயா சாலத்தைக் காட்டி,

அர்ச்சுனனைப் பயமுறுத்தி, பக்திமானாக்கிக் கடைசியில் கடமையைச் செய் என்னை அடையலாம் என்று சொல்லி முடிக்கிறான்.

தொடக்க முதல் முடிவுவரை கூறும் கருத்துக்களிலே தெளிவில்லை. எளிதில் தெளியக் கூடாது என்பதற்காகவே பின்னிப் புனையப்பட்ட கருத்துக்களாகவே இருக்கின்றன.

தன்னைக் கடவுளாக ஏற்றுக் கொள்ளும்படி அர்ச்சுனனை அணியப்படுத்துவதற்குப் பெரும்பாடு பட்டிருக்கிறான் கண்ணன்.

தன்னைக் கடவுளாக - பரம் பொருளாகக் கூறிக் கொள்வதிலும் கண்ணனிடம் ஓர் உறுதியான கொள்கையில்லை.

முதலில் தன் கடவுள் தன்மையை வெளிப் படுத்தும்போது, அர்ச்சுனனுக்கும் தனக்கும், அதாவது சாதாரண மனிதனுக்கும் தேவனுக்கும், பிறப்புக்கள் அடுத்தடுத்து வருகின்றன என்றும், மனிதனுக்குத் தன் பிறப்பை யறிந்துகொள்ள முடியாதென்றும், தேவன் அறிந்திருக்கிறான் என்றும் கூறுகிறான்.

கடவுளுக்குப் பிறப்பில்லை என்ற கருத்துடைய நாம், கண்ணனை மற்ற தேவர்களைப் போல் ஒரு தேவனாக மட்டுமே இங்கு மதிப்பிடுகிறோம்.

அடுத்தடுத்து வரும் கீதைகளில், யோகியா யிருப்பவன் அல்லது பக்தனாக இருப்பவன் பிரமத்தை அடைகிறான் என்று கண்ணன் கூறும் போது, நாம் பிரம்மமாகிய கடவுள் வேறு, கண்ணன் வேறு என்றே கருதுகிறோம்.

பிரமஸ்திதி, பிரம நிர்வாணம் என்றெல்லாம் கண்ணன் குறிப்பிடும்போது பிரமமாகிய முழுமுதல் தனிப்பெரும் கடவுளைக் கண்ணன் குறிப்பிடுகிறான் என்றே எண்ணுகிறோம்.

மோட்சம் பிரமஸ்திதி என்றெல்லாம் குறிப்பிடு கின்றபோது அக்காலத்தில் இருந்த நம்பிக்கை களின்படி சாவுக்குப்பின் மக்கள் சென்றடையும் நிலைகளையே கண்ணன் கூறுகிறான் என்ற எண்ணமே தோன்றுகிறது.

கீதை எழுதப்பட்ட காலத்தில் பிரமனே முழு முதற் கடவுளாகக் கருதி வழிபடப் பட்டிருக்கிறான். பிரமம், பிரமஸ்திதி, பிரமயோகம் என்றெல்லாம் கடவுள் நிலை பேசப்பட்டு வந்திருக்கிறது.

பிரமனுக்குள்ள இந்தத் தகுதியைக் கண்ணன் தனக்காக்கிக் கொள்வதைக் கீதையில் காண் கிறோம்.

முழுமுதற் கடவுளாக இருந்த பிரமன் பின்னுக்குத் தள்ளப்பட்டு பின்னால் கடவுளாக எண்ணப்படாத நிலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறான்.

புராணங்களும், முழுமுதற் கடவுளாக விளங்கிய பிரமனை விஷ்ணுவின் தொப்பூழ் கொடியில் பிறந்தவனாக - விஷ்ணுவின் மகனாகச் சித்திரித்து,

அவனுடைய முக்கியத்துவத்தையும் சிறப்பையும் குறைத்துவிட்டன.

சைவர்களின் புராணக்கதையில், விஷ்ணுவும் பிரமனும் தமக்குள் யார் பெரியவர் என்று போட்டி போட்டுத் தர்க்கம் செய்து கொண்டதாகவும்,

*சிவபெருமானிடம் நியாயம் கேட்கப் போன* தாகவும்,

சிவபெருமான் - எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளான சிவபெருமான் - வானத்துக்கும் பாதாளத் துக்குமாக ஒரு பேருருவம் எடுத்ததாகவும்,

தன் அடியை ஒருவரும் முடியை ஒருவரும் யார் முதலில் தேடிக் கண்டு பிடிக்கிறார்களோ அவர்களே பெரியவர்கள் என்று போட்டி வைத்ததாகவும்,

அந்தப் போட்டியில் விஷ்ணு பன்றியாக மாறி அடியைக் கண்டுபிடிக்க நிலத்தைத் தோண்டிக் கொண்டு சென்றதாகவும்,

பிரமன் அன்னமாக மாறி முடியைத் தேடிப் பறந்ததாகவும்,

சிவபெருமான் கொண்டையில் சூடியிருந்த தாழம்பூ நழுவிக் கீழே விழும்போது நடுவில் கவ்விக் கொண்டு வந்த பிரமன் தானே முதலில் முடியைக் கண்டு பிடித்ததாகக் கூறியதாகவும்,

பொய் சொன்னதால் அன்று முதல் பிரமனை யாரும் வணங்கக் கூடாதென்று சிவபெருமான் சாபம் இட்டு விட்டதால், பிரமனுக்குக் கோயில் கிடையாதென்றும் கூறுவார்கள்.

இதனால், பிரமன் முழுமுதற் கடவுள் என்ற நிலையும் போய், சாதாரணத் தேவனாகவும் வணங்கப் படாதவன் ஆகிவிட்டான். கீதையில் விசுவரூப தரிசனத்தின் போது, அர்ச்சுனன் சொல்கிறான்; ''ஈசுவரனாகிய பிரமதேவனும் உன் விசுவரூபத்துக்குள்ளே இருப்பதை நான் கண்டேன்'' என்று.

இவ்வாறாக ஒரு காலத்தில் முழுமுதற் பொருளாக மதித்து வணங்கப்பட்ட பிரமன், சைவர்களாலும், வைஷ்ணவர்களாலும், தன் முதன்மையிழந்து, கடை நிலைக்குப் போய் விட்டான்.

எனினும், பிரமம், பிரமஸ்திதி, பிரமயோகம் என்பவை அந்த முதன்மைப் பொருளிலேயே கீதையில் பேசப்படுகின்றன.

ஆனால் அந்தப் பிரம்மமாகத் தானே இருப்பதாகக் கண்ணன் கூறிக் கொள்ளுகின்றான்.

பிரமனைப் பற்றிக் குறிப்பிட்ட கீதையில், மும்மூர்த்திகளில் ஒருவராகவும் சைவர்களின் முழு முதல் தனிப் பெருங் கடவுளாகவும் விளங்கிய சிவ பெருமானைப் பற்றி ஒரு குறிப்புக் கூடக் காணப் படவில்லை.

கீதையில் அன்னிய மதம் என்றும், அன்னிய சுருதி என்றும் குறிப்பிடப்படுபவை சைவமாகவோ, பௌத்தமாகவோ இருக்கக் கூடும்.

பார்த்தனாகிய அர்ச்சுனனுக்கு பாசுபதம் என்ற அம்பை வழங்கிய சிவபெருமானைப் பற்றிக் குறிப்பிடாததற்கு - அப்படி ஒரு தெய்வம் இருப்பதாகக் காட்டாமைக்கு - பெருஞ் செல்வாக்குடன் விளங்கிய மற்றொரு கடவுளைப் பற்றிப் பேசினால், தான் முழுமுதற் கடவுளாக விளம்பரப் படுத்திக் கொள்வது பாதிக்கப்படலாம் என்று கண்ணன் கருதியது காரணமாக இருக்கலாம்.

எப்படியிருந்தாலும் தன்னைப் பரம் பொருளாக கண்ணன் - சரியாக - வலுவாக அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை.

ஒரு கீதையில், பிதிர்க்களை வழிபடுவோர் பிதிர்க்களை அடைகிறார்கள், தேவர்களை ஆராதிப்போர் அந்த அந்தத் தேவர்களை அடைகிறார்கள். பூதங்களை வேண்டுவோர் பூதங்களை

அடைகிறார்கள். என்னை ஆராதிப்போர் என்னை அடைகிறார்கள் என்று குறிப்பிடும்போது, கண்ணனும் ஒரு தேவன், - தேவர்க்குள் ஒருவன் என்ற எண்ணம் தான் தோன்றுகிறது.

ஏழாவது அத்தியாயமாகிய ஞான யோகத்தில், தான் தான் பரமாத்மா, பெருங்கடவுள் என்று அறிவிக்கத் தொடங்குகிறான்.

அதன் பிறகு பலவகைகளில் தான் தனிப் பெருங்கடவுள் என்பதைப் புலப்படுத்திக் கொண்டு வருகிறான்.

தானே எல்லா உயிர்களையும் படைப்பதாகக் கூறுகிறான்.

முதலில் ஆத்மாக்களுக்கு அழிவில்லை என்று சொன்னபோது, அவற்றிற்குப் பிறப்பும் இல்லை என்று தான் பொருள் படுகிறது.

ஆத்மாக்கள் நிலையாக உள்ளவை என்றும், உடல்கள் தான் பிறந்து பிறந்து அழிகின்றன என்றும் கூறியவன், இப்போது அவற்றின் தனித் தன்மையை மறந்து, தானே எல்லாவற்றையும் படைப்பதாகக் கூறுகிறான்.

இவ்வுலகில் எல்லாம் தானே என்றும், எல்லாம் தன்னால் ஆக்கப்பட்டவை என்றும், எங்கும் தான் இருப்பதாகவும் அறிவிக்கிறான்.

கடவுள் எங்கும் இருக்கிறார் என்ற கொள்கையை - தானே கடவுள், என்பதால், தான் எங்கும் எதிலும், எல்லாவற்றிலும் இருப்பதாகக் கூறுகிறான்.

அடுத்த நொடியிலேயே ஒவ்வொரு இனத்திலுந் தலைமையாக உள்ள ஒன்றாகத் தான் விளங்குவ தாக அறிவிக்கிறான்.

ஆதித்தர்களில் நான் விஷ்ணு.
நட்சத்திரங்களில் சந்திரன்.
வேதங்களில் நான் சாமம்.
மாதங்களில் நான் மார்கழி.

இப்படி ஒவ்வொன்றிலும் சிறந்ததாகத் தன்னைக் கூறிக் கொள்கிறான்.

ருத்திரர்களின் சங்கரன்,
அரக்கர்களில் குபேரன்,
வசுக்களில் தீ,
மலைகளில் மேரு,

என்றெல்லாம் தன்னை உயர்ந்த பொருளாகக் காட்டிப் பெருமைப் படுகிறான்.

எல்லா உயிர்களிலும் இருப்பதாகக் கூறிக் கொள்பவன், அவற்றில் சிறந்ததாகத் தன்னை வருணித்துக் கொள்வது - பெருமையைக் காட்டு கிறதே தவிர முழுமையைக் காட்டவில்லை! இதை அவன் உணரவில்லை.

வேதங்களில் ரிக் தான் முதன்மையான வேதம். ஆனால் அவன் தன்னை சாமம் என்று கூறிக் கொள்கிறான்.

உலகத்தார் பீடை என்று ஒதுக்கிய மார்கழியைச் சிறந்ததாகக் கருதி, மாதங்களில் நான் மார்கழி என்று சொல்லிக் கொள்கிறான்.

இன்னும் கோமாளித் தனமாக வஞ்சகரிடையே நான் சூது என்றும் கூறுகிறான்.

மரணம் நான், பிறப்பு நான் என்று எல்லாமாம் தன்மையையும் கூறுகிறான்.

எது எது பெருமையுடையது
எது எது அழகுடையது
எது எது வலிமையுடையது

அதுவெல்லாம் என் ஒளியின் அம்சம் என்கிறான். மற்றவையெல்லாம் என்ன என்பதற்கு விளக்கம் இல்லை.

நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன். எனக்குப் பகைவனும் இல்லை, நண்பனும் இல்லை என்று பொது நிலையில் கூறிக்கொள்ளும் கண்ணன் தன்னை யார் யார் தொழமாட்டார்கள் என்று கூறும் போது தீமை செய்யும் மூடர், மனிதரில் கடைப் பட்டோர், மாயையால் ஞான மழிந்தோர், அசுரத் தன்மையைப் பற்றி நிற்போர் ஆகியோர் என்னைச் சரண்புகார் என்று (கீதை 7 : 15) வெறுப்பைக்

கக்குகிறான். இங்கு அவனுடைய பொதுநிலை மறைந்து போய் விடுகிறது.

மற்ற தெய்வங்களை வழிபடுவோரும் தன்னையே தொழுகிறார்கள் என்று (கீதை 9: 23) கூறுகிறவன், தேவ விரதிகள் தேவரை எய்துவர், பிதிர்க்களை நோற்போர் பிதிர்க்களை எய்துவர், பூதங்களைத் தொழுவோர் பூதங்களை எய்துவர், என்னை வேட்போர் என்னை எய்துவர் (கீதை 7: 25) என்று சேரும் இடங்களை வேறு வேறாகக் காட்டுகிறான். இது பெரிய முரண்பாடு.

உலகத்துக்கெல்லாம் தானே தலைமையான கடவுள் என்று கூறிக் கொள்ளும் கண்ணன், மிகப் பெருந்தன்மையாக மற்ற மதத்தினரைப் பற்றி ஒரு கருத்துக் கூறுகிறான்.

*இங்ஙனம் அறியாத மற்றைப் பிறர், அன்னியரிடமிருந்து பெற்ற சுருதிகளை வழிபடுகிறார்கள். அவர்களும் அந்த சுருதிகளின்படி ஒழுகுவாராயின் மரணத்தை வெல்வார்.*

**—கீதை 13 : 26**

மற்ற மதத்தவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவர்கள் தன்னை வணங்காவிட்டாலும், வேறு சுருதிகளை நம்பிப் பின்பற்றினாலும் மரண மிலாப் பெருவாழ்வு அடைவார்கள் என்று பெருந் தன்மையோடு, கூறுகிற கடவுள், தன்னுடைய மதத்திலேயே இருந்து தன்னைப் பணியாதவர் களாய் இருப்பவரைப் பற்றிக் கூறும்போது வெறுப்புத் தீயைக் கக்குகிறான்.

அசுரத்தன்மை கொண்டோர், தொழில் இயல்பையும் விட்டியல்பையும் அறியார். தூய்மையேனும் ஒழுக்க மேனும் வாய்மையேனும் அவர்களிடம் காணப்படுவதில்லை.
—கீதை 16 : 7

அகங்காரத்தையும், பலத்தையும் செருக்கையும் விருப்பத்தையும், சினத்தையும் பற்றியவர்களாகிய இன்னோர், தம் உடம்புகளிலும் பிற உடம்புகளிலும் உள்ள என்னைப் பகைக்கிறார்கள்.
கீதை 16 : 18

இங்ஙனம் பகைக்கும் கொடியோரை—உலகத்தில் எல்லாரிலும் கடைப்பட்ட இந்த அசுர மனிதரை—நான் எப்போதும் அசுரப் பிறப்புக்களில் எறிகிறேன்.
—கீதை 16 : 19

பிறப்புத் தோறும் அசுரக் கருக்களில் தோன்றும் இம் மூடர் என்னை எய்தாமலே கீழான கதியைச் சேர்கிறார்கள்.
—கீதை 16 : 20

இவ்வாறு வெறுப்புத் தீயைக் கக்கி, தான் தன் வெறுப்புக்கு ஆளானவர்களைப் பழிவாங்கும் செயலையும் எல்லாம் ஆன கண்ணன் கூறுவதை கீதையில் காண்கிறோம்.

கடைசியில் கீதாசாரியன் அர்ச்சுனனுக்கு ஒரு கட்டளை விதிக்கிறான்.

இதை எப்போதும் தவமிலாதோனுக்கும், பக்தியில்லா தோனுக்கும், கேட்க விரும்பாதோனுக்கும், என்பால் பொறாமையுடையோனுக்கும் சொல்லாதே!
—கீதை 18 : 67

இப்படியாகக், கண்ணன் கூறிய கடவுள் கொள்கை, ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக் களோடு தன் கடவுள் தன்மைக்குப் புறம்பாக—

தனக்கு அன்பர்கள் என்றும் பகைவர்கள் என்றும் இரு சாராரை உருவாக்கி

தன் பகைவர்களைப் பழிவாங்கும் அற்பக் குணத்துக்கு ஆளாகி நிற்பதைக் காண்கின்றோம்.

நல்லார்க்கும் பொல்லார்க்கும்
நடுவில் நின்ற நடுவே!

என்று போற்றக்கூடிய இறைவனாகக் கண்ணன் விளங்கவில்லை என்பதை இதுகாறும் கூறிய கீதை களால் அறிகிறோம்.

கண்ணனுடைய கடவுள் தன்மை இவ்வாறாக, சமுதாயக் கொள்கை எவ்வாறு இருக்கிறதென்று பார்த்தால் அது முற்போக்கு எண்ணத்தைத் தடுக்கும் முட்டுக்கட்டையாக இருப்பதையே காண் கிறோம்.

''கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே'' இந்தச் சொற்றொடர் ஒரு பொன்மொழி போலக் காட்சியளிக்கிறது.

கண்ணன் இந்த மொழியில் தொடங்கித்தான் ஒரு வலையைப் பின்னுகிறான்.

ஒரு தொழிலைச் செய்பவன் அதன்பலன் நல்லதா கெட்டதா என்று எதிர்பார்த்துச் செய்யக் கூடாதென்றும், அதன் பலனை இறைவன் பொறுப் பாக விட்டுவிட வேண்டும் என்றும் உபதேசம் தொடர்கிறது.

தன்னலமில்லாத பணியைச் செய்யவேண்டும் என்று வற்புறுத்துவதாக நாம் இதை எடுத்துக் கொள்கிறோம்.

நல்ல பலன் இல்லையே என்பதற்காகத் தன் தொழிற் பணியை நிறுத்திவிடக் கூடாதென்று தொடர்ந்து சொல்லுகிறான் கண்ணன்.

இந்தப் பொன்மொழியும் கடமை தவறாத உணர்வை ஊட்டுகிறதென்று எண்ணிக் கொள் கிறோம்.

உன் கடமை என்பது என்னவென்றால், உனக்கு என்று சாஸ்திரம் ஒதுக்கியுள்ள தொழிலைச் செய்வது தான்! என்கிறான் கண்ணன்.

இங்கே தான் வலை இழுத்துச் சுருக்கப் படுகிறது.

உன் சாதித் தொழிலைத் தான் நீ செய்ய வேண்டும். வேறு சாதிக்காரனுடைய தொழிலை நீ எவ்வளவு திறமையாகச் செய்து எவ்வளவு நல்ல பலன் பெற்றாலும் அது உன்னை நரகத்தில் தான் தள்ளும்;

உன் சாதித் தொழிலைச் செய்து பலனே இல்லாமல் போனாலும் அது நன்றாகும்.

உன் சாதித் தொழிலைச் செய்வதன் மூலம் நீ மாண்டு போனாலும் அது நன்மைக்கே யாகும்.

இவ்வாறு கூறி வலையை இழுத்து மூடி விடுகிறான் கண்ணன்.

புராணங்களில் பிரமன் ஏற்படுத்தியதாகக் கூறும் வருணாசிரம தருமத்தைத் தானே வகுத்ததாகக் கூறுகிறான் கண்ணன்.

வருணாசிரம தரும முறைப்படி இயற்கையிலேயே அவனுக்கென்று வகுக்கப்பட்ட தொழிலைத் தான் செய்ய வேண்டும் என்கிறான் கண்ணன்.

இயற்கையிலேயே அவனவன் குணத்திற்கேற்ப சாஸ்திரங்கள் அவனவன் குலத் தொழிலை வகுத்திருக்கின்றன என்கிறான் கீதைக் கண்ணன்.

வேதம் படிப்பவர்கள் என்று பிராமண சாதியையும்

வீரம் காட்டவே பிறந்தவர்கள் என்று சத்திரிய சாதியையும்

வாணிபம் தொழில் செய்வதற்கென்றே வைசிய சாதியையும்

இவர்களுக்கெல்லாம் தொண்டு செய்வதற்கென்றே சூத்திர சாதியையும் படைத்திருப்பதாகக் கண்ணன் கூறுகிறான்.

தொண்டு செய்யும் அடிமைகளாக இந்த நாட்டின் பெரும்பகுதியான மக்களைத் தான் படைத்ததாகப் பெருமைப்பட்டுக் கொள்கிறான் கண்ணன்.

இந்த அடிமைகள் அடிமைத் தொழிலையே செய்து கடைசிவரை எந்த ஆதாயமுமின்றிச் செத்து மடிவதே சிறந்ததென்று கீதையில் கண்ணன் உபதேசிக்கிறான்.

இப்படிச் செத்து மடிபவர்களுக்கே மோட்சம் கிடைக்கும் என்கிறான்.

தங்களுக்கென்று விதிக்கப்பட்ட அடிமைத் தொழிலை விட்டு மேல் சாதியாரின் தொழிலைத் திறமையுடன் செய்து மேன்மையுற்றாலும், அது பாவம் என்றும், நரகம் கிடைக்கும் என்றும் கீதைக் கண்ணன் கூறுகிறான்.

இவ்வாறு ஒரு பெரும் சமுதாயத்தை ஆண்டாண்டு காலமாக - யுகம் யுகமாக - மேலெழும்ப முடியாதபடி செய்வதற்கே கண்ணன் உபதேசம் பயன்படுகிறது.

ஆதிசங்கரர் முதல், மத்வாச்சாரியார், இராமானுஜசாரியார் போன்ற பெரும் சமய வாதிகள் கீதையைப் போற்றுவதையோ, விளக்கம் சொல்லு வதையோ கண்டு நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அவர்கள் என்னதான் துறவிகளாக இருந் தாலும், பெரும் பேரும் தத்துவங்களை அறிந்தவர் களாக இருந்தாலும்,

சாதி யொழிந்தால் உலகமே புரண்டு விடும் என்றும், பார்ப்பனர்கள் மதிக்கப்படமாட்டார்கள் என்றும் தீவிரமான கருத்துடையவர்கள்.

அவர்கள் கண்ணன் கூறும் கருத்து நிலைத் திருக்க வேண்டும் என்று தான் விரும்புவார்கள்.

அவர்களும் அவர்கள் இனமும் என்றும் தலை நிமிர்ந்து சகல சௌபாக்கியங்களுடனும் வாழ வேண்டுமானால்,

அடிமைத் தொண்டு செய்வதற்கென்றே ஒரு சாதி இருக்க வேண்டியது அவசியம் என்று கருது பவர்கள்,

அவர்கள் வருணாசிரமம் நிலைக்க வேண்டும் என்றுதான் பாடுபடுவார்கள்.

ஆனால் சமுதாய விடுதலையே மூச்சாக வாழ்ந்த மகாத்மா காந்தி, பாரதி போன்றவர்கள், கீதையை முழுக்கப் படித்தபிறகு, அதைப்போற்றிப் பேசுகிறார்கள் என்றால் அதைத்தான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

உறவென்று பார்க்காதே; மனம் தளராதே; உன் தொழில் போர் செய்வது; உன் கடமை போர் செய்வது; நீ அதை நிறுத்தாதே; தொடர்ந்து செய் என்று கூறி ஊக்கப்படுத்திப் போர் செய்யத் தூண்டிய கண்ணன், துரியோதனாதியரை வீழ்த்துவதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளவில்லை.

இந்தச் சூழ்நிலையைச் சாக்காக வைத்து, சூத்திரர் என்று குறிப்பிடப்படும் தாழ்த்தப்பட்ட,

பிற்படுத்தப்பட்ட, கடையாய மக்கள் இனத்தை என்றென்றும் அடிமைச் சேற்றிலே அழுத்தி வைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு நாடகம் ஆடியிருக்கிறான்.

துரியோதனாதியருக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த சண்டை வெறும் பங்காளிச் சண்டை! அதைப் பஞ்சாயத்து வைத்துத் தீர்த்திருக்க வேண்டும்.

அதற்கு மாறாகப் போர் செய்து முடித்து வைக்க நினைக்கிறான் கண்ணன்.

போர்க்களத்திலேயே ''உறவுக் குள்ளே போரா!'' என மனச்சாட்சி யழுத்த மலைத்து நிற்கிறான் அர்ச்சுனன்

அர்ச்சுனன் தான் கொண்ட, விலங்குணர்வும் வெறியுணர்வும் மாறி, மனிதத் தன்மையை அடைந்த அந்த ஒரு கணத்தைப் பயன்படுத்தி யிருந்தால், போரையும், போரினால் ஏற்பட்ட கொலைகளையும், கொடுமைகளையும் தவிர்த் திருக்கலாம்.

அருள் உள்ளம் படைத்தவர்கள் அதைத் தான் செய்வார்கள்.

இரண்டு ஆடுகள் மோதிக் கொண்டால் வழி கின்ற குருதியைக் குடிக்கலாம் என்ற நிலையிலே உள்ள நரியைப் போல் கண்ணன் போர் செய்யத் தூண்டுகிறான்.

பாரதப் போர் நடந்தது. பாரதப் போர் ஏற்படுத்திய அழிவும், பாண்பாட்டுக் கொலையும் அன்றோடு நின்றுவிடவில்லை.

இன்றும், சமய வெறியாகவும் சாதி வெறியாகவும் நாட்டை உருக்குலைத்துக் கொண்டு நிற்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் உண்மை யுணர்ந்து கிளர்ந்து எழுந்து போராடத் தொடங்கும் போதெல்லாம்,

தங்களைத் தாங்களே கடவுளின் பிரதிநிதிகளாகவும், கடவுளையும் சாதியையும் சாத்திரங்களையும் காப்பாற்றும் கடமை முழுதும் தங்களுக்கே இருப்பதாகவும் கருதிக் கொண்டிருக்கும் மேட்டுக் குல மக்களால் இக்கிளர்ச்சிகள் ஒடுக்கப்படுகின்றன.

துறவிகளாகவும், சாமியார்களாகவும், ஆச்சாரியார்களாகவும், இருக்கின்ற பெருந்தலைகள் எல்லாம், சாந்தியையும் சமாதானத்தையும் பரப்புவதற்குப் பதிலாக வெறியுணர்வை வளர்த்துவிட்டு சாதிமதக் கலவரங்களைத் தூண்டிவிடும் சதிகாரர்களாக இருப்பதையே பார்க்கிறோம்.

சாதியும் மதமும் ஒழிந்து விட்டால், தங்கள் சுகபோக சௌபாக்கியங்கள் அனைத்தும் போய் விடுமே என்ற எண்ணத்தில்,

குரு பீடங்களும், அரசியல் தலைவர்களும், அவற்றைக் கட்டிக் காப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்.

இந்த நிலையில், பல பெரிய மனிதர்களால் போற்றப்படுகின்ற கீதை, காட்டும் பாதை எதுவென்று பார்க்கிறேன்.

கீதை, பாதை காட்டவில்லை; நம் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக இருக்கின்ற நிலையையே காணுகின்றேன்.

இந்த முட்டுக் கட்டையை அகற்றினால் தான் நாம் முன்னேறிச் செல்ல முடியும் என்று உணர்கின்றேன்.

நாம் ஒவ்வொருவரும் உண்மையை உணருங் காலத்தில் முட்டுக்கட்டைகளை அகற்றிவிட்டு முன்னேறுவோம் என்று உறுதியாக நம்புகிறேன்.

# 12
# கண்ணன் விரித்த வலை

*தொழிலைச் செய்*
*பலனை எதிர்பாராதே!*

கீதையில் கண்ணன் கூறத் தொடங்கும் முதல் பொன்மொழி இது.

இது சிறந்த கருத்துப் போல் தோன்றுகிறது. இதையே

*கடமையைச் செய்*
பலனை எதிர்பாராதே

என்றும் கூறுவார்கள்.

தன்னலமற்ற தொண்டு செய்யவேண்டும் என்று கண்ணன் கூறுவது போலத் தோன்றுகிறது இம்மொழி.

ஆனால் தொடர்ந்து கண்ணன் பேசும் போது தான் இங்கே ஒரு சூழ்ச்சி வலை விரிக்கப்படுகிறது என்பது புரிகிறது.

உனக்கென்று வகுக்கப்பட்ட தொழிலைச் செய்,

பிறருடைய தொழிலைக் கற்றுக் கொண்டு அதை எவ்வளவு மேலாகச் செய்தாலும், அதனால் பெரும்பலன் கிடைத்தாலும் அது உனக்குப் பிறகு பெரும் துன்பத்தையே தரும்.

உன்னுடைய தொழிலை நீ செய்து பலனற்றுப் போனாலும், அதனால் துன்பமே வந்தாலும், அது உனக்கு நல்லதாகும்.

எப்படியிருக்கிறது கருத்துரை - கடவுளாக நிற்பவர் கூறும் கருத்துரை இது!

ஏன் இப்படிச் சொல்லுகிறான் கண்ணன் என்று நாம் மலைக்கும் போது – அவன் புதிரை அவிழ்த்து விடுகிறான்.

நான்கு வருணங்களை நான்தான் வகுத்தேன், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், இவர்களுடைய தொழில்கள், அவரவர் இயல்பில் விளையும் குணங்களை அடிப்படையாக வைத்துப் பிரிக்கப்பட்டன.

அவனவன் தனக்கென்று வகுக்கப்பட்ட தொழிலைச் செய்ய வேண்டும். அதில் குணம் இல்லாவிட்டாலும் அதையே செய்யவேண்டும்.

இயல்பான தொழில் குறையுடையதாயினும் அதைக் கைவிடலாகாது. அதைச் செய்பவன் பாவமடைய மாட்டான்.

ஆனால் தன் இயல்புக்கு மாறான தொழிலைச் செய்பவன், அதிலே நல்ல பலனை அடைந்தாலும், நல்ல கதியடையமாட்டான்.

தன்னையே பரம்பொருள் என்றும், எல்லாம் வல்ல கடவுள் என்றும் அறிவித்துக் கொள்ளும் கண்ணன், இவ்வாறு மனித குலத்தை வேறு படுத்தி, அதிலே சூத்திரர் என்றொரு வகுப்பைப் படைத்து,

அந்த சூத்திரர்கள் மற்ற மூன்று வருணத் தார்க்குத் தொண்டு புரிவதே அவர் இயற்கையால் அவருக்கேற்பட்ட தொழில் என்றும்,

இந்தத் தொண்டு புரியும் அடிமைத் தொழிலைப் புரிவதே அவர்கள் செய்ய வேண்டிய கர்ம யோகம் என்றும், அந்தக் கர்மயோகமே அவர் களைக் கடைத்தேற்றும் என்றும் திட்டவட்டமாகக் கூறுகிறான் கீதைக் கண்ணன்.

ஞான யோகத்தைப் போலவே கர்மயோகமும் சிறந்தது என்றும், கர்மயோகம் செய்பவனுக்கும் மோட்சம் நிச்சயம் கிடைக்கும் என்றும்,

கர்மயோகம் என்பது அவனவனுக்கு என்று விதிக்கப்பட்ட (குலத்) தொழிலைச் செய்வது என்றும், பலன் இல்லாவிட்டாலும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும்,

குலத் தொழிலை பலனை எதிர்பாராமல்—பலன் - இல்லாவிட்டாலும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும்,

இந்தக் கர்மயோகமே சிறந்த பக்தி மார்க்கம் என்றும், இதற்கு வாழ்க்கையிலே பலன் இல்லா விட்டாலும் மோட்சத்திலே இடம் கிடைக்கும் என்றும் கீதை கூறுகிறது.

பல இடங்களில் குழப்பமான கருத்துக்களைக் கூறும் கீதை, இந்தக் கருத்தை மட்டும் மிகத் தெளி வாகக் கூறுவது காணலாம்.

தொழிலைச் செய்

பலனை எதிர்பாராமல் செய்

என்றும் அடிமையாகவே

பரம்பரை பரம்பரையாக அடிமையாக இரு.

இது தான் கீதை கூறும் மொழி—

இதை மீறுபவனுக்கு மோட்சம் இல்லை; இறைவன் அருள் கிடைக்காது; அவன் நரகத்திலே தூக்கி எறியப்படுவான் என்பது பகவத் கீதையின் பயங்கரச் சட்டம்.

கண்ணன் தன்னைப் பெரிய - எல்லா சக்தி களும் கொண்ட கடவுள் என்று அறிவித்துக் கொண்டு இப்படிப்பட்ட படுபாதகமான ஒரு கருத்தைக் கீதையிலே கூறுகிறான்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சான்றோர்களின் அமுத மொழியைத் தூக்கி எறிந்து விட்டு கீதை காட்டும் வழியைப் பின்பற்றினால்

இந்த வையகத்தின் முதுகெலும்பு போன்ற ஏழை மக்கள் முன்னேற முடியுமா?

சாதிக் கொடுமையால் அழுத்தி வைக்கப் பட்டிருக்கும் பெருவாரியான மக்கள் முன்னேற வேண்டுமானால், இந்த கீதைக் கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா?

ஆதிசங்கரர் எழுதிய சங்கர பாஷ்யத்திலும், இராமாநுஜரின் பாஷ்யத்திலும், இந்தக் கண்ணன் கருத்துக்கு விரிவான விளக்கம் எழுதப் பட்டிருக் கிறதே தவிர,

இது தவறு! மனித - குல முன்னேற்றத்துக்கு ஒவ்வாதது என்று மறுத்துரைக்கப்பட்டிருக்கிறதா?

அப்படியானால் ஞான மார்க்கம் என்பது என்ன?

ஏழை - பரம ஏழையாகவும் - பரம்பரை பரம்பரை யாகத் தொண்டு புரியும் அடிமையாகவே வாழ்ந்து மண்ணோடு மண்ணாக மக்கி மறைவது தான், கர்மயோக பலனாகவும், கண்ணன் காட்டிய வழியா கவும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமா?

இதை யாராவது சிந்தித்ததுண்டா?

இந்தப் பாரத பூமி ஞான பூமி என்று பெருமைப் பட்டுக் கொள்வதும்,

மக்களை விலங்குகளினும் கேவலமாக நடத்தச் சொல்லும் சாத்திரங்கள் இந்தப் பாரத நாட்டின் சொத்துக்கள் என்றும்,

இந்த சாத்திரங்களும் சம்பிரதாயங்களும், அழியாமல் காப்பாற்றப்படவேண்டும் என்றும், இந்தச் சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட மதத்தையும், இந்த மதத்தின் அதிபதிகளான கடவுள்களையும் காப்பாற்ற முற்படுகின்ற எந்த ஞானியும், சன்னியாசியும், பீடாதிபதியும் ஆச்சாரியாரும், சங்கங்களும், கட்சிகளும் போற்றப் பட வேண்டியவர்களா?

பிரமனே படைத்ததாக இருந்தாலும் கண்ணனே வகுத்ததாக இருந்தாலும், இந்த வருணாசிரம தர்மம் எனப்படும் கொடுமையானது கைவிடப்பட வேண்டியது என்று கூறக்கூடிய உறுதி படைத்த பெரியவர்கள் யாராவது இந்து மதத் தலைவர்களிலே இருக்கிறார்களா?

கீதையைப் பிரசாரம் செய்வதே தங்கள் வாழ் நாளின் தொண்டாகச் செய்து வரும் சாதுக்கள் சன்னியாசிகள் ஞானிகள் யாராவது இந்தக் கொடிய வருணாசிரம தருமம் ஏற்பாடு தவறானது என்று துணிந்து கூறியதுண்டா?

மாந்தர்குல மேம்பாட்டுக்கு முரணான இத்தகைய கருத்துக்களைக் காலப் போக்கில் ஒதுக்கித் தள்ளுவது தான் அறிவுடைமை யாகுமே யன்றி இவற்றைத் தூக்கிப் பிடித்து நிறுத்துவதும் நிலைநிறுத்த முற்படுவதும் தவறு என்று உணரா விட்டால், கற்ற கல்வியின் பயன் என்ன? பேசும் தருமத்தின் பொருள் என்ன?

கண்ணனாயினும் அவன் அண்ணனாயினும், இந்த மண்ணின் மைந்தர்களைக் கேவலப்படுத்தும் வருணாசிரம ஏற்பாட்டைக் கொண்டு வந்தவன் பழிக்கத் தக்கவனேயாவான்.

சாங்கிய யோகம், ஞான யோகம், கர்ம யோகம் சந்நியாச யோகம், அத்யாத்ம யோகம், அட்சர பிரம்ம யோகம், ராஜ வித்யா ராஜ ரகஸ்ய யோகம், விபூதி யோகம், பக்தி யோகம் என்றெல்லாம், யோகம் யோகம் என்று பெரிய தலைப்புகளிலே பேசப்படுகின்ற ரகஸ்யத்திலும் ரகஸ்யமான ஞானம் முழுவதும், இந்நாட்டுப் பெருங்குடி மக்களை சூத்திரர்கள் என்று பெயரிட்டு அடக்கி அடிமைப் படுத்தி அதள பாதாளத்தில் தள்ளி வைக்கச் செய்யப்பட்ட ஏற்பாடுதான் என்பதை உணருகின்ற போது, இந்தக் கொடுமையை ஏற்படுத்தியவன் எவ்வளவு பெரிய பாவியாக இருக்கவேண்டும் என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

சமுதாய விரோதமான இந்தக் கருத்தை வெளிப்படுத்துவதற்கே அர்ச்சுனன் கருவியாகப் பயன்பட்டிருக்கின்றான்.

அர்ச்சுனன், பங்காளிகளுக்கு எதிராக மட்டும் முடுக்கிவிடப்படவில்லை; பாட்டாளிகளுக்கு எதிராகவும் தூண்டி விடப்பட்டிருக்கிறான் என்பது புரிகிறது.

பக்தியின் பெயரால்,
ஞானம் என்ற பெயரால்,
யோகம் என்ற பெயரால்,
தத்துவம் என்ற பெயரால்,
ஆன்மீகம் என்ற பெயரால்,

கீதை பன்னிப் பன்னித் திரும்பத் திரும்பக் கூறுவதெல்லாம்,

நான்கு வருணப் பாகுபாடுதான்!

உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத கொடுமை இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறது. இந்தக் கொடுமையான ஏற்பாட்டை நான் தான் செய்கிறேன் என்று கூறுபவன் இங்கு கடவுளாகக் கருதப்படுகிறான்.

அதனால் தான் முன் காலத்தில் புத்தரும், பின் காலத்தில் தந்தை பெரியாரும்,

கடவுள், மதம், வேதம், உபநிடதம், புராணம், சாத்திரம், சம்பிரதாயம் அத்தனையும் ஒழிக்கப்பட வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள்.

போதி மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தர் இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களின்

துன்பத்துக்கு ஒரு சிறு கூட்டத்தாரின் ஆசையே காரணம் என்பதை அறிந்தார். அந்த ஆசையை— பேராசையை ஒழிக்க அவர் எல்லா வழிகளிலும் போராடினார்.

வருணாசிரம ஏற்பாடு என்ற பெயரில் கண்ணன் விதைத்த விதை, இன்று பூதாகரமாக வளர்ந்து பதினாயிரம் சாதிகளையும், சாதிக்குள் சாதியாகவும், அவற்றுக்குள் ஏற்றத் தாழ்வுகளாகவும் கிளைவிட்டுக் கொடி விட்டுத் தழைத்து வளர்ந்து விட்டது.

இந்த நாட்டை உருப்படாமல் செய்யும் இந்த ஏற்பாட்டைத் தகர்த்தால் அன்றி நம் மக்கள் சிறிதும் முன்னேற முடியாது என்பது திண்ணம்.

சாதியை எதிர்த்துப் போராடும் அமைப்புகள் ஆயிரக்கணக்கில் நிறுவப்படவேண்டும். இடைவிடாது தொடர்ந்து பணியாற்றினால் அன்றி, கண்ணனால் ஏற்பட்ட இந்தத் தீமையை முற்றிலும் ஒழிக்க முடியாது.

இந்த மண்ணுலகை ஒரு சிலர்க்கு இன்பபுரியாகவும் பெரும்பாலான மக்களுக்கு மீளா நரகமாகவும் ஆக்குவதே கீதை காட்டும் பாதையாக அமைந்துள்ளது. நாடு முன்னேற, நாட்டு மக்கள் முன்னேற நாம் புதுப்பாதை அமைத்தாகவேண்டும்!

இந்த உலகில் உள்ள பொருள்கள் இரு வகையின.

உயிருள்ளவை

உயிர் அற்றவை

உயிர் அற்றவை ஐந்து நிலையின.

அவை நிலம், நீர், தீ, காற்று, வெளி என்பன. இவற்றிற்கு எனச் சில ஆற்றல்கள் இருப்பினும், தன்னறிவுடன் இவை செயல்பட இயலா நிலையில் உள்ளன.

உயிருள்ள பொருள்கள் அனைத்தும் இந்த ஐந்து பொருள்களின் சேர்க்கையால் ஆனவையே.

உயிருள்ள பொருள்களுக்கு அறிவு நிலைகள் ஐந்து.

எல்லா உயிர்களையும் ஓரறிவு முதல் ஐந்து அறிவு வரை உடையன எனப் பிரிப்பர். புல் பூண்டு முதல் பறவை விலங்குகள் வரை இவையடங்கும்.

இவற்றிற்கெல்லாம் மேம்பட்ட பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவைப் பெற்றவன் மனிதன். சிந்தித்தலும், சிந்தித்துச் செயலாற்றுதலும் மனிதனுக்கு மட்டுமே அமைந்த சிறப்பு.

சிந்தனை வளத்தால் மற்ற உயிர்களையும் உயிர் அல்லனவற்றையும் பயன் கொண்டு வாழும் பகுத்தறிவு பெற்றவனே முழுமையான மனிதன்,

மனிதனுடைய சிந்திக்கும் ஆற்றலைத் திசை திருப்பி,

அர்ச்சுனனைப் போன்றவர்களைத் தலையாட்டிப் பொம்மைகளாய் மாற்றித் தன்வயப் படுத்தி, கண்ணனைப் போல் உயர் நிலையில் கடவுள்களாய், விளங்குபவர்கள் மனித குலத்தின் மேம்பாட்டுக்கு முட்டுக் கட்டைகள் ஆவார்கள்.

இவர்கள், ஆண்டான் அடிமை என்ற வேறு பாட்டை நிலைநாட்டவே அன்று முதல் இன்று வரை தொடர்ந்து முயன்று, வெற்றி பெற்று மேனிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

உலகில்
மிகப் பெரும்பாலான உயிர்க் கொலைகள்
மிகப் பெரும்பாலான ஏமாற்று வேலைகள்
மிகப் பெரும்பாலான பொருள் இழப்புகள்

கடவுள் அல்லது கடவுள்களின் பெயராலேயே நடந்து வருகின்றன.

இந்தப் பொல்லாங்குகளிலிருந்து மனிதன் விடுதலை பெறவேண்டுப்.

அதற்கு இந்த மாயைகளிலிருந்து மனிதன் விடுபடவேண்டும்.

அதற்குப் பகுத்தறிவு ஒன்றே சிறந்த வழியாகும்!

# பாவலர் நாரா நாச்சியப்பன் எழுதிய புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1 | நாச்சியப்பன் பாடல்கள் I | 15 00 |
| 2 | நாச்சியப்பன் பாடல்கள் II | 15 00 |
| 3 | மூன்று திங்களில் அச்சுத் தொழில் | 15 00 |
| 4 | புதுமுறை பஞ்சதந்திரக் கதைகள் | 15 00 |
| 5 | ஏழாவது வாசல் | 10 00 |
| 6 | பறவை தந்த பரிசு | 10 00 |
| 7 | மாயத்தை வென்ற மாணவன் | 10 00 |
| 8 | அப்பந் தின்ற முயல் | 10 00 |
| 9 | தாவிப்பாயும் தங்கக் குதிரை | 8 00 |
| 10 | அசோகர் கதைகள் | 16 00 |
| 11 | பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள் | 10 00 |
| 12 | பாசமுள்ள நாய்க்குட்டி | 10 00 |
| 13 | குயில் ஒரு குற்றவாளி | 5 00 |
| 14 | பாடு பாப்பா | 4 00 |
| 15 | நாயகப் பெருமான் | 4 00 |
| 16 | என்ன? ஏன்? எப்படி? | 10 00 |
| 17 | கடவுள் பாட்டு | 5 00 |
| 18 | மன ஊஞ்சல் | 25 00 |
| 19 | ஒரு ஈயின் ஆசை | 8 00 |
| 20 | கீதை காட்டும் பாதை | 20 00 |
| 21 | மதங்கள் ஒரு ஞானப்பார்வை | 10 00 |
| 22 | பர்மாவில் பெரியார் | 8 00 |
| 23 | குருகுலப் போராட்டம் | 10 00 |
| | **பாவேந்தர் பாரதிதாசன் பற்றியவை** | |
| 24 | நான்கு பார்வைகளில் பாரதிதாசன் | 7 00 |
| 25 | குயிலும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் | 5 00 |
| 26 | தேடிவந்த குயில் பாரதிதாசன் | 10 00 |
| 27 | பாரதிதாசன் ஒரு சித்திரகவி | 10 00 |
| | **முத்து நாராயணன் எழுதிய** | |
| 28 | சித்திரச் செந்தமிழ் | 8 00 |


## அன்னை நாகம்மை பதிப்பகம்

2/141 கந்தசாமி நகர்,
பாலவாக்கம், சென்னை 600041
தொலைபேசி : 41 71 41